உதயன்
Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 013 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 23, செவ்வாய்க்கிழமை 09.12.2014

காலநிலை
மழை பெய்வதற்கான சாத்தியம் அதிகம். மாலை வேளை மழை பெய்யக் கூடும்.

# மஹிந்த தோற்பது உறுதி

## இப்படிக் கூறுகின்றார் மைத்திரிபால

யாழ்ப்பாணம், டிசெ. 9
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவி டம் பண பலம் மற்றும் ஆயுத பலம் ஆகியவை மட்டுமே இருக்கின்றது. ஆனால், என்னிடமோ அசைக்க முடியாத மக்கள் பலம் உள்ளது. இந்த பலமே இறுதியில் வெல்லும். இந்த பலத்தால் நாம் ஜனவரி 8 ஆம் திகதியன்று வெற்றி வாகை சூடி நாட்டில் தற்போதிருக்கும் குடும்ப ஆட்சியை விரட்டியடிப் போம். – இவ்வாறு அழுத்தமாகத் தெரிவித்தார் பொது எதிரணி வேட் பாளர் மைத்திரிபால சிறி சேன.
"இன்றிலிருந்து முன்னெடுக்கப்பட வுள்ள பரப்புரைக் கூட்டங்கள் யாவும் அஹிம்சை வழியிலேயே என்னால் முன்னெடுக்கப்படும். இன்று (நேற்று) வேட்புமனுத் தாக் கல் இடம்பெற்றது. இதன் போது அனைத்து அரச ஊடகங்களும் மஹிந்த ராஜபக்ஷவையே பிர தானமாகக் காண்பித்தார்கள்.
அவர் வீட்டிலிருந்து (அலரி மாளி கையிலிருந்து) புறப்பட்டு தேர்தல் ஆணையகத்திற்கு வருகை தந் தது வரை அனைத்தும் நேரலை யாகவே ஒளிபரப்பப்பட்டது. இது தேர்தல் விதிமுறை மீறல் என்பது மட்டுமன்றி ஊடகச் சுதந்திரமும் இல்லை என்பதையே காட்டுகின் றது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.
ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுவை நேற்றுத் தாக்கல் செய்த பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடந்த ஊடகவி யலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"ஜனாதிபதி மஹிந்த தேர்தல் திணைக்களத்திற்கு வந்த போது நிறைய அரச வாகனங்கள் மற் றும் அரச சொத்துக்கள் பயன்படுத் தப்பட்டிருந்தமையைக் காணக்கூடி யதாக இருந்தது. இவ்வாறு, அரச சொத்துக்களைப் பயன்படுத்துவதன் மூலமாகவே இந்தத் தேர்தலில் தோல் வியடையப்போவதை மஹிந்த உறு திப்படுத்தியுள்ளார்.

பக்.26

## பல்கலையில் இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், டிச 9
யாழ்.பல்கலைக் கழகம் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்க லைக் கழகங்களையும் சேர்ந்த விரிவுரையாளர்கள் இன்று செவ்வாய்க்கிழமை முழுவதும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவு ள்ளனர்

பக்.26

## சிக்கியது 140 கிலோ கஞ்சா

நெல்லியடி, டிசெ.9
பருத்தித்துறை கடற்கரைப் பகுதியூடாக மேற்கொள்ளப் படவிருந்த பெரும் கஞ்சா கடத்தலைப் பொலிஸார் முறியடித்துள்ளனர். 140 கிலோகிராமுக்கும் அதிக மான கேரளக் கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ள துடன், அது தொடர்பில் 5 பேரைக்கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதி களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பக்.02

## இன்ரபோல் ஊடாக கேபிக்கு வலைவிரிப்பு

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சூத்திரதாரி என்று கூறப் படும் கேபி என்கிற குமரன் பத்மநாதனை விசாரணை செய்வதற்கு இன்ரபோலின் உதவியை நாடியுள்ளது சி.பி.ஐ.
நீண்டகாலமாக இழுபறி யாகவுள்ள இந்த வழக்கை, இலங்கையில் இருந்து தக வல்களைப் பெற்று விரை வில் விசாரித்து முடிக்க சி.பி.ஐ திட்டமிட்டுள்ளது.

பக்.02

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவ, மாணவியர் திடத்துடன் பரீட்சையை எதிர்கொள்ள
உதயன்
வாழ்த்துகின்றான்.



## பனம் நாற்றுகளை காக்கும் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ். குடாநாட்டில் நடப்பட் டுள்ள பனம் நாற்றுக்க ளைப் பாதுகாக்கும் செயன் முறைத் திட்டம் ஒன்றை பனை அபிவிருத்திச் சபை மேற் கொள்ளவுள்ளது.
இந்தத் திட்டத்தின் கீழ் பொது இடங்களில் நடப்பட்டுள்ள பனம் நாற்றுக்களைச் சுற்ற வும் பாதுகாப்புக் கூடுகள் அமைக்கப்படவுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

பக்.05

## 19 பேர் களத்தில்

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில்
நேற்று வேட்பு மனுத் தாக்கல்





யாழ்ப்பாணம், டிசெ.9
பொது எதிரணி வேட்பாளர் மைத் திரிபாலசிறிசேன, ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ உட்பட 19 பேர் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

பக்.26



## கட்சி தாவல் நேற்று உச்சம்

யாழ்ப்பாணம், டிசெ.9
ஆளுங்கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரே மச்சந்திர, சப்பிரகமுவ மாகாண சபையின் அவைத் தலைவர் ஜய திஸ்ஸ ரணவீர

பக்.26

## தாவினார் திஸ்ஸ



யாழ்ப்பாணம், டிசெ. 9
ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு வெற்றிலை கொடுத்து, நேற்று அவருடன் இணைந்துகொண் டுள்ளார். மைத்திரிபால சிறி சேன வகித்து வந்த சுகாதார அமைச்சுப் பதவி அவருக்கு வழங்கப்பட வுள்ளது. என்று தெரிவிக்கப்படு கின்றது.

பக்.26

## எதிரணி மீது தாக்குதல் தீவிரம்

யாழ்ப்பாணம், டிசெ.9
எதிரணி வேட்பாளருக்கு ஆதரவ ளித்தவர்கள் மீது நேற்று பல்வேறு இடங்களில் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் தாக் குதல்கள் அரசின் ஆதரவாளர் களாலேயே மேற்கொள்ளப்பட் டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்படு கின்றது.

பக்.26

## கை கொடுக்க மறுத்த மைத்திரி



யாழ்ப்பாணம், டிசெ.9
ஜனாதிபதித் தேர்தலுக் கான வேட்பு மனுத் தாக் கல் முடிந்த பின்னர், பொது எதிரணி வேட்பாளர் மைத் திரிபால சிறிசேனவும், ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ வும் பகைமை கொந்த ளிக்க ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர்.

பக்.26

## 'கொண்டு வந்தேன் பொதுச்செயலரை'

### மஹிந்த ராஜபக்ஷ புளகாங்கிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 9
"எமது பொதுச்செயலர் வெளியே சென்றதற்காக, இன்னொரு பொதுச் செயலரை உள்ளே கொண்டு வந்துள்ளேன்'" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் குறிப்பிட்டார். அத்து டன் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை கொண்டு வரு

பக்.26

# 140 கிலோ கஞ்சா பருத்தித்துறையில் சிக்கியது

## 5 பேர் கைது பொலிஸ் தீவிர விசாரணை

நெல்லியடி, டிசெ.9

வடமராட்சி கடற்கரைப் பகுதியூடாக நேற்று நடத்தப்படவிருந்த பெருமளவு கஞ்சா கடத்தும் முயற்சியை பொலிஸார் முறியடித்துள்ளனர். சுமார் 140 கிலோகிராமுக்கும் அதிகமான கஞ்சாவையும் பொலிஸார் மீட்டுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.





இந்தக் கஞ்சா இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எப்.எம்.ஜப்வர் உதயனிடம் தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்கள் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும், கடத்தலுக்குப் பயன்படுத்தியதாகக் கருதப்படும் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் பருத்தித்துறை முதல் வல்வெட்டித்துறவரை சந்தேகத்துக்கு இடமான படகுகளின் நடமாட்டம் காணப்படுகின்றது என்று வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு இராணுவத்தினரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்து வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதிகளில், வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி மீடின் தலைமையிலான பொலிஸ் குழு தீவிர ரோந்து நடவடிக்கையை முடுக்கிவிட்டது. அவர்களை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எப்.எம்.ஜப்வர் வழிநடத்தினார்.

அதிகாலை 3 மணியளவில் சந்தேகத்துக்கு இடமான படகு ஒன்றை பொலிஸ் குழு பொலி கண்டிகடற்கரையில் இனங் கண்டது. அந்தப் படகைச் சோதனையிட்டபோது அதிலிருந்து 100 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா கைப்பற்றப்பட்டது. படகுடன் நின்றிருந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், பருத்தித்துறைக் கடற்கரைப் பகுதியிலும் தேடுதல் தீவிரப்படுத்தப்பட்டது. அதிகாலை 5 மணியளவில் மேலும் நால்வர் பருத்தித்துறைக் கடற்கரைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்

ப 1 விரிவு

னர். அவர்கள் மாதகல் மற்றும் இளவாலைப்பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

குறித்த கஞ்சா இந்தியாவில் இருந்து மீன்பிடி றோலர் ஒன்றில் கொண்டுவரப்பட்டு நடுக்கடலில் படகுகளுக்கு மாற்றப்பட்டுள்ளது என்று விசாரணைகள் மூலம் தெரியவந்தது என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எப்.எம்.ஜப்வர் தெரிவித்தார். அவை எங்கு விநியோகம் செய்யப்படவிருந்தன என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீடின் கூறினார். (ந-109)

# யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபராக வைத்தியலங்கார

## நேற்றுப் பதவியேற்றார்

யாழ்ப்பாணம், டிசெ.9



யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக ரவி வைத்தியலங்கார நேற்றுப் பதவி ஏற்றுக் கொண்டார்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய றொஹான் டயஸ் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே இவர் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக பெறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் நடந்த நிகழ்வில், பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின்னர், மதத்தலைவர்களின் முன்பாக அவர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ந-106)

# 'மெலிந்த' பாண் தயாரித்தோர் சிக்கினர்

யாழ்ப்பாணம், டிச. 9

பாணின் தோற்றத்தைப் பெரிதாக்கி, அவற்றின் நிறையைக் குறைத்து விற்பனை செய்து வந்த 9 பாண் உற்பத்தி நிறுவனங்கள் யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளிடம் சிக்கியுள்ளன. அவற்றின் பாண் உற்பத்தி அனுமதியை இரத்துச் செய்வதற்கு நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒரு இறாத்தல் பாண் ஒன்றின் நிர்ணயிக்கப்பட்ட நிறை 450 கிராமாகும். ஆனால் குறித்த உற்பத்தி நிலையங்கள் 370 கிராம் முதல் 415 கிராம் வரையான நிறை கொண்ட பாணையே தயாரித்து விற்பனை செய்துள்ளன. கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட அதிரடி சோதனை நடவடிக்கையின் போதே இந்தக் குட்டு வெளிப்பட்டுள்ளது. பருத்தித்துறையைச் சேர்ந்த பாண் உற்பத்தி நிலையம் ஒன்றே 370 கிராம் பாணை உற்பத்தி செய்துள்ளது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் இணைப்பாளர் வசந்தசேகரன் இதுகுறித்துக் கூறும்போது,

மாதாந்தம் இது தொடர்பான சோதனை மேற்கொள்ளப்படுகிறது. ஆயினும் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட பெரியளவிலான சோதனையின்போதே நிறை குறைந்த பாணை உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்த 9 பேரும் அகப்பட்டனர். இணுவில், சுன்னாகம், மல்லாகம், வெற்றிலைக்கேணி, மருதங்கேணி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இந்த உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

அவற்றுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 32 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அதேவேளை யாழ்ப்பாணம், கொக்குவில் மற்றும் கொடிகாமம் ஆகிய இடங்களில் உள்ள நிறை குறைந்த பாண் உற்பத்தி நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இதுவரை வழக்குப் பதிவு செய்யாத உற்பத்தி நிலையங்களுக்கு இதுவே இறுதி எச்சரிக்கை. மீண்டுமொரு தடவை அந்த நிலையங்கள் இவ்வாறான தவறைச் செய்வார்களானால், அவர்களது உற்பத்தி அனுமதியை நீதிமன்ற அனுமதியுடன் இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்று அவர் தெரிவித்தார். (ந-4)

# கே.பியை விசாரிக்க இன்ரபோல் உதவி

## இந்திய மத்திய புலனாய்வுத்துறை நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 9

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு இலங்கை அரசு பின்னடித்து வருகின்றது. இந்த நிலையில், இன்ரபோல் ஊடாக கே.பியை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு இந்திய மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ) நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில், முக்கியமான சூத்திரதாரிகளில் ஒருவராக கே.பி. அறிவிக்கப்பட்டிருந்தார். அவர் மலேசியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருந்தாலும், இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவில்லை. அவர் தற்போது இலங்கையில் தங்கியுள்ளார். இந்தப் பின்னணியிலேயே சி.பி.ஐ. இன்ரபோல் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கே.பியை கைது செய்வதற்கு சி.பி.ஐ. ஏற்கனவே இன்ரபோலின் உதவியைக் கோரியிருந்தது. எனினும், இது தொடர்பான நடவடிக்கைகள் நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டிருந்தன. நீண்டகாலமாக இழுபறியாகவுள்ள இந்த வழக்கை, இலங்கையில் இருந்து தகவல்களைப் பெற்று விரைவில் விசாரித்து முடிக்க சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளது.

ப 1 விரிவு

இந்த வழக்கில், இலங்கை அரசிடம் ஒத்துழைப்பு வழங்குமாறு பலமுறை கோரிக்கை விடுத்தோம். தற்போது எமது கோரிக்கைக்கு அழுத்தம் கொடுக்கும்படி இன்ரபோலிடம் கேட்டுள்ளோம் என்று, சி.பி.ஐ.யின் மூத்த அதிகாரி ஒருவர், 'ரைம்ஸ் ஒவ் இந்தியாவிடம்' தெரிவித்துள்ளார்.

சி.பி.ஐ.யால் மேற்கொள்ளப்படுகின்ற, பலநோக்கு கண்காணிப்பு முகவரமைப்பின் விசாரணைகளை முடிப்பதற்கு, அண்மையில் ஒரு ஆண்டு கால அவகாசம் பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒரு முறை இலங்கையில் வைத்து குமரன் பத்மநாதனிடம், பல நோக்கு கண்காணிப்பு முகவர் அமைப்பு அதிகாரபூர்வமற்ற விசாரணைகளை நடத்தியிருந்தது.

ஆனால், தற்போது பலநோக்கு கண்காணிப்பு முகவர் அமைப்பு அவரைத் தடுத்து வைத்து, முறைப்படி விசாரணை நடத்தவுள்ளது. அதிகாரபூர்வமற்ற விசாரணையின் போது, ராஜீவ்காந்தி கொலைச் சதித் திட்டம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கேபி மறுத்திருந்தார். (ந-5)



"நாம் அனைவரும் உண்மையான சுதந்திரக் காற்றை கடந்த ஐந்து வருடங்களாக சுவாசிக்கின்றோம்.
நாளுக்கு நாள் வளர்ந்துவரும் நாட்டின் சமாதானத்தை பூரணமாக அனுபவிக்கிறோம். நம் தாய்நாட்டின் தாய்மார்களின் இதயங்களில் அணைந்துபோன தீயினை மீண்டும் மூட்டிவிட நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்."
பாதுகாப்பான தேசம்
வளமான எதிர்காலம்

# செய்திகள்

## பேஸ்புக்கில் பெண்ணின் படம்: வரணியில் ஒருவர் கைதானார்



நெல்லியடி, டிசெ.9

பெண்ணொருவரின் படங்களை, ஆபாசப் படங்களுடன் இணைத்து பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு பெண்ணுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் வரணி பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அல்வாய் மனோகரா பகுதியை சேர்ந்த 30 வயதை உடைய சந்தேகநபர் ஒருவர் தனது மனைவியின் சகோதரியின் படத்தை ஆபாச படம் ஒன்றுடன் இணைத்து முகப்புத்தகத்தில் வெளியிட்டமை தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் மைத்துனியால் முறைப்பாடு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை பதிவு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் குறித்த சந்தேக நபர் அந்தப் படத்தை குறித்த பெண் திருமணம் செய்யவுள்ள இளைஞருக்கு அனுப்பியிருந்தார் என்றும் சந்தேகநபர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது

இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார் அல்வாய் மனோகரா பகுதியை சேர்ந்த சந்தேகநபரை கடந்த சனிக்கிழமை அவரின் வீட்டில் வைத்து கைது செய்திருந்தனர்.

விசாரணைகளின் பின் குறித்த சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் குமாரசாமி முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ற-109)





யாழ்.போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை வைத்தியசாலை, பருத்தித்துறை வைத்தியசாலை ஆகியவற்றின் இரத்த வங்கிகளில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்துவரும் 40 வயதைக் கடந்த குருதிக் கொடையாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள தாதிகள் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் குருதிக் கொடையாளர்களின் உடலிலுள்ள குளுக்கோஸின் அளவு கொலஸ்ரோலின் அளவு, குருதியமுக்கம் என்பன பரிசோதிக்கப்பட்டன. இதில் நூறுக்கும் மேற்பட்ட குருதி கொடையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ற-288)

## மனித உரிமையை வலியுறுத்தி மாபெரும் பேரணி

### நாளை மன்னாரில் ஏற்பாடு

கொழும்பு, டிசெ.9

சர்வதேசமனிதஉரிமைதினத்தை முன்னிட்டு மனித உரிமை கோட்பாடுகளை வலியுறுத்தி மன்னாரில் மாபெரும் பேரணியும் பொதுக்கூட்டமும் நாளை புதன்கிழமை நடத்தப்படவுள்ளது. மன்னார் சமாதான அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி நடைபெறவுள்ளதாக மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனி மார்க் தெரிவித்தார்.

இந்தப் பேரணி நாளை காலை 9.30 மணியளவில் மன்னார் பஸ் நிலையத்துக்கு அருகில் நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமைகள், பொருளாதார உரிமைகள், கல்வி உரிமைகளுக்காக குரல் கொடுக்க முன்வரும்படி மன்னார் சமாதான அமைப்பு சகல அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூகங்கள், பிரசைகள் குழுக்கள், மனித உரிமைக் காப்பாளர்கள், அனைவரையும் பங்குபற்றி மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்க முன்வருமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

1948ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி ஐ.நா. சபை பிரகடனப்படுத்திய சர்வதேச மனிதஉரிமை பிரகடனம் மனித உரிமை சட்டங்கள் பற்றிய விளக்கங்களும். இதன் போது வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-56)



## தென்னைச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

### மாந்தை கிழக்கு மக்களுக்கு 8 ஆயிரம் தென்னங்கன்றுகள்

வலி.தென்மேற்கு, டிசெ.9

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் தெங்கு செய்கையை ஊக்குவிக்கும் முகமாக 'ஜெய்க்கா' நிறுவனம் 566 குடும்பங்களுக்கு 8 ஆயிரத்து 490 தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக பல ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் அழிக்கப்பட்டன. இதனால் மக்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரிய பாதிப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் தென்னம் செய்கையை மீண்டும் ஊக்குவிக்க முன்வந்துள்ள 'ஜெயக்கா' நிறுவனம் அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், சிவபுரம், வன்னிவிளாங்குளம் ஆகிய நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் 566 குடும்பங்களுக்கு தலா 15 தென்னங்கன்றுகள் வீதம் 8 ஆயிரத்து 490 தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளது.

அம்பாள்புரம் பொதுநோக்கு மண்டபத்தில் கிராம உத்தியோகத்தர் கே.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வில் பாண்டியன்குளம் விவசாயத் திணைக்களப் போதனாசிரியர் எஸ்.சிவகுமார், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கே.கிருஷ்ணமூர்த்தி, ஜெயக்கா நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-115)



## பஸ் தரிப்பிடத்துக்கு மன்னாரில் அடிக்கல்

### வடக்கு போக்குவரத்து அமைச்சர் நட்டார்

மன்னாரில் உள்ள சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, புனித சவேரியார் பெண்கள் கல்லூரி ஆகியமூன்றுபாடசாலைகளுக்கு முன்பாக வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சினால் பஸ்தரிப்பிடங்கள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. வடக்குமாகாணமீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் அடிக்கல்லை நட்டுவைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் செபஸ்தியார் பேராலய உதவி பங்குத்தந்தை, மன்னார் இந்து மத குருமார்களின் தலைவர், அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம், பிரதி நகர முதல்வர் ஜேம்ஸ் ஜேசுதாசன், நகர சபை உறுப்பினர்கள் குமரேஸ், நகுசீன், பிருந்தாவனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் ஜிப்ரி, மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் துரம், கல்லூரிகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்துக்கென 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் இந்த ஒலி பெருக்கிச் சாதனங்களை வழங்கியுள்ளார். (வ-14)

# பனம் நாற்றுகளை பாதுகாக்கும் திட்டம்

## முன்னெடுக்கவுள்ளது பனை அபிவிருத்திச் சபை

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ். குடாநாட்டில் நடுகை செய்யப்பட்ட பனம் நாற்றுக்களைப் பாதுகாக்கும் செயன்முறைத் திட்டம் ஒன்றை பனை அபிவிருத்திச் சபை மேற்கொள்ளவுள்ளதாக சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

"கடந்த ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் குடாநாட்டில் பெரும் எண்ணிக்கையான பனம் விதைகளும் நாற்றுக்களும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

அவை பொது இடங்கள் மற்றும் மக்கள் குடியிருப்பு சுற்றாடல்களிலும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக பொது இடங்களில் நடுகை செய்யப்பட்ட பனம் நாற்றுக்களைப் பாதுகாக்கும் நோக்கில் அவற்றைச் சுற்றி பாதுகாப்புக் கூடுகள் அமைக்கப்படவுள்ளன.

மக்களும் தமது குடியிருப்புக்களில் நடுகை செய்த பனம் நாற்றுக்களை உரிய வகையில் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

பாதுகாப்பற்று இருக்கும் இந்தப் பனம் நாற்றுக்களை கால்நடைகள் தீவனத்துக்குப் பயன்படுத்தலாம்.

கடந்த மாதங்களில் சபையால் நடுகை செய்விக்கப்பட்ட இந்தப் பனம் நாற்றுக்களை உரிய வகையில் பாது காக்கும் திட்டம் ஒன்றை சபை விரைவில் மேற்கொள்ளவுள் ளது"-ஏன்றார். (வ-17)

# திக்கம் சாராயம் தெற்கில் விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ. 9

திக்கம் வடிசாலையில் கையிருப்பில் உள்ள 97 ஆயிரம் லீற்றர் பனஞ்சாராயத்தை உள்ளூர் மற்றும் தென்னிலங்கைப் பகுதிகளில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

திக்கம் வடிசாலையில் பனஞ்சாராயம் விற்பனையாகாது தேங்கி இருந்ததன் காரணமாக பெரும் நட்டத்தில் வடிசாலை இயங்கி வந்தது.

பனை அபிவிருத்திச் சபையால் வடமராட்சிப் பனை தென்னை வளக்கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிக்கு ஒப்பந்த அடிப்படையில் இது வழங்கப்பட்டு இருந்தது. எனினும் ஒப்பந்த காலம் முடிவுற்றமையால் திக்கம் வடிசாலையை பாரம்பரிய கைத்தொழில்கள் அபிவிருத்தி மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அமைச்சு மீளப்பெற்றுக் கொண்டிருந்தது.

தற்போது வடிசாலையை மீள இயக்குவதற்கு ஏதுவாக மீண்டும் அது வடமராட்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கொத்தணி, கையிருப்பில் உள்ள 97 ஆயிரம் லீற்றர் பனஞ் சாராயத்தை விற்பனை செய்யும் வரை திக்கம் வடிசாலை கொத்தணியின் கீழ் இயங்கும்.

வரி அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளதால் சாராயத்தை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 750 மில்லி லீற்றர் போத்தல் சாராயத்தை 630 ரூபாவுக்கும், 375 மில்லி லீற்றர் போத்தல் சாராயத்தை 310 ரூபாவுக்கும், 180 மில்லி லீற்றர் போத்தல் சாராயத்தை 160 ரூபாவுக்கும் விற்பனை செய்ய கொத்தணி தீர்மானித்துள்ளது.

வடமாகாணத்தில் மட்டுமல்லாது தென்னிலங்கைப் பகுதிகளுக்கும் விற்பனைக் கம்பனிகளுடன் ஒப்பந்தம் பேசி சாராயத்தை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கையிருப்பில் உள்ள சாராயத்தை விற்பனை செய்வதற்கு 3 மாத காலம் தேவைப்படுவதால் 2015 ஆம் ஆண்டு முற்பகுதியில் நவீனத்துவமான முறையில் அமைக்கப்பட்ட வடிசாலையை இயங்க வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான புதிய உகரணங் கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட பின்னர் புதிய வடிவில் வடிசாலை செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது -என்றார். (த-14)

# நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் கழிவுகள் அகற்றல் துரித கதியில்

## சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.9

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"தற்போது பிரதேச சபையினர் கழிவுப் பொருள்களை தற்காலிகமாகக் கொட்டுவதற்கு அரியாலைப் பகுதியில் இதற்கான இடம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த தற்காலிக இடத்தில் கழிவுப் பொருள்களை கொட்டி அவற்றை தீயிட்டு கொளுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் சபைக்கு உட்பட்ட பகுதியில் தேங்கி கிடக்கும் கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் முழு வீச்சில் இடம்பெற்று வரு கின்றன.

கழிவுபொருள்களைக் கொட்டுவதற்கு உரிய இடவசதி இன்மையால் அவற்றை அகற்றும் பணிகள் முன்னர் பாதிக்கப்பட்டிருந்தன.

எனினும் மக்கள் வீதியோரம் தேவையற்ற விதத்தில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதைத் தவிர்க்க வேண்டும். இயன்றளவுக்கு அவர்கள் தமது வீட்டு வளவுகளில் அவற்றைச் சேமித்து தீயிட்டு கொளுத்துவதே சிறந்தது.

குறிப்பாக உக்கக்கூடிய கழிவுப் பொருள்கள் மற்றும் சமையலறைக் கழிவுகள் போன்றவற்றை மக்கள் பொதி செய்து வீதியோரம் வைக்க வேண்டும். உக்கக் கூடிய கழிவுகளை சபை சேமித்து அவற்றைப் பசளையாக்கும் திட்டத்துக்கு பயன்படுத்தியும் வருகின்றது"என்றார். (வ-17)

# குடிதண்ணீர் கிணறுகள் கரணவாயில் புனரமைப்பு

கரணவாய், டிசெ.9

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 6 குடிதண்ணீர் கிணறுகள் மற்றும் கால்நடைகளுக்கான நீர்த்தொட்டிகள் என்பவற்றை புனரமைக்கும் நடவடிக்கைகளை கரவெட்டிப் பிரதேச செயலகம் ஆரம்பித்துள்ளது. அதற்கான நிதியை இடர் முகாமைத்துவ அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள குடிதண்ணீர் கிணறுகள் நீண்ட காலமாக புனரமைக்கப்படாது காணப்படுவதால் அவற்றுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. பொது மக்கள் அந்தக் கிணறுகளைப் பயன் படுத்த முடியாத நிலை காணப்படுவதுடன் தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய சூழ்நிலையும் நிலவுகிறது. இதையடுத்து முதற் கட்டமாக மக்கள் அதிகம் பயன்படுத்தும் குடிதண்ணீர்க் கிணறுகளைத் தெரிவு செய்து அவற்றைப் புனரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் கரணவாய் கிழக்கு, கரணவாய் மேற்கு, இமையாணன், கரணவாய் வடக்கு, நெல்லியடி கிழக்கு மற்றும் உடுப்பிட்டி வடக்கு ஆகிய பகுதிகளில் தலா ஒரு கிணறு வீதமும், கப்பூது மற்றும் துன்னாலை ஆகிய பகுதிகளில் தலா ஒரு கால்நடை குடிதண்ணீர்த் தொட்டியும் புனரமைக்கப்படவுள் ளன.

இதற்கு இடர் முகாமைத்துவ அமைச்சின் மூலம் கிணறுகளுக்கு தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதமும் கால்நடைகளுக்கு நீர்தொட்டி அமைப்பதற்கு தலா ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா வீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (ற-108)

# வடக்கு, கிழக்கில் தண்டுவடம் பாதித்தோருடன் கலந்துரையாடல்

கிளிநொச்சி, டிசெ.9

வடக்கு, கிழக்கில் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவி தொடர்பிலான கலந்துரையாடல் கிளிநொச்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது.

கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு அதன் பணிப்பாளரும் கிளிநொச்சி மாவட்ட மருத்துவ அதிகாரி எஸ்.சத்தியமூர்த்தி தலைமை தாங் கினார்.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உலக மருத்துவ சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி முரளி கலந்து கொண்டார்.



உலக மருத்துவ சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் தண்டுவடம் பாதிக்கப்பட்ட 30 பேருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனிடையே தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் பேணும் நோக்கில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட சூரிய உதயம் அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவும் அன்றையதினம் இடம் பெற்றது. குறித்த அமைப்பின் தலைவராக பிரபாகரனும், செயலாளராக மன்னார் பெனிலும் தெரிவு செய்யப்பட்டனர்.

தண்டுவடம் பாதிப்புக்குள்ளாகி சூரிய உதயம் அமைப்புடன் தொடர்புகொள்ளாதவர்களை தொடர்பு கொள்ளுமாறு அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. தண்டுவடம் பாதிக்கப்பட்ட நூறு வரையானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ)

# செய்திகள்




பாலர் கல்விக் கழகத்தின் 10 பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்திய 49 ஆவது வருடாந்த ஞானக் குழந்தைகள் கலைவிழா கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில்இடம்பெற்றது. பாலர் கல்வி கழகத் தலைவரும், அகில இலங்கை சமாதான நீதிவானுமான எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு குறித்த முன்பள்ளிகளில் கல்வி கற்று தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், தற்போது குறித்த முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இடையே இடம்பெற்ற குழுநிலைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.(வ)

## பளைப் பகுதியில் 3 கிராமங்களுக்கு மின் விநியோகம்

பளை, டிசெ. 9

பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 3 கிராமங்களுக்கு கடந்த சனிக்கிழமை மின்விநியோகத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இயக்கச்சி விநாயகபுரம், தர்மக்கேணி, அல்லிப்பளை வரகு காடு ஆகிய மூன்று கிராமங்களுக்கான மின் விநியோகத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த 3 கிராமங்களிலும் புதிதாக வைக்கப்பட்டிருந்த மின் மாற்றிகளின் ஆளிகளை சிறுவர்கள் மூலம் அழுத்தச் செய்து ஆரம்பித்து வைத்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார். (வ-9)

## வேலைவாய்ப்பற்ற 36 பேருக்கு உபகரணம் வழங்கியது 'இதம்'

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்பற்றோருக்கு வேலை வாய்ப்பை வழங்கும் நோக்கில் 'இதம்' நிறுவனம் பலருக்கு பயிற்சி வழங்கி, அவர்களில் 36 பேருக்கு தொழில் முன்னெடுப்புக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன. கொக்குவிலில் உள்ள 'இதம்' நிறுவன அலுவலகத்தில் அண்மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த நிறுவனப் பணியாளர் ஒருவர்:

"யாழ்.மாவட்டத்தில் பல இடங்களையும் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டு விவசாயம், கோழி வளர்ப்பு, மெழுகுவர்த்தி உற்பத்தி, கைவினைப்பயிற்சி ஆகிய பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டன. பயிற்சி நிறைவில் அவர்களுக்கென தொழில் முயற்சியாக சிறு உதவியும் வழங்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய நிதியில் சுமார் 18 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன" என்றார். (வ-4)

# மனிதாபிமான உதவிகள் வழங்க இந்தியா தயார்

### யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக பிரதித் துணைத்தூதர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.9

மனிதாபிமானஉதவிகளைவழங்குவதற்கு இந்தியா எப்போதும் தயாராகவுள்ளது. அதேபோன்று இந்தியாவிலுலுள்ள மக்களும் உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர் என்று யாழ்ப்பாணத்தில்உள்ள இந்தியத்துணைத்தூதரகத்தின் பிரதித் துணைத் தூதர் தெட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் சர்வதேச விசேட தேவைக்குரியோர்தினநிகழ்வுகடந்தசனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மாற்றுவலுவுடையவர்களையும் எங்களில் ஒருவராக நினைத்து அவர்களது உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுத்து சம அந்தஸ்து அவர்களுக்குவழங்கப்படவேண்டும். அவர்களை வேறு கோணத்தில் பார்த்து பரிதாபப்படுவதை நிறுத்த வேண்டும். இதேவேளை இவ்வாறானோருக்கான மனிதாபிமான உதவிகளை இந்தியா எப்போதும் வழங்கத் தயாராகவுள்ளது"-என்றார்.



நிகழ்வில் உரை நிகழ்த்திய வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தெரிவித்ததாவது:-

மாற்றுவலுவுடையவர்கள் தங்களுக்குள் இருக்கும் தாழ்வு மனப்பான்மையைப் போக்கி வாழ்க்கையில் உயர்வடைவதற்கு அவர்களுக்கு போதுமான கல்வி அறிவு அவசியமாகும். என்ன மாற்றங்களைக் கொண்டுவந்தால்வாழ்க்கையை மேம்படுத்த முடியும் என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும். அத்துடன் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இதை விட வேலைத் தளங்களில் மாற்றுத்திறனாளி களுக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்"என்றார். தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளது கலை நிகழ்வுகளும்மாணவர்களுக்குப்பரிசில் வழங்கலும்இடம்பெற்றன. (வ-14)

## ரயில் நிலைய வளாகத்தில் நிறைந்துள்ள கழிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.9

யாழ். ரயில் நிலையத்தை அழகுபடுத்தும் வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்க மறுபுறம் அங்கே சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்தும் வகையில் கழிவு பொருள்களும் ரயில் நிலையத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள மதிலின் அருகாமையில் நிறைந்து காணப்படுகின்றன.

குவிந்து கிடக்கும் குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் ரயில் நிலையத்துக்கு அண்மையில் உள்ள கழிவுகள் மற்றும் ஒழுங்கைகளிலுள்ள கழிவுகள் என்பவற்றை காகங்கள் தூக்கிச் சென்று வீதிகளில் போடுவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதேவேளை ஆங்காங்கே வீதிகளில் காணப்படும் கழிவுகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார். அதேசமயம் அனேகமான வீதிகளில் குப்பைகள் நிறைந்து கிடக்கக் காணப்படுவதுடன் தினமும் புதிது புதிதாக மேலும் பல இடங்களில் பொதுமக்கள் அவற்றை வீசி விடுவதையும் காண முடிகிறது. (வ-7)

# மழையால் பாதித்த வீடுகளை புனரமைக்க நிதியுதவி

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் மழையால் பாதிக்கப்பட்ட சுமார் 29 குடும்பங்களுக்கு 14 லட்சத்து 50ஆயிரம் ரூபா நிதியை இடர் முகாமைத்துவ அமைச்சு புனரமைப்பு நிதிக்காக ஒதுக்கியுள்ளதாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் பெய்த மழை காரணமாக கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் சுமார் 29 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன. அதுதொடர்பாக இடர் முகாமைத்துவ அமைச்சிடம் புனரமைப்புக்கான நிதி கோரப்பட்டிருந்தது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. அவை உரியவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்தார். இதில் கரவெட்டி இராஜ கிராமம் பகுதியில் 14 வீடுகளுக்கும், கரவெட்டி கிழக்கில் 11 வீடுகளுக்கும் வல்வெட்டி மத்தி, கரணவாய் மேற்கு, உடுப்பிட்டி மற்றும் கரணவாய் ஆகிய பகுதிகளில் தலா ஒரு வீட்டுக்குமாக சுமார் 29வீடுகளுக்கு நிதி கிடைத்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் சுமார் 34 வீடுகள் முழுமையாகவும்-270 வீடுகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய புனரமைப்பு நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-108)

# அம்மாடியோவ்!

இவ்வளவு
போட்டிகளும்
பரிசுகளும்
எமக்கா?



| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30

அகவையில்

## உதயன்

**தமிழ் வளர்ப்போம்
தமிழால்
இணைவோம்!**

# மாணவர்களே!

## சிறுகதைப் போட்டிக்கு தயாரா நீங்கள்?

நீங்கள் தரம் 10, 11, 12, 13 வகுப்பில் கற்பவர்களாயின்
சிறுகதை ஒன்றினை ஆக்கி,
உங்கள் ஆசிரியர் ஒருவரின் வழிகாட்டலுடன், அதிபர் ஊடாக உறுதிப்படுத்தி

30ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு, 2015 பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் சிறுகதைகளை அனுப்பி வையுங்கள்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் தலா 10 சிறுகதைகள், வடக்கு மாகாண மட்டத்தில், பிரபல சிறுகதை எழுத்தாளர்களால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, சான்றிதழ்களும், பெறுமதியான பரிசுகளும் வழங்கப்படும். வடக்கு மாகாண பாடசாலைகளில் தரம் 10, 11, 12, 13 இல் கற்கும் மாணவர்கள் இந்தத் தேர்வில் பங்கு கொள்ளலாம்.

உதயன் முப்பதாவது ஆண்டுத் தேர்வுகளில் பங்கு கொள்ள முத்திரை பதிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி, உங்கள் சிறுகதையை இணைத்து அனுப்புங்கள். விண்ணப்பப் படிவங்கள் எங்கள் உதயன் நாளிதழில் வெளிவரும்.

சிறுகதைகள் 'ஏ 4' தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். (தாளின் ஒரு பக்கத்தை மட்டும் பயன்படுத்தி மறுபக்கம் வெறுமையாக விடப்பட வேண்டும்) கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம். சிறுகதையானது, மாண்வர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் வெற்றியாளர்கள் தேவைப்படுமிடத்து மேலும் எழுத்துத் தேர்வு ஒன்றுக்குச் சமுகமளிக்கத் தயாராக இருக்க வேண்டும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கும், சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்படும்.

ஏனைய 07 வெற்றியாளர்களுக்கு மாவட்ட மட்டச் சான்றிதழ் வழங்கப்பட்டு அந்த ஆக்கங்கள் மாகாண மட்டத் தேர்வுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாகாண மட்டத்தில் மூன்று இடங்களைப் பெறுகின்ற வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் ஏனைய 07 வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**எங்கே?! உங்கள் சாதனையை நிலைநாட்ட இன்றே சிந்தனையில் மூழ்குங்கள்!
சிந்தனைக்கு வரி வடிவம் கொடுங்கள்! அவற்றை எமக்கு அனுப்பி வையுங்கள்!**

ஆக்கங்களில் உங்கள் பெயரோ, பாடசாலையின் பெயரோ இடம்பெறாது பார்த்துக்கொள்ளுங்கள். அவற்றை விண்ணப்பப் படிவத்தில் நிரப்பி, உங்கள் ஆக்கங்களுடன் விண்ணப்பப்படிவத்தை இணைக்க மறந்து விடாதீர்கள். ஓர் ஆக்கத்துக்கு மேலும் பங்குகொள்வதாயின் ஒவ்வொரு ஆக்கத்துடனும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்தை இணைத்தல் அவசியம்.

2015 புத்தாண்டுப் பிறப்பன்று வெற்றியாளர்களது பெயரும், பாடசாலையும் உதயன் நாளிதழில் இடம்பெறும். வழிகாட்டும் ஆசிரியர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் காத்திருக்கின்றன.

### உதயன் 30ஆவது ஆண்டு
### ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றை கீறி வெட்டி விடவும்)

பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A – பிரிவு / தரம் 6, 7, 8, 9 B – பிரிவு / தரம் 3, 4, 5 C – பிரிவு
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றை கீறி விடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:–
செல்வன்/ செல்வி ................................................

சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியத் தலைப்பு:
................................................

கற்கும் பாடசாலை: ..........................
தரம்: ....................
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..........................
ஆசிரியரின் பாடத்துறை: ..........................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் .............. இல், கல்வி கற்கும் செல்வன்// செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனை பயன்பாட்டுக்கு

## உதயன்

பத்திரிகையுடன்
நாளாந்தம்
இணைந்திருங்கள்!

# கருத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிறுபான்மை மக்களை ஒதுக்கிவிட முடியுமா?

பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்தவர் கூறுகிறார் சிறுபான்மை இனத்தவர்களின் ஆதரவை தாங்கள் எதிர்பார்த்திருக்க வில்லையென்று.


அதேசயம் தமிழ் தினசரிகள் பலவற்றின் முகப்பு பக்கங்களில் வடக்குக்கு யாழ்தேவி ரயில் வருகையை ஆரம்பித்துவைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முழுஅளவிலான நிழல் படமும், யாழ்தேவி ரயிலின் முகப்பும் "வரலாற்று சிறப்பு மிக்க இந்த நாள் ஞாபகம் உள்ளதா?" என்ற கேள்வி தலைப்புடன் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிக்கும் படியும் கேட்காமல் கேட்கப்பட்டிருந்தது. நெற்றியில் சந்தன குங்கும அலங்காரத்துடன் முகமெல்லாம் புன்னகைப் பூரிப்புடன் ராஜபக்ஷ காணப்படுகின்றார். அருகில் பாதுகாப்பான தேசம் வளமான எதிர்காலம் என்று வாசகமும் காணப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதில்லையென்று அரச தரப்பினர் ஏற்கனவே முடிவெடுத்திருப்பதனால் அவர்கள் மூலம் தமிழ் மக்களை நாடும் நோக்கமும் அரச தரப்புக்கு இல்லை. அதேநேரம் எதிர்த்தரப்பான புதிய ஜனநாயக முன்னணியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருப்பதாகவும் எந்தவித ஆதாரமுமின்றி குற்றஞ்சாட்டு கின்ற அரசுத் தரப்பு முக்கிய புள்ளிகள் அதனைப் பகிரங்கப்படுத்தும் படியும் கூக்குரல் இடுகின்றனர்.

சிறுபான்மைக் கட்சியினர் தாங்கள் யாரை ஆதரிப்பார்கள் என்பதை இன்னமும் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. முஸ்லிம் தரப்பிலான கட்சிகள் அரசுதரப்புடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருகின்றன. சமீபகாலத்தில் நடந்து முடிந்த ஊவாமாகாணசபை தேர்தலின் போது முஸ்லிம் கட்சித் தலைவர்கள் எடுத் திருந்த முடிவை அடிமட்ட முஸ்லிம் வாக்காளப் பெருமக்கள் தவிடுபொடியாக் கியிருந்தார்கள். அதே தவறை இந்தத் தேர்தலிலும் முஸ்லிம் தலைவர்கள் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் அடிமட்ட மக்கள் உயர்நிலை அரசியல் தலைவர்களின் சுயநல நோக்கங்களுக்கு உடந்தையாக இருக்க முடியாது என்பதை ஏற்கனவே வெளிப்படுத்தியிருப்பதே. எனவே அந்த அடிமட்ட மக்களின் நியாயபூர்வமான குறைபாடுகளை தீர்த்துவைப்பதில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் காட்டக்கூடிய சாணக்கியத்தைப் பொறுத்தே அந்த மக்கள் ஆதரவு அமையும் என்று சொல்லத் தேவையில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்த வரை அவர்கள் பொறுத்திருந்து பார்க்கும் நிலையைக் கடைப்பிடிப்பதாகத் தெரிகிறது. தமிழர் விடயத்தில் ஆளுந்தரப்பினரின் நிலைப்பாடு ஏற்கனவே உள்ளங்கை நெல்லிக்கனி என்றாலும் அவர்களின் தேர்தல் அறிக்கையில் புதிய கொள்கை ஏதும் வெளிப்படுத்தப்படுமா என்பது தெரியவில்லை. புதிய ஜனநாயக முன்னணியினர் தமிழ்த் தரப்பினரின் ஆதரவை வெளிப்படையாகவே கோரியுள்ளனர். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படுவது தேசிய நல்லாட்சிக்கு முக்கிய தேவையென்பதை கோட்டை ரஜமகா விஹாரை பிரதம குருவும் எதிரணி முகாமில் முக்கிய பிர முகருமான மாதுளுவாவே சோபித தேரர் குறிப்பிட்டிருக்கிறார். எதிரணி வேட்பாளர் சிறி சேனவின் தேர்தல் அறிக்கையை தமிழ்த் தரப்பி னர் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் என்பதும் தெரிகின்றது.

எதுவானாலும் நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகளே நாட்டின் எதிர்காலத்தை - சுபீட்சத்தை - அரசியல் உறுதிப்பாட்டை நிர்ணயிப்பதாக இருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை



# ஜனாதிபதித் தேர்தலும் ஈழத்தமிழரும்

மருத்துவர்
சி.யமுனாநந்தா.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல், ஈழத் தமிழரின் அரசியல் தளத்தில் முக்கியமானது. இங்கு போட்டியிடும் இரு வேட்பாளர்களும் இனவாத சிங்கள மேலாதிக்கத்தையே மக்களிடம் எடுத் துச் செல்கின்றனர். எதிர்க்கட்சி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களுக்கு விமோசனமான தீர்வை முன்வைக்கவில்லை. மாறாக சிங்கள பௌத்த தீவிரவாதத்துடன் அதாவது ஜாதிக ஹெல உறுமய உடன் கூட்டு வைத்து உள்ளார். இது இலங்கை அரசியல் என்பது சிங்கள பௌத்த தேசியவாதம் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இன்று பெரும்பான்மை வாக்குப்பலத்தில் நிறைவேற்று அதிகாரத்தைப் பெற்று அதனைத் தக்க வைக்கும் உபாயத்துக்காக இனவாதத்தை காலத்துக்குக் காலம் தக்க வைப்பதே சிங்கள அரசியல் வாதிகளின் வழமை. ஒவ்வொரு தடவையும் ஆட் சிக்கு வரும் ஜனாதிபதிகளால் தமிழ் மக்கள் அதிக துன்பத்தை அனுபவித்தனர். இதனை ஜே.ஆர், பிரேமா, சந்திரிகா, மஹிந்தா வரிசையில் காணலாம்.

தமிழ் மக்களுக்கு மஹிந்த அரசினால் அதி உச்ச இன்னல் ஏற்பட்டது. ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் அது உலகுக்கு ஒரு ஜனநாயக மாற்றம் போல் தென்படும். தென்னிலங்கை சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபடும் மேற்கு நாடுகளதும் இந்தியாவினதும் விருப்பமும் இதுவே. ஆனால் ஈழத் தமிழர்களுக்கான நீதி பின்னோக்கித் தள்ளப்படும். ஈழத் தமிழர்கள் தமது அரசியல் தேவைகளை ஐந்து அம்சக் கோரிக்கைகளாக முன்வைக்கலாம். அதுவே சிறந்த ஜனநாயகப் பண்பாகும்.

**அவையாவன:**

1.சிறையில் உள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படல் வேண்டும்.

2.வடக்கு -கிழக்கு இணைந்த சுயாட்சி அலகு வழங்கப்படல் வேண்டும்.

3.2008-2009 அழிவுகளுக்கு நீதி வழங்கப்படல் வேண்டும்.

தமிழ் மக்களுக்கு மஹிந்த அரசினால் அதி உச்ச இன்னல் ஏற்பட்டது. ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் அது உலகுக்கு ஒரு ஜனநாயக மாற்றம் போல் தென்படும். தென்னிலங்கை சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபடும் மேற்கு நாடுகளதும் இந்தியாவினதும் விருப்பமும் இதுவே.

4.வடகிழக்கில் உள்ள இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்களமயமாதல் விலக்கப்படல் வேண்டும்.

5.முஸ்லிம்களுக்கும், மலையகத் தமிழ் மக்களுக்கும் நிர்வாக அலகுகள் உருவாக்கப்படல் வேண்டும். இதனை இரண்டு பிரதான வேட்பாளர்களிடமும் கோர வேண்டிய கடமை தமிழ் மக்களுக்கு உள்ளது. இலங்கையில் உண்மையான அமைதி ஏற்பட மேற்கூறிய 5 கோரிக்கைகளுக்கும் நீதியான தீர்வு வழங்கப்படும்.

தமிழர்களது உரிமைப் போராட்டம் ஜனநாயக ரீதியில் தொடர இத்தகைய கோரிக்கைகள் இன்றியமையாதவை ஆகும்.

இலங்கையில் சிங்கள அரசியல்வாதிகள் அரசியல் மாற்றத்தை விரும்புகின்றனர். சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் அரசியல் மாற்றத்தை விரும்புகின்றனர். சர்வதேச ரீதியில் இந்தியாவும் மேற்குலகும் அரசியல் மாற்றத்தை விரும்புகின்றன. ஆனால் ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் அரசியல் மாற்றம் தங்களுக்கு மேலும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதனையே உணர்கின்றனர். ஏனெனில் தமிழ் மக்கள் அதி உச்ச அடக்குமுறையிலேயே வாழ்கின்றனர். இதைவிட உச்ச அடக்கு முறையை இனிமேல் எதிர்கொள்ள வேண்டிய நிலை இல்லை. எனவே தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தமது குறைந்த பட்சக் கோரிக்கையாக சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை முன்வைக்கலாம்.

இந்தத் தேர்தலில் இரு பிரதான வேட்பாளர்களும் சுமார் 45 வீத வாக்குகளைப் பெறக்கூடிய சூழல் உள்ளது. இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கக் கூடியதாக அமையும்.

தி.அமுதன்

# தூக்கி எறியப்பட்ட செங்கோல்

## கடந்த அமர்வின் நிகழ்வுகள் குறித்த தொடர்ச்சி.....

ஆளுங்கட்சி உறுப்பினர் ரவிகரனின் பிரேரணையுடன் அமர்வு தொடங்கியது. கொஞ்சம் அமைதியாக அமர்வு தொடங்கினாலும் போகப் போக சூடேறியது. முல்லைத் தீவில் வனத்திணைக் களப் பிரிவினர் அடாத்தாக மக்களின் காணியை பட்டப் பகலில் கொள்ளையடிக்கின்றனர் என்று தொடங்கிய ரவிகரன், வழமை போன்று ஆதாரங்களுடன் விடயங்களைச் சமர்ப்பித்தார்.

ஒரு விடயத்தில் தொடங்கி இன்னொரு விடயத்துக்கு தாவும் வடக்கு மாகாணசபையினர் நேற்றும் அவ்வாறு செய்தனர். வனத்திணைக்களத்தில் தொடங்கி வெலிஓயாவுக்குச் சென்றனர். இதன் போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக, வெலி ஓயாவில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் சகோத ரிக்கு காணி வழங்கியமை பிழை என்றும், வடக்கு மாகாணத்தைச் சாராத எவருக்கும் காணி வழங்கக்கூடாது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்கனவே பிளவுபட்டு விட்டது. இவரும் கட்சி மாறி விட்டாரோ என்று கூட்டமைப்பு உறுப்பினர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டே, அவர் தெரிவித்த கருத்துக்கு ஆதரவு தெரிவித்து மேசையில் தட்டினர். வழமை போன்று சிவாஜிலிங்கம், 'காணி அமைச்சர் கண்ணீர் விட்டழுதிருந்தார். ஜனாதிபதி சொல் கேட்கின்றார் இல்லை என்று தெரிவித்திருந்தார். எங்கள் மக்கள் விட்ட கண்ணீர்தான் அவர் கண்ணீர் விடக் காரணம். நீங்கள் செய்த அநியாயம் ஒரு போதும் உங்களைச் சும்மா விடாது' என்று கர்ச்சித்தார்.

இதன்போது சபாபீடத்திலிருந்த அவைத் தலைவர், சிவாஜிலிங்கத்தைப் பார்த்து சைகை செய்தார். சுறா படத்தில், பாகவதர் பாடும் போது உச்சஸ்தாயியில் பாடினால் இதயம் வெடித்து விடும் என்று வடிவேல் சைகையால் சொன்னதைப் போல அவைத் தலைவரும் சைகையைக் காட்டினார். சில தினங்களுக்கு முன்னர்தான், சிவாஜிலிங்கம் இருதய சத்திர சிகிச்சை செய்து விட்டு வந்தவர் என்பதால், இந்தச் சைகையைக் காட்டினாரோ தெரியவில்லை.

சுன்னாகம் கழிவு ஒயில் தொடர்பில் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தார். இதன் போது உரையாற்றிய கஜதீபன் தன்னை இளைஞன் என்று விழித்துக் கொண்டு தொடங்கினார். விவசாய அமைச்சர், 'நீங்கள் இளைஞரோ' என்று நக்கலாக கேட்க, உங்களை விட 30 வயது எனக்கு குறைய அதால நான் இளைஞர் என்று சொல்லி விட்டு அடுத்ததாக, திருமணமாகாத இளைஞன் என்று தனது பரிதாப நிலைமையையும் சொன்னார்.

கழிவு ஒயிலால் மலட்டுத்தன்மை வரும் என்று சொல்வதால், எங்கள் பகுதி இளைஞர்கள் பயப்படுகின்றார்கள் என்று அவர் சொல்ல, அவைத் தலைவர், அப்ப இனி பொம்பிளை தந்த மாதிரித்தான் என்று நக்கலாகச் சொல்ல சபை கலகலப்பாகியது. எப்படியாவது அங்கே பிள்ளைகள் பிறந்தால் (அது எப்படி என்று கஜதீபன் சொல்லவில்லை) அவர்கள் அங்கவீனர்களாக இருப்பார்கள் என்று பிரச்சினையின் தீவிரத் தன்மையை விளக்கினார்.

மேற்படி பிரதேச குடிதண்ணீர் தொடர்பில் ஆய்வு செய்து அது பாவனைக்கு உகந்தது அல்ல என்று கண்டறியப்பட்ட அறிக்கை, அதிகாரிகள் கையொப்பம் இடாமல் இன்னமும் பூட்டி வைக்கப்பட்டிருப்பதாக ஆளுங்கட்சி உறுப்பினர் சிவமோகன் குண்டைத் தூக்கிப் போட்டார். எல்லா விவாதத்திலும் மூக்கை நுழைக்கும் எதிர்கட்சித் தலைவர் இதன் போதும் பங்கெடுத்தார்.

இண்டைக்கு சிவாஜி ஏன் கதைக்காமல் இருக்கின்றார் என்று அவரும் வம்புக்கு இழுத்தார். அவர் கதைக்காமல் இருப்பதால் தனக்கு உற்சாகமில்லாமல் இருக்கின்றது என்று சிரித்துக் கொண்டே சொன்னார். இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர் சுகிர்தன், 'சிவாஜி அண்ணையின்ர மொழியில சொன்னால் மின் பிறப்பாக்கி நிலையத்தை மூட வேணும்; இல்லாட்டி மூட வைக்க வேணும்' என்றார். அவருக்கு கொப்பியடித்தே பழகி விட்டது.

சுன்னாகம் மின்பிறப்பாக்கி நிலையப் பிரச்சினை தொடர்பில் முதலமைச்சர் நிதானமான கருத்துக்களை வெளியிட்டார். அது தொடர்பில் நடவடிக்கை இடம்பெறுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இறுதியிலேயே சபையில் பெரும் களேபரம் வெடித்தது. ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள்ளேயே முஷ்டியை முறுக்கிக் கொண்டு நின்றனர். அந்தளவு தூரத்துக்கு அதிரடியான பிரச்சினையை சிவாஜிலிங்கம் கிளப்பி விட்டார். ஆறு மாத காலமாக தனது பிரேரணை இழுத்தடிக்கப்படுகின்றது என்பதைச் சொன்னதுடன், இனப்படுகொலை தொடர்பான தனது பிரேரணை ஏற்றுக் கொள்ளாமைக்கான காரணத்தையும் கேட்டார்.

இதன் போது அவைத் தலைவர், இதனை நான் ஏதோ தடுக்கின்ற மாதிரி கதையைச் சொல்கின்றீர்கள் என்று சொல்லிவிட்டு, கூட்டமைப்பின் தலைமை அறிவித்த நிலைப்பாட்டை உங்களுக்குத் தெரிவித்து விட்டேன் தானே என்று சொன்னார். இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் வழமை போன்று இங்கு கட்சி நிலைப்பாட்டைக் கதைக்க வேண்டாம் என்றார்.



இதன் பின்னர் சபையினர் ஏற்றுக் கொண்டால் நீங்கள் உங்கள் பிரேரணையைச் சமர்ப்பியுங்கள் என்று சொல்ல, சிவாஜிலிங்கம், சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல சபையில் மூன்றாவது தடவையாகவும் தனது பிரேரணையை வாசித்தார்.

இதனை உடனடி யாகவே ரவிகரன் வழிமொழிந்து விட்டார். முதலமைச்சரும் உடனடியாகவே எழுந்து நிராகரித்தும் விட்டார்.

இதன் பின்னரே மோதல் கருக்கட்டத் தொடங்கியது. தற்போது இந்தப் பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பது பொருத்தமல்ல என்று குறிப்பிட்ட முதலமைச்சர், ஜனாதிபதித் தேர்தல் தருணத்தில் மஹிந்தவுக்கு இது வாய்ப்பாகி விடும் என்று விளக்கினார். அத்துடன் இதனை ஆதாரங்களுடன் திருத்தம் செய்து ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் எடுக்கலாம் என்றார். இதன்போது ஆளுங் கட்சி உறுப்பினர் அனந்திசசிதரன், உரையை வாசித்தார். அதன் பின்னர், ஆளுங்கட்சி உறுப்பினர் சித்தார்த்தன், சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவாக முதலமைச்சரை மறைமுகமாகச் சாடி உரையாற்றினார்.

1983 ஆம் ஆண்டே இங்கு நடந்தது இனப்படுகொலைதான் என்று இந்தியா சுட்டிக்காட்டியதை சித்தார்த்தன் தெரிவித்ததும், சிவாஜிலிங்கம் அதனை ஆதாரமாக உள்ளடக்கி பிரேரணையை மாற்றியமைப்பதாகத் தெரிவித்தார். இதன்போது, எப்போவதாவது இருந்துவிட்டுக் கருத்து வெளியிடும் எதிர்க்கட்சி உறுப்பினர் தர்மபாலவும் அன்று வாய் திறந்தார். சூடான விவாதத்தில், அவரது கதை சிரிப்பூட்டுவதாக இருந்தது. நாங்கள்தான் எப்போதும் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றோம். எங்கள் எதிர்காலச் சந்ததியாவது நல்லாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அவர் சிங்களத்தில் பேசுவது தனக்கு கேட்கவில்லை என்று ஆளுங்கட்சி உறுப்பினர் லிங்கநாதன் குறிப்பிட்டார். அப்போது அவைத் தலைவர், நீங்கள்தான் நல்லாய்த் தமிழ் கதைப்பியளே, தமிழில் பேசுமாறு சிங்கள உறுப்பினரைக் கேட்க, அவரும் தமிழில் உரையாற்றினார் "கருமந்திரிதுமா" என்று தொடங்கியவர் பின்பு தமிழில் உறைப்பாகக் கொடுத்தார். ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கத்தைப் பார்த்து, 'நீங்கள் நல்லாக் கத்துங்கோ. கத்தினா எங்கட ஜனாதிபதிக்கு அங்க வாக்கு விழும்' என்றார்.

இதன் போது நியமன உறுப்பினர் அஸ்மின், செனவிரட்ண நித்திரையில் இருந்து எழும்பிக் கதைக்கின்றார் என்று தொடங்கி, சிவாஜிலிங்கத்தின் பிரேரணை ஐ.நா விசாரணையைப் பல வீனப்படுத்தும் என்ற பல்லவியையே பாடி முடித்தார். இதன் போது எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், ஏதோ சிவாஜிலிங்கத்துக்காகப் பரிதாபப்படுபவர் போல, இந்தப் பிரேரணை எவ்வளவு காலமாக இழுபடுகின்றது. இனியும் ஒத்தி வைக்க முடியாது. வாக்கெடுப்புக்கு விடுமாறு அவசரப்படுத்தினார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவருக்கு எதிர்மாறாக கருத்தை வெளியிட்டார். பிரேரணை கொண்டு வரும்போது எங்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். நாங்கள் இந்த விடயத்தில் ஆதாரங்களுடன் பேச வேண்டும் என்றார்.

இறுதியில் அவைத் தலைவர் இன்றைய அமர்வில் நான்கு விடயங்கள் எடுக்கப்படவில்லை. அதனை எடுப்பதற்காக எதிர் வரும் 11 ஆம் திகதி கூடலாம் என்று சொன்னார். அதன் போது சிவாஜிலிங்கம் அன்றைய தினம் தனது பிரேரணை எடுக்கப்படுமா என்று கேட்க, இல்லை என்றார். நான் இதனை இப்போது வாக்கெடுப்புக்கு விடக் கோருகின்றேன் என்று சொல்ல, எதிர்க்கட்சித்தலைவரும் சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவாக, அவரது உரிமையை மறுக்க முடியாது என்று சொன்னார்.

இதன் போது சயந்தன் குறுக்கிட்டு, அவையை ஒத்தி வைத்த பின்னர் வாக்கெடுப்புக்கு விட முடியாது என்று சட்டத்தின் ஓட்டையைப் பிடித்துக்கொண்டு அதற்குள் விடயத்தை முடித்து விட்டார். அவைத் தலைவர் சபையை ஒத்திவைத்து சபாபீடத்திலிருந்து எழுந்ததும், சபாபீடத்தை நோக்கி ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜி சீறிக்கொண்டு சென்றார். சென்ற வேகத்தில் செங் கோலை தட்டி விட்டார். அதன் பின்னர் படைக்கல சேவிதர் அதனைத் தாங்கிச் சென்றார். அத்துடன் சபை அமர்வு முடிவுக்கு வந்தது.

# கருத்து

## வாசகர் திருமுகம்

### பாதீனியத்தை அழிப்போம்

இன்றைய காலத்தில் காணி, வீடு, கார் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக ஓடி ஓடி உழைத்ததும் கடன் எடுத்தும் ஆடம்பரமாக வாழ முயற்சிக்கிறோம்.

ஆனால் எமது சமுதாயத்தைப் பற்றி எவரும் கவலைப்படுவதில்லை.

நான் உண்டு என்வேலை உண்டு. பணம் பொருள் தேடினால் போதும் என எண்ணுகிறோம். இது மகா தவறு என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். மற்றவன் வாழ்ந்தால் தான் நாமும் வாழ முடியும். நாம் நோயின்றி வாழ வேண்டுமானால் சுகாதார வழி வகைகளை மேற்கொள்ள வேண்டும். மிக முக்கியமாக பாதீனியம் செடி மக்களுக்கு மட்டுமல்ல, நாம் உண்ணும் பயிர் இலைகளுக்கும் தீங்கு விளைவிக்கிறது.

இதை இல்லாதொழித்தால் பெரும் பயன் உண்டு. குறிப்பாக இதை அழிக்க வேண்டுமென சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை எடுப்பதில்லை ஏன்? பாதீனியம் இருப்பது அவர்கள் கண்களுக்கு தெரிவதில்லையா? இல்லை அது பற்றிக் கவலைப்படுவதில்லையா? இது எமக்கு புரியாத புதிராகவே உள்ளது.

அனைவரும் பொதுநலத்தை முன்னெடுத்து பாதீனியத்தை அழிக்க முன்வருவார்களா? ஐந்து அல்லது ஆறு தடவை விடாது அழித்தால் பாதீனியம் இருந்த இடம் தெரியாமல் போய் விடும்.

இந்தச் செடி பூக்கும் முன்பே அழித்து விடவேண் டும். பூத்த பின்பு அழிப்பதில் பிரயோசனம் இல்லை. பரவ இடம் உண்டு. கவனத்தை சிரமேற்கொண்டு மக்கள் இதை செய்வார்களா?

*சிவ புண்ணியன்*

### மறைக்கப்பட்டு வ்ரும் நினைவுக்கல்

யாழ்ப்பாணத்தில் 1964 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வீரசிங்கம் மண்டபம் அப்போதைய ஆக்கிரெக் துரைராஜாவினால் வடிவமைக்கப்பட்டது. அதற்கான நினைவுக் கல்லும் உண்டு. ஆனால் ஆளுநரும் அமைச்சரும் தற்போது தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து நினைவுக் கல் அமைத்துள்ளார்கள். இது அபத்தமானது.

இதை உதயன் பத்திரிகையில் வெளிகொண்டு வருமாறு தாழ்மையுடன் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*ஓர் அன்பர்*

### இவர்கள் திருந்த மாட்டார்களா?

17.11.2014 நல்லூரில் நடைபெற்ற இந்தியக் கலைஞர் ஒருவரின் இசைநிகழ்ச்சியை முழுமையாகப் பார்ப்பதற்காக மாலை 4 மணிக்கே சென்றேன். காரணம் இடம்பிடிப்பதற்காக. இரவு 9.30 மணிக்கே நிகழ்ச்சி முடியுமென்பதனால் பசிக்கு இடமளியாமல், சந்திக்கண்மையில் இருந்த பெரிய கடையில் தேங்காய்ப்பூவுடன் இனிப்பும் வேறுபொருள்களும் கலந்த பிஸ்கற் பைக்கற் ஒன்றை வாங்கியவனாய் அவசர அவசரமாய் சென்று மணி மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டேன். 'லக்ஷபோன்' வாத்தியம் என்றால் சொல்லவா வேண்டும். கச்சேரி உச்சக்கட்டம். இசை உடம்பெல்லாம் பரவ, பசிதாண்டவமாடியது. வாங்கிய பிஸ்கற் பைக்கற்றை உடைத்தேன். வாயிலே நாகரிகமாக வைத்தேன். பல்லுக்கு வேலை இருக்கவில்லை. சுவையும் பறிபோயிருந்தது. அப்போது பைக்கற்றின் உற்பத்தி மற்றும் முடிவடையும் திகதியைப் பார்த்தேன். அழிக்கப்பட்டு இருந் தது. நல்ல மழை, தண்ணீரைக் குடித்தேன். இரவு 9 மணியைத் தாண்டி விட்டது. நனைந்து வீடு வந்து சேர்ந்தேன். நாமே நமக்கு எதிரிகளாகி விட்டோமோ? சமயம் தோற்றுப் போய்விட்டதா? நாம் எதற்காக வணங்குகின்றோம். மற்றவர்களை துவம்சம் செய்வதற்காகவா? சாபங்கள் சும்மா விடாது பாருங்கோ!

*கே.எஸ். சிவஞானராஜா*

கேலிச் சித்திரம்




## குரங்குகள் பயந்துபோய்விட்டன

ஓர் அடர்ந்த காடு. நீங்கள் டிஸ்கவரி சனல்களில் பார்க்கின்ற அமேசான் காடுகளைப் போன்று பயங்கர கும்மிருட்டான காடு என்று அதனைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அங்கே குரங்குகள் கூட்டமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. குரங்குகளைத் தவிர வேறு மிருகங்கள் அங்கு இருக்கவில்லை. அந்தக் குரங்குகள் இனிமையாக, தங்கள் குடும்பங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

மரத்துக்கு மரம் தாவி தங்களுக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொள்கின்றன. அத்துடன் ஒன்றுடன் ஒன்று சண்டை பிடித்தும் கொள்கின்றன. ஆனாலும் அவை தங்கள் குரங்குக் கூட்டத்துடனேயே தங்கள் குணாதிசயங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

கொஞ்சக் காலம் நகர்கின்றது. அந்தக் குரங்குகள் கொஞ்சம் நிமிர்ந்து நடக்கத் தொடங்குகின்றன. படிப்படியாக அவை நிமிர்ந்து நடக்கத் தொடங்கியதும், அந்தக் குரங்குகளின் குணம் மாறுகின்றது. இதன் பின்னர் அவர்கள் மனிதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

பழைய வாழ்க்கையிலிருந்து விடுபட்டு வேறு ஒரு வாழ்கையை வாழத் தொடங்குகின்றனர். ஒருவரை ஒருவர் குழிபறிப்பது, வஞ்சகம் செய்வது என்று குரங்கிலிருந்து விடுபட்டதான, முற்றாக வேறுபட்ட நடத்தையுடன் இருக்கின்றனர். இவ்வாறு மனிதர்கள் என்ற பெயர்களுடன் கீழே திரிபவர்களை மரத்துக்கு மேலிருந்து அதன் வழித் தோன்றல் குரங்குகள் அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

திடீரென கீழே மனிதர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள், மரத்துக்கு மரம் தாவத் தொடங்குகின்றார்கள். ஒரு மரத்திலிருந்து மற்றைய மரத்துக்கு மூன்று மனிதர்கள் தாவுகின்றார்கள். பின்னர் அந்த மரத்திலிருந்து மற்றைய மரத்துக்கு இரண்டு மனிதர்கள் தாவுகின்றார்கள். மனிதர்களின் இந்தத் தாவுதல்களை மரத்தின் மேலிருந்து குரங்குகள் பயத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அந்தக் குரங்குகளுக்கு சந்தேகம் வந்து விட்டது. மரத்துக்கு மரம் தாவுவது தங்கள் குணம்தானே. தங்களிலிருந்து வேறுபட்டுத்தானே கீழே மனிதர்கள் என்ற பெயரில் நடமாடிக் கொண்டிருந்தார்கள். திடீரென அவர்கள் ஏன் மரத்துக்கு மரம் தாவுகின்றார்கள். மரத்தின் மேலிருந்த குரங்குகளுக்கு, தாங்கள் குரங்குகளா அல்லது கீழிருப்பவர்கள் குரங்குகளா ? என்ற குழப்பத்தில் மண்டையே வெடித்து விடும் போல் இருந்தது.

இந்தக் கதையை வாசிக்கும் போது, இது எங்கேயோ பொருந்துவது போல் இருந்தால் அதற்கு நாம் பொறுப்பல்ல. அதுவும் இலங்கையின் அரசியலில் நடக்கும் தாவல்களையே இது சுட்டி நிற்கின்றது என்று நீங்கள் அர்த்தம் கொண்டால் அதற்கும் நாம் பொறுப்பல்ல.

பொதுவாகக் கதையைத்தான் நாம் சொன்னோம். இதை வாசித்த உங்களுக்கு, நாளை எந்தக் குரங்கு எந்த மரத்தில் நிற்கும் என்ற சந்தேகம் வந்திருக்கக் கூடும். எந்தக் குரங்கு எந்த மரத்தில் நின்றாலும் எங்களுக்கு எதுவும் நடக்கப்போவதில்லை.

*பத்தி எழுத்து*

# சிறுவர்




## கரடி என்ன சொன்னது?




இரண்டு நண்பர்கள் காட்டின் வழியாகச் சென்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் பெரியவன், மற்றொருவன் சிறியவன். பெரியவன், 'என்னைப் போன்ற நண்பனைக் காண முடியாது. என்ன துன்பம் வந்தாலும் நான் உன்னைக் காப்பாற்றுவேன்' என்று சொன்னான் அப்போது கரடி ஒன்று உறுமும் சத்தம் கேட்டது. உடனே பெரியவன் அங்கிருந்த மரத்தின் மேல் ஏறி அமர்ந்து கொண்டான். சிறியவனுக்கு மரம் ஏறத் தெரியாததால் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான். பின்னர் கீழே விழுந்து மூச்சை அடக்கிக் கொண்டு செத்தவனைப் போல் படுத்துக் கொண்டான். கரடி வந்தது. கீழே விழுந்து கிடந்தவன் காதருகே சென்று நுகர்ந்து பார்த்தது. பிறகு அவன் செத்தவன் என்று முடிவு செய்து அங்கிருந்து நகர்ந்து போய் விட்டது. கரடி போனதும் மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தவன், கீழே படுத்திருந்தவனிடம், 'கரடி உன் காதில் என்னவோ சொன்னதே... என்ன சொன்னது?' என்று கேட்டான். கீழே படுத்திருந்தவன் எழுந்து அமர்ந்தான். பின்பு, 'ஆபத்தில் உதவாத நண்பனை என்றுமே நம்பக் கூடாது!' என்று சொல்லிவிட்டுப் போனது' என்றான்





நி.சுவஸ்திகா
ஐயனார் முன்பள்ளி
சுன்னாகம்



நி.ஹரீசன், தரம்-5டி,
யாழ். இந்து ஆரம்பப்
பாடசாலை

# விமோசனம் கிடைக்குமா வீதிக்கு ?

கரணவாய், டிசெ.9

இமையாணன் பாடசாலை வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் அந்த வீதியால் பயணம் செய்யும் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

குறித்த வீதி ஊடாக உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மற்றும் இமையாணன் அ.த.க. வித்தியாலயம் ஆகியவற்றுக்குச் செல்லும் ஆசிரியர்களும் மாணவர்களும் பயணம் மேற்கொண்டு வருவதுடன் பருத்தித்துறைப் பிரதான வீதிக்கு செல்வோரும் அந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது மழை பெய்து வருவதால் வீதியில் உள்ள குழிகளில் நீர்த் தேங்கி நிற்பதாலும் குறித்த வீதியில் இதுவரை வீதி விளக்குகள் பெரும்பாலான இடங்களில் பொருத்தப்படாமையாலும் இரவு நேரங்களில் பயணம் செய்வோர் நீர் தேங்கி நிற்கும் குழிகளில் விழுந்து விபத்துக்குள்ளாகும் சிரம நிலையும் காணப்படுகின்றது.

இதுதொடர்பாக கரவெட்டிப் பிரதேச சபையிடம் பல தடவைகள் முறைப்பாடுசெய்யப்பட்ட போதும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் மக்கள் பாவனை குறைந்த பல வீதிகள் பிரதேச சபையால் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டு வரும் அதேவேளை – குறித்த வீதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க பிரதேசசபை ஏன் தயங்குகின்றது என்று அந்த வீதியால் பயணம் செய்வோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை – அந்த வீதியில் இமையாணன் அ.த.க. வித்தியாலயத்துக்கு அண்மையில் காணப்பட்ட பெரிய குழியில் நீண்ட காலமாக நீர் தேங்கி நின்றமையால் பலரும் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். ஆனால் அந்தப் பகுதியில் உள்ள இளைஞர்கள் சிலரின் முயற்சியால் அந்த இடம் மட்டும் கற்கள் மட்டும் போடப்பட்டு நிரவி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ–108)



யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கி வரும் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ள விழிப்புலனிழந் தோரின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சமூக சேவையாளரும் குருதிக் கொடையாளியுமாகிய கைதடி கிழக்கைச் சேர்ந்த கட்டையன் தயாகரன் ஒரு தொகை நிதியை அண்மையில் வழங்கியுள்ளார்.

மேற்படி நிதியை அவர் தொழிற் பூங்காவிலுள்ள விழிப்புலனிழந்தவரிடம் நேரடியாகக் கையளித்ததுடன் சிற்றுண்டிகளையும் வழங்கினார். (வ–288)

# ஓய்வூதிய நிதியத்தில் இணைய காலக்கெடு

யாழ்ப்பாணம், டிசெ.9

உள்ளூராட்சி சேவை திணைக்கள அலுவலகங்களில் பணி புரியும் பெண்கள், உள்ளூராட்சி சேவை விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தில் இணைவதற்காக எதிர் வரும் 31 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி வர்த்த மானிப் பத்திரிகையில் உள்ளூராட்சி மன்றம், மாகாண சபைகள் அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவையில் இருந்து வரும், மற்றும் நிதியத்துக்கு பங்களிப்பு செய்ய தொடர்ச்சியான விருப்பத்தை தெரிவிக்கமுடியாத பெண்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் நிதியத்தில் இணைந்து கொள்ள முடியும் என்றும்

நிதியத்தில் இணைவோர் நியமனத் திகதியிலிருந்து குறிப்பிட்ட திகதிவரைக்குமான விதவை அநாதை ஓய்வூதிய நிதிசெலுத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ–9)

# விண்ணப்பத் திகதி நீடிப்பு

## ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை வழங்கும் புலமைப்பரிசில் வெகுமதிக்கான

அச்சுவேலி, டிசெ.9

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தரம் 5 புலமைப் பரிசில் ஊக்குவிப்பு வெகுமதி நிதிக்கான விண்ணப்பத் திகதி இந்த மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை இல-70, மாட்டீன் வீதி யில் உள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபை உறுப்பினர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. உறுப்பினர்களின் பிள்ளைகள் தரம் 5 புலமைப் புரிசில் பரீட்சையில் சித்தியடைந்து புலமைப் பரிசில் பெறுவதற்கு தகைமை பெற்றிருந்தால் புலமைப் பரிசில் ஊக்குவிப்பு உதவியாக 15 ஆயிரம் ரூபா வழங்குகின்றது. அந்தவகையில் இந்தவருடம் 17ஆயிரம் பேருக்கு புலமைப் பரிசில் வெகுமதி உதவி வழங்கப்படவுள்ளது. இதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினம் நவம்பர் 28 ஆம் திகதியாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தரம் 5 புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டு அறிவிக்கப்பட்டதை அடுத்து விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் எதிர் வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் புலமைப் பரிசில் அலுவலர் புலமைப் பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை, இல-92, கிருல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–11)

# சைக்கிளோட்டி விபத்தில் காயம்


தென்மராட்சி, டிசெ.9

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளோட்டி ஒருவர் அதே திசையில் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவரை மோதித் தள்ளிவிட்டுத் தப்பியோடியுள்ளார். இந்தச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு கொடிகாமத்தில் இடம்பெற்றது. மோட்டார்சைக்கிள் மோதியதால் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த கெற் பேலியைச் சேர்ந்த நாகலிங்கம் யோகநாதன் (வயது–42) என்பவர் கொடி காமம் பொலிஸாரால் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் குறித்த மோட்டார் சைக் கிளைச் செலுத்தி வந்தவரை தேடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

## ஆக்கம்

# ஒரு கிளிக்கில் நீங்களும் ஐன்ஸ்டீனை ஆய்வு செய்யலாம்!




– சைபர்சிம்மன்

அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் பிரஸ் தன்வசம் இருந்த ஐன்ஸ்டீன் படைப்புக்களை டிஜிற்றல் மயமாக்கி, எளிதாக தேடக் கூடிய வசதியையும் அளித்திருக்கிறது. சொல்லப்போனால் அறிவியல் பொக்கிஷத்தை ஒன்லைனில் கொண்டு வந்திருக்கின்றனர் என்று சொல்லலாம். இது எத்தனை மகத்தான வாய்ப்பு என்று வியப்பும் ஏற்படுகிறது.

ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவம் உள்ளிட்ட விஞ்ஞான கோட்பாடுகளை அறிந்து கொள்ள புத்தகங்கள் இருக்கின்றன. இணையத்திலும் அனேக வழிகள் இருக்கின்றன. ஐன்ஸ்டீன் தொடர்பான பிரத்தியேக இணைய தளங்களும் இருக்கின்றன. ஆனால் டிஜிற்றல் ஐன்ஸ்டீன் இணையத்தளத்தில் ஐன்ஸ்டீன் படைப்புக்களை அணுகலாம் என்பதுதான் விசேடம்.

ஐன்ஸ்டீன் படைப்புக்கள் என்றால் அவர் எழுதிய எல்லாவற்றின் தொகுப்பு. ஐன்ஸ்டீனின் இளமைக்காலம் தொட்டு 1923 ஆம் ஆண்டு வரை அவர் எழுதியவை, சிந்தித்தவற்றின் குறிப்புகள் எல்லாம் புத்தகமாக தொகுக்கப்பட்டு டிஜிற்றல் வடிவில் இணையவாசிகள் பார்வைக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. ஐன்ஸ்டீனின் காதல் கடிதங்கள், பள்ளி மதிப்பெண் சான்றிதழ் போன்றவையும் இந்த தொகுப்பில் அடங்கும் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஆக, ஐன்ஸ்டீன் எனும் மேதை சிந்தித்த மற்றும் செயற்பட்ட விதத்தை அறிந்து கொள்ளவும், ஆய்வு செய்யவும் இந்த டிஜிற்றல் ஆவணங்கள் உதவியாக இருக்கும்.

ஐன்ஸ்டீன் என்றவுடன் உற்சாகம் கொள்ளும் நபரா நீங்கள்? அவரைப்பற்றி மேலும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதா? அப்படி என்றால், உங்களை மேலும் உற்சாகத்தில் ஆழ்த்தக்கூடிய நிகழ்வு ஒன்லைனில் அரங்கேறியிருக்கிறது. விஞ்ஞானிகளின் விஞ்ஞானி என்று போற்றப்படும் அந்த அறிவியல் மேதையின் எழுத்துக்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் டிஜிற்றல் மயமாக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

டிஜிற்றல் ஐன்ஸ்டீன் எனும் பெயரிலான இந்தத் திட்டத்தின் மூலம் ஐன்ஸ்டீன் மீது ஆர்வம் கொண்ட எவரும் இருந்த இடத்தில் இருந்தே அவரது படைப்புகளை அணுகலாம். அதாவது, ஐன்ஸ்டீன் படைப்புகள் விரல் நுனியில் ஒரு கிளிக்கில் காத்திருக்கின்றன.

பொதுவாக ஐன்ஸ்டீன் போன்ற மேதைகளின் படைப்புக்களை, அந்தரங்க கடிதங்களை, குறிப்பேடுகளை நேரில் பார்ப்பது என்பது எல்லோருக்கும் கிடைக்க கூடிய வாய்ப்பு இல்லை. இத்தகைய முக்கிய ஆவணங்கள் அருங்காட்சியகம் மற்றும் பல்கலைக்கழகங்களில் பாதுகாக்கப்படும்.

அவற்றை அணுக வேண்டும் என்றால் சிறப்பு அனுமதி தேவை. அதிலும் ஆய்வு மாணவர்களுக்கு தான் இத்தகைய அனுமதி கிடைக்கலாம்.

ஆனால், இணைய யுகத்தில் இந்த வரம்புகள் இல்லை. ஆவணங்கள் டிஜிற்றல் மயமாக்கப்பட்டு இணையத்துக்கு கொண்டு வரப்பட்டால் அவற்றை எல்லோரும் அணுகலாம்.

இந்த அற்புதம்தான் இப்போது நிகழ்ந்திருக்கிறது. பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தால் தொகுக்கப்பட்டு வரும் ஐன்ஸ்டீன் படைப்புக்களில் 13 தொகுதிகள், இப்போது ஒன்லைனில் அரங்கேறியிருக்கின்றன.

பெரும்பாலான தொகுதிகள் மூலமொழியான ஜேர்மன் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்பைக் கொண்டுள்ளன. தொகுதிகளை டிஜிற்றல் புத்தகமாக எளிதாக புரட்டிப்பார்க்கலாம். விரும்பியதை தேடும் எளிய வசதியும் இருக்கிறது.

ஐன்ஸ்டீனின் அறிவியலை மட்டும் அல்ல, ஐன்ஸ்டீன் எனும் மனிதரையும் இந்த படைப்புக்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். ஐன்ஸ்டீனின் சகோதரி மாஜா எழுதிய ஆரம்ப கால சுயசரிதையும் இதில் இடம்பெற்றுள்ளது.

ஐன்ஸ்டீனின் அம்மா அவரது தலையின் பொருந்தா தோற்றத்தைப் பார்த்து கவலைப்பட்டது, ஆரம்பத்தில் மொழியை கற்பதில் அவருக்கு இருந்த குறைபாடு, பேசும்போது ஒவ்வொரு வரியையும் தனக்குத் தானே மெல்ல மீண்டும் சொல்லிப்பார்க்கும் விநோத பழக்கம் அவருக்கு இருந்தது போன்ற சுவாரஸ்யமான தகவல்கள் இந்தப் படைப்புக்களில் இடம்பெற்றிருப்பதை, பத்திரிகைகள் சுட்டிக் காட்டியுள்ளன.

அதேபோல பள்ளித்தேர்வு முறையை ஐன்ஸ்டீன் எதிர்த்திருக்கிறார். தேர்வுகள் தேவையில்லாதது, தீங்கானது என குறிப்பிட்டுள்ள ஐன்ஸ்டீன், இதற்கு மாறாக மாணவர்களின் பக்குவம் மற்றும் அவர்களுக்கான பயிற்சிகள் மூலம் ஆசிரியர்கள் மதிப்பிடலாம் என குறிப்பிடுகிறார்.

ஐன்ஸ்டீனின் காதல் கடிதங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை சொல்கின்றன என்றால் மற்ற கடிதங்கள் மற்றும் எழுத்து மூலம் அவரது சமூக பார்வையை அறியலாம்.

ஆக, ஐன்ஸ்டீன் பற்றி படிக்கும் வாய்ப்பு இப்போது இணையம் மூலம் சுலபமாகி இருக்கிறது. நீங்கள் விரும்பினால் ஐன்ஸ்டீன் பற்றி ஆய்வும் செய்யலாம். இதற்கு பி.எச்.டி. பட்டம் தேவை என்றில்லை, ஒன்லைனில் http://einsteinpapers.press.princeton.edu/ என்ற முகவரிக்குச் சென்றாலே போதுமானது!

## வணிகம்

# ஈ – சிற்றி

## மாணவர்களின் சிங்கள மொழி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஈ–சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் சிங்களக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களின், கௌரவிப்பு மற்றும் கலைநிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

வேறெங்கும் இல்லாத வகையில் மூன்று மாத கால இடைவெளியில் சிங்களப் பாடநெறியைப் பூர்த்தி செய்து சரளமாக சிங்களத்தில் உரையாடத்தக்க முறையில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களால் முற்று முழுதாக சிங்கள மொழியிலான நிகழ்வுகள் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன.

செல்வி எஸ்.தர்சிகா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா மற்றும் கல்லூரியின் தலைவர் லயன் ஜெ.றஜீவன், கல்லூரியின் பணிப்பாளர் டாக்டர் லயன் க.ஜெயச்சந்திரமூர்த்தி, சிங்கள விரிவுரையாளர் திருமதி வினிபெரடா, சர்வதேச ஆங்கிலக் கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகள் இணைப்பாளர் திருமதி ற.மயூரிக்கா, கல்லூரியின் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிங்கள மொழியில் எந்தவித சொற்களையும் அறியாத நிலையில் கற்கை நெறியை ஆரம்பித்த மாணவர்கள் ஒரு மொழியில் முக்கிய அம்சங்களான இசை, இயல், நாடகம் என்ற பாங்குக்கு அமையக் கற்றுத் தங்கள் திறமைகளை பேச்சுக்கள், பாடல்கள், நாடகங்கள் எனச் தனிச் சிங்கள மொழியில் சிறப்பாக நடத்திக் காட்டியமை நிகழ்வுக்கு வந்த அனைவரையும் வியப்புற வைத்தது.

பிரதம விருந்தினர் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா தனது உரையில் 48 மணித்தியாலத்தில் (மூன்று மாதங்களில்) மாணவர்கள் அடைந்த தேர்ச்சியை வியப்போடு பாராட்டியதுடன் சிங்கள மொழியை கற்பித்த சிங்கள விரிவுரையாளரையும் பாராட்டி உரையாற்றியிருந்தார்.

இன்றைய நிலையில் மொழிகளின் அவசியம் குறித்து உரையாற்றியிருந்த பிரதம விருந்தினர் ஈ–சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் மகத்துவமான சேவையைப் பெரிதும் பாராட்டியிருந்தார். ஆங்கில மொழி மட்டுமல்லாது சிங்கள மொழியிலும் மாணவர்களை சிறப்பு தேர்ச்சி பெறச் செய்து மொழிகளை லாவகமாக பேசவைப்பது மிகவும் கடினமான செயலாகும். அந்த வகையில் ஈ–சிற்றி கல்லூரியின் சேவை இன்றைய மக்களின் மிகச் சரியான தெரிவாகும் எனவும் தெரிவித்தார்.

இந்தப் பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் மிகவும் சிறந்த முறையில் எழுத வாசிக்க முடிவதுடன் சரளமான முறையில் சிங்கள மொழியை பேசவும் முடிகின்றது. அந்த வகையில் தமக்கு அர்ப்பணிப்புடன் கற்பித்த விரிவுரையாளருக்கு மாணவர்கள் தங்கள் நன்றிகளை உணர்வுபூர்வமாகத் தெரிவித்திருந்தனர். (ற)




அரச காப்புறுதி நிறுவனமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் ஆயுள் காப்புறுதி செய்திருந்த மீசாலையைச் சேர்ந்த ஒருவரின் சாவு இழப்பீட்டுக் கொடுப்பனவான 1,085,250 ரூபாவை நிறுவனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் பா.சத்தியன், இறந்தவரின் மனைவியிடம் கையளித்தார். அருகில் சாவகச்சேரி கிளை முகாமையாளர் கே.பிரதீபன், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சி.புனிதநாதன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# தொழில்நுட்பம்

## QR குறியீடு

QR code (Quick Response) உலக அளவில் வணிக பயன்பாட்டுக்காக பயன்படுத்தப்படுகிறது.
எம்மில் பலரும் இந்த வாக்கியத்தை அடிக்கடி கேள்விப்பட்டிருப்போம். இது எதற்காக? இதனால் என்ன பயன்?
தகவல்களை விரைந்து பெறுவதற்காக தொழில் அமைப்பில் உருவாக்கப்பட்ட ஒரு முத்திரை தான் இந்த QR Code. இது முதன்முதலில் ஜப்பானில் உள்ள ஒரு வாகனத்துறை சார்ந்த நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்டது.
ஒரு பொருளின் தகவல்கள் அனைத்தும் ஒரு மிஷின் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய ஆப்டிகல் லேபிளில் பதிவு செய்யப்பட்டிருக்கும். இதன் மூலம் அந்த பொருளின் தகவல்கள் அனைத்தும் எளிதில் புரிந்து கொள்ளப்படுகிறது.
இந்த தகவல்கள் அனைத்தும் numeric, alphanumeric, byte / binary, and kanji "[L Encoding முறை மூலம் பதிவு செய்யப்படுகிறது. இதன் காரணமாக தயாரிப்பு நிறுவனத்தில் பொருள்கள் கண்காணிப்பு, அடையாளம் காணுதல், நேரத்தைக் கண்காணித்தல், ஆவணங் களை முறைப்படுத்துதல் மற்றும் மார்க் கெட்டிங் என அனைத்து வேலையும் எளிதாக முடிகிறது.
QR Code அமைப்பு டென்ஸோ வேவ் என்பவரால் 1994ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வாகன தயாரிப்புகளை கண்காணிக்க பெரிதும் உதவிய இந்த அமைப்பு, தற்போது



வணிக கண்காணிப்பு முதல் பல வசதிகளுக்காகவும் மொபைல் போன்களிலே வந்து விட்டது.
ஸ்மார்ட் போன் இந்த வகையில் ஸ்கேன்னர் ஆக பயன் படுகிறது. இது பின்னிப் பிணைந்த அந்த குறீயீட்டில் இருந்து தகவலை எளிதாகப் பெற உதவுகிறது.



## விலைகள் சடுதியாகக் குறையும்

உலக அளவில் ஸ்மார்ட்போன் சந்தை வளர்ச்சியடைந்து வரும் நிலையில் கடுமையான போட்டித் தன்மையும் அதிகரித்துள்ளது.
இந்த நிலையில் அடுத்து வரும் சில வருடங்களில் ஸ்மார்ட்போன்களின் விலை குறையும் என இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் ஐ.டி.சி. ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.
2015 ஆம் ஆண்டில் சுமார் 1.5 பில்லியன் ஸ்மார்ட்போன்கள் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.சைனா ஸ்மார்ட்போன்களின் வரத்தும் கணிசமாக அதிகரித்து வருவதால் பிரீமியம் ஹேண்ட்செட்டுகளின் விலையும் பெருமளவில் சரிந்து வருகின்றன.
தற்போது சர்வதேச சந்தையில் 80 சதவீதம் ஆண்ட்ராய்டு போன்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அப்பிளின், ஐ.ஓ.எஸ். 13 சதவீத்தை மட்டுமே ஆக்கிரமித்துள்ளது. எனினும், டைசன், பயர்பாக்ஸ் போன்ற புதிய ஓ.எஸ்.களும் வாடிக்கையாளர்களிடம் வரவேற்பைப் பெற்றுத்தான் வருகின்றன.



## கடிகாரமாக அணியும் வன்றட்டு

கணனிகளில் சேமிப்பு சாதனமாக திகழும் வன்றட்டு (Hard Disk) கடிகாரமாக கைகளில் அணியக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.
HDD Watches என அழைக்கப்படும் இந்த வன்றட்டு 1 அங்குல அளவுடையதாகக் காணப்படுகின்றது. இதனை பிரான்ஸ் நாட்டின் பரிஸ் நகரைச் சேர்ந்த Jean Jr3me என்பவரே உருவாக்கியுள்ளார்.
இந்த வன்றட்டைத் தற்போது 100 பவுண்ட்ஸ்ஸுக்குக் கொள்வனவு செய்ய முடியும்.


### பதவி வெற்றிடம்

விஞ்ஞான ஆசிரியர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

JAFFNA COLLEGE CEYLON

தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களுக்கு ஆங்கில மொழி மூலம் விஞ்ஞானம் கற்பிக்கக் கூடிய விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்,இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

விண்ணப்ப முடிவு திகதி *15.12.2014*

விண்ணப்பங்களை முகாமையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்,
யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(சி/18207)(8-3)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்




சி.ரிவினா-165 2013 சி.கார்த்தியப்பிரியன்-155 2014 அ.விதுரன்-153 2014

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மேலும் த.சுதர்மிதா (149 புள்ளிகள்) மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர் ஆகியோரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம்.
இமையாணன்,
வல்வெட்டித்துறை. (52036) (4.3.6)

### வாகனம் தேவை

யாழ். கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் பயிற்சியளித்தல் பிரிவின் அலுவலகப் பாவனைக்கு குளிரூட்டி வசதியுடனும் ஓட்டோ கியர் வசதியுடனும் கூடிய மோட்டார் கார் ஒன்று வாடகைக்குத் தேவைப்படுகின்றது.
இது தொடர்பான கேள்விப்பத்திரத்தை 11.12.2014 முற்பகல் 10.00 மணி தொடக்கம் 12.12.2014 பிற்பகல் 2.00 மணிவரை அலுவலக நேரங்களில் கீழ்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டம்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 021 221 7447

(54769)(8-3)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



க.கஜீவா-156 யூ.தனுசன்-149

2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முல்லைத்தீவு வலயத்தின் மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலய செல்வி க.கஜீவா - 156, செல்வன் யூ.தனுசன் -149 புள்ளிகளை பெற்ற மாணவர்களையும் அவர்களைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

-வாழ்த்துவோர் -
ஆசிரியர் நலன்புரி சங்கம்.

### செல்லா சினிமா யாழ்ப்பாணம்

விஜய், சமந்தா நடிப்பில்




**கத்தி**

(தினசரி 4 காட்சிகள்) 10.30, 2.30, 6.30, 9.30

எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த
அழையுங்கள்: 077 326 6949

### The Jaffna Education Centre

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(செல்லா தியேட்டருக்கு முன்பாக)

Spoken English With Grammar
சிங்களம்
ESOL, IELTS
Short hand Typing ஆகிய பாடங்கள்
இரு மொழிகள் மூலமும் நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 10.12.2014
பாட முடிவில் 'சான்றிதழ்' வழங்கப்படும்.
ஆசிரியை: இ.லோகநாயகி 076 669 8953

### BARATHY

கல்வி நிறுவனம்
சித்தன்கேணி

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

தரம் 6 முதல் 11 வரை
நாளை ஆரம்பம் – 10.12.2014 புதன்கிழமை
தரம் 9,10,11 – 08.00 A.M
தரம் 6,7,8 – 09.00 A.M

நீங்கள் நன்கு அறிந்த இப்பிரதேசத்தின் மிகப் பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்....

விஞ்ஞானம்: Mr.தேவா, Mr.பத்மநாதன்
கணிதம்: Mr.சிவரூபன், Mr.பாலச்சந்திரன், Mr.சிவா
தமிழ்: Mr.குகபரன், Mr.கஜிதரன்
ஆங்கிலம்: Mr. சுதர்சன், Mr.சிவகுமார்
வரலாறு: Mr.சுதன், Mr.நிஜகன், Mr.பிரதாப்
சமயம்: Mr.N.Tதரன், Mr.பாபுதரன்
வணிகக்கல்வி: Mr.திருக்குமரன்
சுகாதாரம்: Mr.பார்த்தீபன்
புவியியல்: Mr.சர்வேஸ்வரன், Mr.சிவா
குடியுரிமை: Mr.பாபு
I.C.T: Mr.N.அம்பி
ஊடகவியல்: Mr.கஜிதரன்
நாடகம்: Mr.ஆனந்தன்
விவசாயம்: Mr.சிவசஞ்சீபன்

Note :-
- மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் எமது நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பார்கள்.
- சென்ற ஆண்டு போல் இவ்வாண்டும் மாணவர்கள் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது.
- ஏற்கனவே ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் உள்ளதால் மிகக் குறைந்தளவு மாணவர்களுக்கே புதிய அனுமதிகள் வழங்கப்படும். உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.
- விடுமுறைக்காலத்தில் மேலதிக வகுப்புக்கள் நடைபெற உள்ளதால் தாமதியாது உடன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

– அதிபர், ஆசிரியர் –

# உலகச் செய்திகள்




## எல்லை தாண்டுவதை தடுக்க மீனவருக்கு கைபேசி செயலி

### நெருங்கும்போது எச்சரிக்கை ஒலி எழும்

சென்னை, டிசெ. 9

தமிழக மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக்கடற்பரப்பில்நுழை யாமல் இருக்க எச்சரிக்கின்ற கைத்தொலைபேசி செயலி ஒன்றை தூத்துக்குடி பொறி யியலாளர் ரெசிங்டன் உரு வாக்கியுள்ளார்.

ஆண்டிராய்ட் கைத்தொலை பேசிகளுக்கான கூகுள்பிளே ஸ்டோரின் இந்திய வடிவத் தில் இலவசமாக கிடைக்கக் கூடிய 'சேவ் அவர் ரேஸ்' சுருக் கமாக 'எஸ் .ஓ .ஆர்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தச் செயலியை இணையத் தொடர்பு இல்லாமலும், கைத் தொலைபேசி சமிஞ்ஞை இல்லாமலும்கூடப் பயன் படுத்த முடியும்.

தமிழக மீனவர்கள்ள மன தில்கொண்டு தமிழிலேயே இந்தச் செயலி வடிவமைக் கப்பட்டுள்ளது.

படகு ஒன்று சர்வதேச கடல் எல்லையை நெருங்கும் போதே இந்தச் செயலி எச் சரிக்கை ஒலியெழுப்பும், சர் வதேச கடல் எல்லையைத் தாண்டிவிட்டால், எச்சரிக்கை படம் திரையில் தோன்று வதோடு, வெளியேறு என்ற எச்சரிக்கை வார்த்தைகளை யும் இந்தச் செயலி எழுப்பும். ஆபத்து என்ற சமயத்தில் மீன வர்கள் சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்கு அபயக் குரலாக குறுந்தகவல் அனுப்புவதற் கான வசதியும் இந்தச் செய லியுில் உள்ளது என்று ரெசிங் டன் தெரிவித்தார். (ஒ–ரி)

## பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகியது வைகோவின் ம.தி.மு.க.



சென்னை, டிசெ.9

பா.ஜ.க.தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து மதிமுக விலகுவதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பான முடிவு நேற்று வைகோ தலைமையில் சென் னையில் நடைபெற்ற ம.தி.மு.க. உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது என அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள் ளது.

கூட்டணியில் இருந்து விலகு வது தொடர்பான, இந்தக் கூட் டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர் மானம் ஒன்றில், முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய், மூத்த தலைவர் எல்.கே. அத் வானி ஆகியோர் தேசிய ஜன நாயக கூட்டணியை வழிநடத் திச் சென்றபோது தோழமைக் கட்சிகளுடன் கடைப்பிடிக்கப் பட்டு வந்த அணுகுமுறையின் அடையாளம் எதுவும் நரேந்திர மோடி அரசின் தீர்மானத்தில் இல்லை.

எனவே, நடந்து முடிந்த 2014 நாடாளுமன்றத் தேர்தலில், பாரதிய ஜனதா கட்சியின் தலை மையிலான தேசிய ஜனநா யகக் கூட்டணியில் இடம் பெற்று இருந்த ம.தி.மு.க. இனி யும் பாரதிய ஜனதா கூட்டணி யின் உடன்பாட்டையோ, உற வையோ தொடர முடியாதிருப் பதால், தேசிய ஜனநாயக் கூட் டணியில் இருந்து விலகிக் கொள்வதாக தீர்மானிக்கப்பட் டுள்ளது என்று ம.தி.மு.க. குறிப்பிட்டுள்ளது.

தமிழகத்தில் தே.ஜ. கூட்டணி யில் கடந்த சில மாதங்களாக ஏற்கனவே உரசல்கள் நிலவி வருகின்றன.

இலங்கைத் தமிழர் விவகாரத் தில் பிரதமர் மோடியை வைகோ தொடர்ந்து விமர்சித்து வரு கிறார். பா.ஜ.கவைச் சேர்ந்த சுப்பிரமணியன்சுவாமி, எச்.ராஜா போன்றோர் ம.தி.மு.கவுக்கும், வைகோவுக்கும் எதிராக வெளி யிட்டுள்ள கருத்துகள் ம.தி.மு.க. தொண்டர்கள் மட்டுமன்றி தமி ழகத்தின் அனைத்து கட்சிகளை யும் கவலையடையச் செய்துள் ளன.

பா.ஜ.க. தலைவர்களின் விமர் சனங்களைப் பிரதமர் மோடி கண்டிக்க வேண்டும் என்று வைகோ கூறினார். ஆனால் அதற்கு எந்த விதமான பதிலை யும் பா.ஜ.க. தேசிய தலைமை வெளியிடவில்லை.

பா.ஜ.க. மாநில தலைவர் தமிழி சையும், மத்திய இணை அமைச் சர் பொன்.ராதாகிருஷ்ணனும் சில சமரச முயற்சிகளில் ஈடு பட்டனர். எனினும், இலங்கை அதிபர் ராஜபக்ஷ திருப்பதி வர வுள்ளமை போன்ற விடயங்கள் வைகோவை மேலும் கொதிப் படைய வைத்துள்ளது.

ம.தி.மு.க. உயர் நிலைக்குழுக் கூட்டத்தில் பா.ஜ.க. தலைமை யிலான கூட்டணியில் தொடரு வதா? அல்லது வெளியேறு வதா? என்ற முடிவை வைகோ அறிவிப்பார் என்று நேற்று முன்தினம் கூறப்பட்டது.

இந்த நிலையில், பா.ஜ.க. தலை மையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகு வது என ம.தி.மு.க. உயர் நிலைக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக் கப்பட்டுள்ளது. (ஒ–ரி)



வளைகுடா நாடுகளில் ஒன்றான ஐக்கிய அரபு எமிரேட்ஸில் மிராக்கிள் பூந்தோட்டம் மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. 72,000 சதுரஅடி பரப்பில் 4.5 லட்சம் மலர்களைக் கொண்டு அழகிய வடிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (ஒ–ரி)

## 480 அடி நீளமான இந்தியத் தேசியக் கொடி; 50ஆயிரம் பேர் இணைந்து சாதனை

### இடம்பிடித்தது கின்னஸ்ஸில்

சர்வதேச றோட்டரி கழகத்தின் சார்பில் சென்னை நந்தனம் வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு இந்தச் சாதனைமுயற்சி நடைபெற்றது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள், றோட்டரி கழகத்தினர், பொது மக்கள் உள்ளிட்ட 50 ஆயிரத் துக்கும் மேற்பட்டோர் இணைந்து 480 அடி நீளம், 360 அடி அகலம் கொண்ட இந்திய தேசியக் கொடியை உருவாக்கினர்.

வண்ண அட்டைகளை மூவர் ணக் கொடி வடிவில் தொடர்ந்து 5 நிமிடங்கள் வரை கைகளில் ஏந்தியிருந்ததன்மூலம் இந்த உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனை முயற்சியை கின் னஸ் உலக சாதனை அமைப்பு அங்கீகரித்துள்ளது.

முன்னதாக பாகிஸ்தானில் உள்ள லாகூரில் கடந்த பெப்ரவரியில் 28,957 பேர் சேர்ந்து உருவாக் கிய மனித தேசியக் கொடியே உலகசாதனையாக இருந்தது என கின்னஸ் அமைப்பின் பிரதிநிதி சையதா சுபாசி கூறினார். (ஒ–ரி)



## மாமல்லபுரத்தில் சர்வதேச கடல்சார் காட்சியகம்

சென்னை, டிசெ. 9

இந்தியாவிலேயே முதல்முறை யாக மாமல்லபுரத்தில் சர்வதே சத் தரத்தில் கடல்சார் காட்சிய கம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட் டத்தைச் செயற்படுத்த பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் ஆர்வம் தெரிவித்துள்ளன.



தமிழகத்துக்கு சுற்றுலாப் பயணி களைக் கவரும் விதமாக, மாமல் லபுரத்தில் சர்வதேசத் தரத்தில் கடல்சார் காட்சியகம் அமைக்க அரசு முடிவெடுத்தது. இந்தத் திட் டத்தைச் செயற்படுத்துவதற்கான பணிகளை சுற்றுலாத் துறை ஒத் துழைப்புடன் மீன்வளத்துறை மேற்கொண்டுவருகிறது.

தனியார் மற்றும் அரசு பங்களிப் பில் 253ரூபா கோடி செலவில் கடல்சார் காட்சியகம் அமைப் பதற்கான பணிகள், தனியார் ஆலோசக நிறுவனத்தின் உதவி யுடன் நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து, திட்டத்தை செயற் படுத்துவதற்கான பணிகள் தற் போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

உலகப் புகழ்பெற்ற தலமான மாமல்லபுரத்தில் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையிலும், வெளிநாடு மற்றும் உள்நாட்டு பயணிகளை இன்னும் அதிக எண்ணிக்கையில் கவர்ந்திழுக் கும் நோக்கிலும் உலகத் தரத்தில் கடல்சார் காட்சியகம் அமைய வுள்ளது. கடல்வளம் மற்றும் அதன் பல்லுயிர் வளம் போன்றவற்றை அனைவரும் அறியும் விதத்தில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இந்தக் காட்சியகம் அமைக்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது. (ஒ–ரி)

# உலகச் செய்திகள்



## ஆளில்லா விமானத் தாக்குதலில் யேமனில் 9 தீவிரவாதிகள் சாவு

யேமன் நாட்டில் அல்குவைதா நிலைகள் மீது கடந்த சனிக் கிழமைநிகழ்த்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் 9 தீவிர வாதிகள் கொல்லப்பட்டதாக ராணுவ அதிகாரிகள் தெரிவித் தனர். ஷப்வா மாகாணத்திலுள்ள நுஸாப் என்னுமிடத்தில், அல் குவைதா அமைப்பினரின் நிலை களைக் குறிவைத்து ஆளில்லா விமானத்தாக்குதல் நிகழ்த்தப்பட் டது. இதில் 9 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## உலகின் பருமனான மனிதர் சாவு

உலகின் பருமனான மனிதராகக் கருதப்பட்ட பிரிட்டனைச் சேர்ந்த கெய்த் மார்ட்டின் தனது 44ஆவது வயதில் நேற்று முன்தினம் உயி ரிழந்தார்.



பிரிட்டனைச் சேர்ந்தவர் கெய்த் மார்ட்டின். இவரது அதிகபட்ச எடை 444.5 கிலோ. உல கின் மிகப் பருமனான மனித ராக அறியப் பட்டவர். அதிக உடல் நிறை காரணமாக இவரால் நடக்க முடியாது. அதிக உடல் நிறையால் மிகுந்த அவதிக்கு உள்ளான இவருக்கு, 8 மாதங்களுக்கு முன்பு வயிற்றின் முக்கால் பகுதி அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த இவர், மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

## விண்ணுக்கு பறந்த சீனாவின் சிபெர்ஸ்-4 செயற்கைக்கோள்

பீஜிங், டிசெ.9



கண்காணிப்பு, திட்டமிடுதல் மற் றும் நிலம், காடுகள், வேளாண் மேலாண்மை போன்ற பல் வேறுபயன்பாடுகளைக்கொண்ட சீனாவின்சிபெர்ஸ்–4 செயற்கைக் கோள், மார்ச்–4பி ரொக்கெட் மூலம் தாய்வானில் உள்ள ஏவு தளத்திலிருந்து, நேற்று வெற்றி கரமாக விண்ணில் ஏவப்பட்டது. 2002 ஆம் ஆண்டு நவம்பரில், சீனா–பிரேசில் ஆகிய நாடு களுக்கு இடையேயான முதற்கட்ட ஒப்பந்தம், மேலும் இரண்டு செயற்கைக்கோள்களை ஏவும் பணிக்காக விரிவுபடுத்தப்பட்டது. அதில் ஒன்றான சிபெர்ஸ்–3, 2013ஆம்ஆண்டுடிசெம்பர்மாதம் ஏவுதளத்திலேயே விபத்துக்குள் ளானதை அடுத்து, இரு நாடு களின் கூட்டுத்தயாரிப்பில் இரண் டாம்தலைமுறையானசிபெர்ஸ்–4 உருவானது.

இந்தச் செயற்கைக்கோள் அதன் திட்டமிடப்பட்ட சுற்றுப்பாதை யில்நிலைநிறுத்தப்பட்டதாகவிஞ் ஞானிகள் தெரிவித்தனர். (ஒ–ரி)

## சூறாவளி சீற்றத்தால் படகு முழ்கி எதியோப்பியர்கள் 70 பேர் சாவு



சூறாவளி, அலைகளின் சீற்றம் காரணமாகப் படகு விபத்துக் குள்ளானதில் எத்தியோப்பியா நாட்டைச் சேர்ந்த அகதிகள் 70 பேர் கடலில் மூழ்கி உயிரிழந் தனர். ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த அகதிகள் 70 பேர், பட கில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென விபத்திற்குள்ளானது. இதில் அந்தப் படகில் பயணம் செய்த 70 பேரும் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். எத்தியோப்பியா நாட்டைச் சேர்ந்த அவர்களை ஏற்றிவந்தபடகுயேமன்நாட்டின் மேற்கு கடற்பகுதியில் வந்து கொண்டிருந்தபோது சூறாவளி மற்றும் அலைகளின் சீற்றம் காரணமாகதிடீரெனகவிழ்ந்தது. இதில் படகில் சென்ற 70 பேரும் உயிரிழந்தனர். ஆண்டுதோறும் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள்யேமன்நாட்டுக்குஇடம் பெயர்ந்து செல்வது தொடர்ந்து வருவதாக அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் இந்த வருடத்தில் மட் டும் அகதிகளாக வந்தவர்களில் சுமார் 200 பேர் கடலில் மூழ்கி இறந்துள்ளதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. இது 2011, 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டு களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை விட அதிக மாக உள்ளது என்பது குறிப் பிடத்தக்கது. (ஒ–ரி)

## புகழின் உச்சியில் 9 வயது மொடல் அழகி

ரஷ்யாவைச் சேர்ந்த 9 வயது சிறுமி கிறிஸ்டினா பிமெனோவா சூப்பர் மொடலாக பல ஆண்டுகளாக வலம் வருகிறார்.



மாஸ்கோவில் கால்பந்து வீரரான தந்தைக்கும் மொடல் அழகியான அம்மாவுக்கும் பிறந்த கிறிஸ்டினா பிமெனோவா என்ற சிறுமிக்கு 3 வயதிலேயே மொடலா கும் வாய்ப்பு கிடைத்திருந்தது.

இதையடுத்து மொடலிங்கில் தொடர்ந்து கலக்கத் தொடங்கிய கிறிஸ்டினாவுக் குத்தற்போது 9 வயதுதான் ஆகின்றது. இந்த நிலையில் இந்த இளம் வயதில் அவர் 20, 30 வயதாகும் மொடல் களைப் போல புகழின் உச்சியில் இருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், மொடலுக்குரிய முக அலங்காரம், சிகை அலங் காரம் என எதுவும் செய்து கொள்ளாமலேயே கிறிஸ்டினா உல கின் மிக அழகான மாடலாக வலம் வருகிறார். இணைய உலகில் பிரபலமாக ஜொலிக்கும் இவருக்கு, பேஸ்புக்கில் 20 லட்சம் ரசிகர் கள் இருக்கிறார்கள். மேலும், இவரது தாய் இத்தனைப் புகழோடு இருக்கும்தனது மகளைக்கண்டு பெருமிதம் கொண்டாலும், குழந்தை என்றும் பாராமல், ஆண்கள் மிக மோசமான கருத்துகளை அவரது பேஸ்புக்கில் பதிகிறார்கள் என்ற கவலையும் தனக்கு இருப்பதாகக் கூறுகிறார். (ஒ–ரி)



## ஹொலிவூட் படமாகிறது ஒபாமா – மிச்செல் காதல் கதை

வொஷிங்டன், டிசெ. 9

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா– மிச்செல் ஆகியோ ரின் காதல் கதை விரைவில் ஹொலிவூட் படமாக உருவாக விருக்கிறது.

'சவுத்சைட் வித் யூ' என்ற பெய ரிலான அந்தப் படத்தில், ஒபா மாவாக நடிக்க உள்ள நடிகருக் கான தீவிர வேட்டை நடந்து கொண்டிருக்கிறது.

கடந்த 1989ஆம் ஆண்டில் சிகாகோ வின் சவுத் சைட் என்ற இடத்தில் நடைபெற்ற இவர்களது முதல் சந்திப்பு, தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக இருவருக்கும் இடையேயான காதல் சம் பவங்கள் இந்தப் படத்தில் இடம் பெறவுள்ளன. இயக்குநர் ரிச்சர்ட் டேனி இயக்கும் இந்தப்படத்தின் படப்பிடிப்பு, எதிர்வரும் ஜூலை யில் தொடங்கவுள்ளது. இந்தப் படத்தில் டிகா சம்ப்டர் என்ற இளம் நடிகை மிச்செல் ஒபாமாவாக நடிக்கவுள்ளார். (ஒ–ரி)

## ரஷ்யாவில் பிரான்ஸ் ஜனாதிபதி உக்ரைனில் அமைதி திரும்புமா?

மொஸ்கோ, டிசெ. 9



கிழக்கு உக்ரைனில் மோதல் தவிர்ப்பு கடைபிடிக்கப்பட்டா லும், அரசுக்கும்– கிளர்ச்சியா ளர்களுக்கும் இடையில் அடிக் கடி மோதல் நிலை ஏற்பட்டு வரு கிறது.

இதனையடுத்து அங்கு புதிதாக பேச்சுக்கு உக்ரைன் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அங்கு நிரந்தர அமை தியை ஏற்படுத்தும் நோக்கில் ஐரோப்பிய நாடுகள் நடவடிக் கைகளைமேற்கொண்டுவருகின் றன. இதன்ஒருபகுதியாகபிரான்ஸ் ஜனாதிபதிபிரான்சுவாஹொலாந்தே ரஷ்யா சென்றுள்ளார்.

மொஸ்கோவில்ஜனாதிபதிவிளா டிமிர் புடினுடன் பேச்சு நடத்திய அவர், இந்த விவகாரத்துக்கு கண்டிப்பாக நாம் ஒரு தீர்வு காண வேண்டும் என வலி யுறுத்தினார்.

புடினுடனான சந்திப்பு குறித்து ஹொலாந்தே கருத்து வெளி யிடுகையில், உக்ரைன் விவகா ரத்தில் சிறந்த தீர்வு காண சரி யான நேரமிது.

இந்தப் பேச்சு மூலம் சிறிது பயன் ஏற்படும். இந்த நேரத்தில் வெளி யில் இருந்து எவரும் நம்மை பிரிக்காதவாறு கவன மாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். உக்ரைன் விவ காரத்தில் சிக்கலான பிரச்சினை கள் உள்ளன. அவற்றுக்கு தீர்வு காண இந்தச் சந்திப்பு சிறந்த பங்களிப்பை ஏற்படுத்தும் என்று புடினும் கருத்து தெரி வித்து உள்ளது குறிப்பிடத்தக் கது. (ஒ–ரி)

# பல்சுவை

## தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் மூலகாரணம் அறியாமையே

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




பிறருக்கு உதவி செய்வதைப்பற்றி நினைக்கும் போது பௌதீகத் தேவைகளைத் தீர்க்கும் உதவிகளை மட்டுமே எம்மால் அளிக்க முடிந்தது என்று தவறாக எண்ணி விடக் கூடாது. பௌதீகத் தேவைகளைத் தீர்க்கும் உதவி உதவிகளில் எல்லாம் கடைசியானது மட்டுமல்ல சிறியதும் ஆகும். அது ஒருவனுடைய தேவையை நிரந்தரமாகத் தீர்ப்பதில்லை. பசியால் நாம் படும் துன்பம் சாப்பிட்டால் தீர்ந்துவிடும். ஆனால் பசி மீண்டும் வருகிறது. இனிமேல் தேவைகள் எதுவும் இல்லை என்ற அளவுக்கு நாம் திருப்தியுறும்போதுதான் எமது துன்பம் தீர முடியும். அப்போது பசியால் எம்மை வாட்ட முடியாது. எந்தக் கவலையும் துயரமும் எம்மைப் பாதிக்க முடியாது. எனவே ஆன்மசக்தியை அளிக்கவல்ல உதவியே முதன்மையானது. அறிவை அளிப்பது அடுத்தது. உடலுதவி கடைசியானது. பௌதீகத் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வதால் உலகத்தின் துன்பங்களை எல்லாம் தீர்த்து விட முடியாது . மனிதனின் இயல்பு மாறும் வரையில் இந்த பௌதீகத் தேவைகள் தோன்றிக்கொண்டே தான் இருக்கும். துன்பங்களும் அவனை வருத்திக் கொண்டுதான் இருக்கும். எத்தனை பௌதீக உதவிகளாலும் அதனை முழுவதுமாகத் தீர்க்க முடியாது. இந்தப் பிரச்சினைக்கு ஒரே தீரவு மனிதர்களைத் தூயவர்கள் ஆக்குவது தான். நாம் காணும் எல்லா தீமைகளுக்கும், எல்லா துன்பங்களுக்கும் மூலகாரணம் அறியாமையே. மனிதன் ஒளி பெறட்டும். தூயவனாகட்டும். ஆன்மீக வலிமை பெறட்டும் கல்வி பெறட்டும். அதன்பிறகு மட்டுமே உலகின் துன்பங்கள் தீரும். அதற்கு முன்பு அல்ல. நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டையும் தர்மசாலையாக மாற்றலாம். நாடு முழுவதையும் வைத்தியசாலைகளால் நிரப்பலாம். ஆனால் மனிதனின் குணம் மாறும் வரையில் அவனுடைய துன்பம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.




## இருமலுக்கு இயற்கை வைத்தியம்

கற்பூரவள்ளி இலையின் சாற்றைச் சிறி தளவு சீனி கலந்து கொடுத்தால், குழந்தைகளின் கபம் கலந்த இருமல் நீங்கும். வறட்டு இருமலுக்கு திப்பிலியை வறுத்துப் பொடி செய்து, தேனில் குழைத்துக் கொடுத்தால் நல்ல பயன் கிடைக்கும். இதை அனைவரும் செய்யலாம். வெங்காயம் 150 கிராம், சீனி 150 கிராம் எடுத்து வெங்கா யத்தைப் பொடிப் பொடியாக நறுக்கி தண்ணீர் விட்டு அரைத்துக்கொள்க. பிறகு அதை மெல்லிய துணியில் வடிகட்டுக. இந்த வெங்காயச் சாற்றில் சீனியைச் சேர்த்து, பாகுபதத்துக்குக் காய்ச்சி இறக்கி இந்த வெங்காயப் பாகை ஒரு வேளைக்கு ஒரு தேக்கரண்டி உட் கொண்டால் எவ்வகையான இருமலும் நின்று விடும். பொதுவாக எந்த வகையான இருமலை யும் சீரகம் குணப்படுத்தி விடும். 10 கிராம் சீரகத்தை இலேசாக வறுத்து எடுத்து அம்மியில் வைத்துத் தூள் செய்து அது எந்த அளவு இருக்கிறதோ அந்த அளவு கற்கண்டைத் தூள் செய்து அத்துடன் கலந்து, ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு காலை, மாலை அரை தேக்கரண்டியளவு சாப்பிட்டு வெந்நீர் குடிக்க ஐந்தே நாளில் இருமல் குணமாகும்.






## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 140 | 200 | 140 | 100 | 140 | 140 | |
| கரட் | 120 | 240 | 180 | 200-280 | 200 | 200 | |
| மரவள்ளி | 35 | 40 | 40 | 50 | 40 | 50 | |
| பயிற்றை | 300 | 300 | 200 | 280 | 240 | 200 | |
| பாவல் | 400 | 450 | 160 | 400 | 400-450 | - | |
| கருணைக்கிழங்கு | 45 | 40 | 60 | 60 | 70 | 80 | |
| பெ.வெங்காயம் | 100 | 140 | 120 | 100 | 80-120 | 110 | |
| சி.வெங்காயம் | 80 | 100 | 50-60 | 100-120 | 80 | 100 | |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 30-35 | 60 | |
| தக்காளி | 180 | 200 | 180 | 200 | 160 | 160-140 | |
| வாழைக்காய் | 70 | 50 | 80 | 80-100 | 70 | 80 | |
| கீரை | 50 | 40-60 | 50 | 25-30 | 40-50 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 50 | 40 | 30 | 30 |
| மிளகாய் | 400 | 360 | 300 | 400 | 350 | 600 | 400 |
| புடோல் | 140 | 140 | 90 | 120 | 120 | 80 | 140 |
| கோவா | 150 | 120 | 120 | 160 | 120 | 140 | 140 |
| வெண்டி | 200 | 200 | 120 | 160 | 180-200 | 120 | 180 |
| போஞ்சி | 200 | 240 | 150 | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 300 | 280 | 200 | 280 | 260 | 280 | 200 |
| தேங்காய் | 35-50 | 25-60 | 25-40 | 20-50 | 35-50 | 45-50 | 35-50 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 140 | 140 | 140 | 140 | 140 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 80-100 | 100-120 | 80 | 150 |

## நாளை

**கார்த்திகை-24**
**புதன்கிழமை 10.12.2014**

திதி:சதுர்த்தி மு.இ.09.57 வரை
நட்சத்திரம்: பூசம் முழுவதும்
சுபநேரம்: 04.49-06.19 வரை
இராகுகாலம்: 12.19-01.49 வரை
சங்கடஹர சதுர்த்தி

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 3 | 6 | | | 7 | |
| | | 8 | | 5 | | 2 | 3 | |
| | | | 2 | 7 | 1 | 4 | | |
| 8 | 3 | | | | 6 | 1 | | |
| 5 | | | | | | | | 3 |
| | | 9 | 1 | | | | 5 | 8 |
| | | 5 | 6 | 1 | 7 | | | |
| | 4 | 7 | | 3 | | 8 | | |
| | 9 | | | 2 | 4 | | | 5 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 7 | 5 | 6 | 9 | 2 | 3 | 8 |
| 9 | 5 | 2 | 1 | 8 | 3 | 4 | 7 | 6 |
| 8 | 3 | 6 | 2 | 4 | 7 | 9 | 5 | 1 |
| 4 | 2 | 8 | 6 | 1 | 5 | 7 | 9 | 3 |
| 3 | 1 | 9 | 7 | 2 | 4 | 8 | 6 | 5 |
| 7 | 6 | 5 | 9 | 3 | 8 | 1 | 2 | 4 |
| 6 | 9 | 3 | 8 | 7 | 1 | 5 | 4 | 2 |
| 2 | 7 | 4 | 4 | 5 | 6 | 3 | 8 | 9 |
| 5 | 8 | 4 | 3 | 9 | 2 | 6 | 1 | 7 |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## அறுகம்புல்லின் பயன்கள்



அறுகம் புல் உடலின் தாது வெப்பு அகற்றித் தாகம் தணிப்பானாகவும், சிறுநீர் பெருக்கியாகவும், நோய் நீக்கும் உடல் தேற்றியாகவும் செயற்படுகிறது. கணுநீக்கிய அறுகம் புல் 30 கிராம், மாதுளை இலை 30 கிராம் அரை லீற்றர் நீரில் போட்டு கால் லீற்றராகக் காய்ச்சி 50 மி.லீ. அளவாக 3 மணி நேரத்துக்கு ஒருமுறை குடித்து வந்தால் காது, மூக்கு, ஆசனவாய் இரத்த ஒழுக்கு நிற்கும். வெப்பம் தணியும், மாத விலக்குச் சிக்கல் நீங்கும். அறுகம்புல் 30 கிராம் அரைத்துப் பாலில் கலந்து பருகி வர இரத்த மூலம் குணமடையும். வேண்டிய அளவு அறுகம் புல் எடுத்து சிறிதளவு மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் தடவி சில மணி நேரம் கழித் துக் குளித்து வர சொறி, சிரங்கு, அடங்காத தோல் நோய், வேர்க் குரு, தேமல், சேற்றுப்புண், அரிப்பு, வேனில் கட்டி தீரும்

# எண் சோதிட பலன்கள் உங்களுக்கு எப்படி?



## பிறந்த எண் 1

*ஒருவர் பிறந்த திகதியை ஒற்றையாக்கினால் அது பிறந்த எண்ணாகும். பிறந்த திகதி, மாதம், வருட எண்களைக் கூட்ட ஒற்றையாக்கினால் அது கூட்டு எண். உதாரணமாக 18 ஆம் திகதி ஒருவர் பிறந்திருந்தால் அவருடைய பிறந்த எண் 9. எப்படியெனில் 1+8=9 மாதம். 8, ஆண்டு 1946 எனில் 8+1+9+ 4+6=28 வரும். அத்துடன் திகதி 18யும் கூட்டினால் 28+18=46. ஆகக் கூட்டு எண் 1 என்று வரும்.*

எல்லா எண்களுக்கும் இந்த முதலாம் எண்ணே தலைமை வகிக்கிறது. சூரியக் குடும்பத்தின் தலைவனான சூரியன்தான் இதனை ஆட்சி செய்கிறார். இந்த எண்ணில் பிறந்தவர்கள் பழகுவதற்கும், பார்வைக்கும் கம்பீரமானவர்கள். தன்னம்பிக்கை இவர்களிடம் அதிகம் இருக்கும். இவர்கள் மற்றவர்களைக் கடுமையாக வேலை வாங்குவார்கள். ஆனால் அதேசமயம் மனித நேயத்துடனும் அவர்களுடன் நடந்து கொள்வார்கள். மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்க மாட்டார்கள். தங்களின் பிரச்சினைகளைக் கூடத் தாங்களே சமாளித்துக் கொள்ளும் திறமையுடையவர்கள். அடுத்தவர்களுடன் விவாதித்தால் கௌரவம் போய்விடும் என்று நினைப்பவர்கள்.

அரசியல் அல்லது அரசு சார்ந்துள்ள தொழில்கள், உத்தியோகங்கள் இவர்களுக்கு நிச்சயம் ஏற்படும். ஒன்றின் எண் ஆதிக்கம் நன்கு அமைந்திருந்தால், (பெரும்பாலும்) இவர்கள் அரசியலில் பெரும் செல்வாக்குடன் விளங்குவார்கள். ஆனால் நாணயமான அரசியல்வாதிகள் என்று பெயர் எடுப்பார்கள். (இந்த எண்காரர்கள் மட்டும் தான்). மற்றவர்கள் அரசியலில் ஈடுபட்டால் சுயநலம், பண வேட்கையும் அதிகமாகக் கொண்டிருப்பார்கள். அதிகாரம் காண்பிப்பதில் இவர்கள் மிகவும் ஆசை கொண்டவர்கள். மற்றவர்களால் மதிக்கப்படுவார்கள். கடினஉழைப்பும், கண்டிப்பான நடத்தையும் இவர்களைத் தலைமை ஸ்தானத்துக்குக் கொண்டு செல்லும்.

மனதில் ஊக்கமும், எதையும் தாங்கும் மனோபலமும் கொண்டவர்கள். தோல்வி ஏற்படுவதைத் தாங்கிக் கொண்டு மீண்டும் மீண்டும் மனத்துணிவுடனும், புதிய திட்டத்துடனும் சலிக்காமல் செயலாற்றுவார்கள். புதியசெய்தியை ஆராய்வதில் மகிழ்ச்சியடைவார்கள். நேர்மையானமுறையிலேயே எதையும் அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். தாங்கள் உடுத்தும் உடைகள் மற்றும் அணியும் பொருள்கள் மிகவும் மதிப்பாகத் தெரிய வேண்டும் என்று – அதற்காகச் செலவு செய்வார்கள். மன மகிழ்ச்சிக்காக தாராளமாகச் செலவு செய்யத் தயங்காதவர்கள்.

தாங்கள் உதவுவதைக்கூட வெளிப்படையாகச் சொல்லி விளம்பரம் அடைய ஆசைப்பட மாட்டார்கள். சூரிய புத்திரன் கீர்ணனின் இவரது ஆதிக்கம் நிறைந்தவர்கள். எதிரியுடன் நேரடியாகப் போரிட்டு வெற்றி பெற வேண்டும் என்று விரும்புவார்களே தவிர குறுக்கு வழியைத் தேடமாட்டார்கள். இதனால்தான் சகுனியின் சதித் திட்டங்களை எல்லாம் கர்ணன் எதிர்த்துக் கொண்டே இருந்தான். தங்களின் இரக்க குணத்தால் பல பிரச்சினைகளையும் சந்திப்பார்கள். ஆனால் நல்ல பெயரும் புகழும் நிச்சயம் அடைவார்கள். இவர்தான் எனது நண்பன், இவர்தான் எனது எதிரி என்று எதையும் மறைத்து வைக்காமல் கூறி விடுவார்கள். மிகுந்த ரோஷமும், எதையும் எடை போடும் குணமும் உண்டு.

வாக்குறுதி கொடுத்துவிட்டால் எப்பாடுபட்டாவது அதை நிறைவேற்றுவார்கள். பொதுவாகச் சோம்பேறித் தனமும், பொறாமையும் அவர்களுக்குப் பிடிக்காது. அடுத்தவர் பொருள்களையும் சொத்துக்களையும் வெறுத்து ஒதுக்கி விடுபவர்கள் இவர்களே. படிப்பறிவை விடப் பட்டறிவு (அனுபவம்) அதிகம் உண்டு. இந்த எண் சுறுசுறுப்பையும், படிப்பில் ஆர்வத்தையும் கொடுக்கும். மலைவாசஸ் தலங்களும், பெரும் பயணங்களும் இவர்களுக்கு மிகவும் பிடிக்கும். எந்த விடயத்திலும் நேர்மையையும், வாக்குறுதியையும் கடைப்பிடிப்பார்கள். இலாபத்துக்காகத் தங்களது மனச்சாட்சியை ஒதுக்க மாட்டார்கள். தேவையானால் பெருந்தன்மையுடன் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து விடுவார்கள். ஆனால் மற்றவர்கள் அலட்சியம் செய்தால் மட்டும் இவர்களால் தாங்க முடியாது. அவர்களை உண்டு அல்லது இல்லை எனச் செய்து விடுவார்கள். ஆனால் நேர்மையான வழியில்தான் நடப்பார்கள். பிறருக்குத் தீங்கு செய்ய மாட்டார்கள். எப்படிப்பட்ட எதிரியும் நேராக வந்து மன்னிப்புக் கேட்டால், உடனே மன்னிக்கும் மாண்பு படைத்தவர்கள். மீண்டும் அவர்களுக்கு உதவியும் செய்வார்கள். பொதுவாகத் திருமணம் காலம் கடந்தே நடைபெறும். காதல் விடயங்களில் ஈடுபாடு ஏற்படும் என்றாலும், ஏமாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மனைவிக்கும் நேரம் ஒதுக்கி அவளை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும்.

### உடல் அமைப்பு

நடுத்தரமான உயரம், கம்பீரமான பார்வை, எடுப்பான நெற்றியும் உண்டு. நீண்ட தோள்களும் நன்கு வளைந்த புருவமம் உண்டு. உறுதியான பற்கள் உண்டு. ஆண்தன்மை உடைய தோற்றம் உண்டு. நடையில் ஒரு கம்பீரம் காணப்படும். பெண்களாக இருந்தால் ஓரளவு ஆணாதிக்க உடல் அமைப்பும், குணங்களும் உண்டு. கணவனைத் தனது ஆதரவுக்குள் கொண்டு வருவார்கள். அவரை நல்ல வழியில் உயர்த்தி விடுவார்கள். அன்பையும் கடினமாகவே காட்டுவார்கள். நல்ல தலை முடியும் உண்டு. கண்களில் கூச்சம், பார்வைக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. சதைப் பிடிப்பான தோற்றம் உண்டு. அடிக்கடி தலைவலி ஏற்படும்.

### அதிர்ஷ்ட நாள்கள்

4, 13, 22, 31 ஆகிய திகதி களில் பல நல்ல பலன்கள் தானே வரும். ஆனால் நாம் தேடிச் சென் றால் தலைகீழான பலன்களே ஏற்படும். 2, 7, 11, 16, 20, 25, 29 திகதி களில் ஓரளவு நல்ல பலன்கள் ஏற்படும்.





# தாலியின் மகத்துவம்

தெய்வீகக் குணம், தூய்மைக் குணம், மேன்மை, தொண்டு, தன்னடக்கம், ஆற்றல், விவேகம், உண்மை, உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்ளுதல். இத்தனைக் குணங்களும் ஒரு பெண்ணிடம் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் ஒன்பது இழைகள் கொண்ட திருமாங்கல்யச்சரடு அணியப்படுகிறது.

தாலம் பனை என்ற பனை ஓலையினால் செய்த ஒன்றையே பண்டைய காலத்தில் மணமகன் மணமகள் கழுத்தில் கட்டி வந்தபடியால் இதற்குத் தாலி என்ற பெயர் வந்தது. தாலமாகிய பனை ஓலையினால் செய்தது என்பது இதன் பொருள்.

பனை ஓலைத் தாலி அடிக்கடி பழுதுபட்டதால் நிரந்தரமாக இருக்க உலோகத்தால் ஆன தாலி செய்து பயன்படுத்தினர். பின்னாளில் அதனைப் பொன்னால் செய்து பொற்றாலி ஆக்கினர். ஆயின் தாலியின் உண்மையான அடையாளம் பொன்னில் செய்வதால் அல்ல. வெறுமே ஒரு விரலி மஞ்சளை எடுத்துக் கயிற்றால் கட்டி கழுத்தில் முடிச்சுப் போடுவது கூடத் தாலி தான். தாலியின் சூக்குமம் மஞ்சள், கயிறு, கட்டுதல் ஆகியவற்றில் அடங்கி இருக்கிறதே ஒழிய, பொன், பணம், சங்கிலி என்பதில் இல்லை. இன்னார் மகன், இன்னார் மகளை, இன்னார் சம்மதத்துடன் இன்னார் முன்னிலையில் இந்த நேரத்தில் இந்நாளில் கல்யாணம் செய்துகொள்வதாக அனைவரும் கையொப்ப மிட அந்த தாளினை கயிற்றில் கோர்த்து மணமகளின் கழுத்தில் மணமகன் கட்டியதாக ஆய்வு சொல்கிறது. சுத்துரு, சுத்திரி, மாங்களியம், மங்கலியம், மங்கலவணி என சொல் லும் தாலியை – மண அடையாளவில்லையைக் குறிக்கும்.




# பெண்கள் மூக்குத்தி அணிவது எதற்கு?

மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்த துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால், அந்த தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும். அதுமட்டுமல்ல, மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும். சிறுமிகளுக்கு மூக்குத்தி அணிவிப்பது கிடையாது. பருவப் பெண்களுக்கே மூக்குத்தி அணிவிக்கப்படுகிறது. பருவ வயதை அடைந்த பெண்களுக்கு தலைப்பகுதியில் சிலவிதமான வாயுக்கள் இருக்கும்.

இந்த வாயுக்களை வெளிக்கொணருவதற்கு ஏற்படுத்தப்பட்டதுதான் இந்த மூக்கு குத்துவது. மூக்கு குத்துவதால் பெண்களுக்கு ஏற்படக்கூடிய சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந் தரவுகள், பார்வைக் கோளாறு சரி செய்யப்படுகின்றன. இன்றைக்கு நாகரிகம் வளர்ந்துவிட்டதால் சில பெண்கள் வலதுப் பக்கம் மூக்குத்தி அணிகிறார்கள். ஆனால், சாஸ்திர ரீதியாக இடப்பக்கம் தான் பெண்கள் மூக்குத்தி அணிய வேண்டும். இடது பக்கம் குத்துவதால் சில மாற்றங்கள் ஏற்படும்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் மு.திருநாவுக்கரசு

ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி,
புலவர், விகடகவி, கலாபூஷணம்.

புத்தகமும் நீயும் புலமைக் கடல் குடைந்து
நித்தமுமே நீராடி நீ நடந்த நீரோடை
எத்தனையோ எண்ண அலையால் எமை உதைத்து
நித்திரையைத் தின்று நின்று நிழலாடுதப்பா!
ஓயா உழைப்பு உடலலுப்புப் பாராமல்
தாயாய் தவமாய் தந்தையாய் தாத்தாவாய்
வாயாரப் புன்னகைத்து வார்த்தைகளால் எமை வருடி
சாயாப் பெருவிருட்சமாய் நின்று நிழலளித்தாய்
அந்தப் பெருவிருட்சம் அப்படியே சாய்ந்ததுமேன்?
நண்பர் குழாம் சுற்றம் நல்லறிஞர் பாவாணர்
பண்புடையோர் எல்லோரும் பாராட்ட வாழ்ந்தவனே,
சூழ்ந்திருப்போர் எல்லோரும் சுகித்து இரசிக்க நல்ல
ஆழ்ந்த கருத்து நிறை நகைச்சுவைகள் நல்குவையே
கரவறியா நெஞ்சோடு கலகலவென்றே பேசிப்
பரவசத்தைத் தந்திட்ட பண்டிதனே!
உன்திறனை,
நாடு நகரறியும் நல்லறிஞர் தாமறிவார்
பாடும் புலவர் பலரறிவார்; அரசறிந்து
பீடுபெறு கலாபூஷணமும் தந்தார்கள்
வீடுவெளிச்சதையா நீ இதனைக் காணவில்லை,
எம்மையெல்லாம்
வாடி வதங்கவிட்டு ஓர் நொடியில் ஓடிவிட்டாய்!
கூடிக்குலாவிக் குதூகலித்த காலமெல்லாம்
ஓடி வெறுங்கனவாய் ஒரு கணத்தில் போனதையா!
பேச்சழகை உந்தன் பெரும்புலமைச் சாடல்களை
ஆச்சரியத்தோடு அமரர் குழாம் கேட்டிருக்க
நித்தியமும் நீ இறைவன்
நிழலடிக் கீழிருப்பாய்

அப்பாவின் ஆவி அவ்வுலகு சென்றதென்று
ஆறாத்துயரத்தில் நாம் வருந்தும் வேளையிலே
அன்போடு வந்து ஆறுதல் சொன்னவர்க்கும்,
ஆழ்ந்த அனுதாபம் அறிவித்த அன்பர்க்கும்,
மரணச்சடங்கு தன்னில் கலந்திட்ட நல்லவர்க்கும்,
உதவிகள் பல செய்து உணவுதந்த உத்தமர்க்கும்,
பாசமுடன் வந்து பங்களிப்புச் செய்தவர்க்கும்,
அன்பு கலந்து அழியா எம் நன்றியினை
நல்லதமிழ்ப் பண்போடு நாம் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்.
127/7A, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(54761)(12...

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ் மாவட்டச் செயலக நலன்புரி கழகத்தின் உறுப்பினரும், மாவட்டச் செயலக, களஞ்சியக் கிளையின் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி சசி பாரதி விஜயகுமார் அவர்களின் தந்தை

### சின்னத்துரை பரஞ்சோதி

அவர்கள் 07.12.2014 இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத்தினருக்கும் மாவட்டச்செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(54764) (8-3) யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி கழகம்

---

## நினைவழியா நினைவுகளுடன் 7ஆம் ஆண்டில் ...

மலர்வில் 03.08.1933



உதிர்வில் 27.11.2007

### அமரர் தம்பையா கார்த்திகேசு

ஆணிவேராய் நீங்கள் இருக்கின்றீர்கள்!
வீழாமல் நாம் நிற்பதற்கே!
ஆண்டுகள் ஏழு ஓடிமறைந்தாலும்
நம் உறவு மெகா தொடர்தான்.

கைதடி மேற்கு,
கைதடி. (54756)(8-3) குடும்பத்தினர்.

---

## எட்டாத தூரத்தில் எட்டாம் ஆண்டு நினைவு

### அமரர் சிவசாமி ரஞ்சன்

(முன்னாள் ஊழியர்- பெற்றோலியக் கூ.தாபனம்)



மண்ணில் 10.05.1959 மறைவில் 07.12.2006

திதி: திருதியை [09.12.2014]

எட்ட முடியாத தூரம்
எண்ண முடியாத துயரம்
சொல்ல முடியாத வேதனை
காக்க முடியாத சோதனை
தர வேண்டும் உங்கள் அன்பை
நினைக்க வைக்கின்றது உங்கள் சிந்தனையை
எண்ணாத நாளில்லை பிள்ளைகள்,
அப்பாவின் அன்பிற்காக

11/5, செம்மணி வீதி,
நல்லூர். மனைவி, பிள்ளைகள்.

---

## 29ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கந்தையா பாலச்சந்திரன்



வையத்துள் 25 . 07 . 1941

வானுலகுள் 11 . 11 . 2014

திதி: அபரபக்க பஞ்சமி

கடந்த 11.11.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அனைவரும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதலியகோயிலடி,
தேவாலய ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு. குடும்பத்தினர்.

---

## பளைக்கோட்ட மாணவருக்கு கருத்தரங்கு

பளை, டிசெ.9

பளைக் கல்விக் கோட்டப்பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு அண்மையில் பளை மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமைகள், பாதுகாப்பு, வீதிப் போக்குவரத்து விதிமுறைகள், சட்டம் போன்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

பளை பொலிஸ் நிலையத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் சட்ட மருத்துவ நிபுணர், வீதிப் போக்குவரத்து பரீட்சகர், சிறுவர் பாதுகாப்பு அலுவலர் உட்பட பலர் கருத்துரை வழங்கினர். (வ-9)

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ.9

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக வைத்திலிங்கம் கைலைநாதன் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

உள்ளூராட்சி கூட்டுறவு அபிவிருத்தி கைத்தொழில் சமூக நலத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளரால் கடந்த ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதிய கடிதத்துக்கு அமைவாகவடக்குமாகாண கூட்டுறவு ஆணையாளரால் இந்த நியமனக் கடிதம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 29 வருடங்களாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி வரும் கைலைநாதன் சிறந்த சைக்கிள் ஓட்ட வீரனும் சமூக சேவையாளரும் ஆவார்.

இவர் அண்மையில் நாட்டில் உள்ள முக்கிய இந்து ஆலயங்களுக்கு சைக்கிளில் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-17)

# விளம்பரங்கள்

## ஐ.தே.க.பொதுச் செயலர் காசீம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலராக நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுச்செயலராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க, அரச தரப்புக்குத் தாவியதையடுத்தே, இந்த நியமனம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

(ற-5)

## இராணுவத்தின் சாகச நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.9

இலங்கை இராணுவத்தின் சாகசக் கண்காட்சி நாளை புதன் கிழமையும், நாளை மறுதினம் வியாழக்கிழமையும் துணுக்காய் பொது விளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுகளை இரு தினங்களும் பிற்பகல் 2 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை பொதுமக்கள் பார்வையிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-14)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 05.01.1946 | மறைவு 10.11.2014



அமரர்

### வல்லிபுரம் மகாலிங்கம் (மகான் - ஆசாரி)

கடந்த 10.11.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(54775)(10.6)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 26ஆவது பிறந்த நாளும்

தோற்றம் 26 . 11 . 1988 | மறைவு 13 . 12 . 2011



### செல்வநாயகம் கோபிநாத்

(முன்னாள் மாணவன்-விளையாட்டு விஞ்ஞானப் பிரிவு. யாழ். பல்கலைக்கழகம்)

திதி-திருதியை 09.12.2014




கோகிலத்தின் கண்ணனாக - எம்
குடும்பக் கோபுரத்தின் கலசமாக,
தாய்மார்க்கோர் தவப்புதல்வனாக
தரணியிலே நீ இருந்தாயடா
கூடி வாழ்ந்த உன் குடும்பத்தில் நீ ஓர்
குழந்தையாய் வரவேண்டுமென்று
கோடிமுறை வேண்டுகின்றோம்- தெய்வங்களை
ஓடி வந்து எமது உள்ளம் குளிர்விப்பது எப்போதடா?

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவு அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 02 . 02 . 1950 | இறப்பு 10 . 11 . 2014



அமரர்

### அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா

கடந்த 10.11.2014 ஆம் திகதி இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தந்தையின் 31ஆம் நாள் நினைவு, நாளை 10.12.2014 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக செபிக்குமாறும் பின்னர் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய விருந்தில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின் றோம்.

மேலும் எம் தந்தையின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியோர்க்கும் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், வெளியூர் மற்றும் வெளி நாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி மூலமும் மலர் வளையம் வைத்தும் அஞ்சலி செலுத்தியோருக்கும் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய வடக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், யாழ். பிரதேச செயலகம், முல்லைத்தீவு மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெற்றிலைக் கேணி,
முள்ளியான்,
077 8736181

குடும்பத்தினர்.

(54777)(10.6)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### விஸ்வகீர்த்தி லயன் குழந்தைவேலு நடராசா

மலர்வு 20.04.1953 | உதிர்வு 20.11.2013

திதி: கார்த்திகைத் திருதியை (09.12.2014)



எங்கள் ஒளி விளக்காய் திகழ்ந்த
திரு விளக்கே!
நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வமே!
மற்றவர் மனதைக்
கொள்ளை கொள்ளும்
இனிய சுபாவம் உள்ளவரே!
கணப்பொழுதிலும் ஆறவில்லை
எம் துயர்
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து
ஓர் ஆண்டு சென்றாலும்
உங்களைத் தினம் மறவோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

நகுலகிரி,
கச்சாய் றோட், கொடிகாமம்.

(சி/18086)(4.3.6)

## மரண அறிவித்தல்



**திருமதி விமலாதேவி குணநாயகம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

நவாலி கிழக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி குணநாயகம் 05.12.2014 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (ஆயுள்வேத வைத்தியர்) - தவமணி அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - தங்கைச்சிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், குணநாயகம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உமாசங்கர் (முன்னாள் கட்டட மேற்பார்வையாளர்) மற்றும் கலைமகள் (மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியை), திருமகள் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தவராஜா (MSS - VO), சுதாகர் (கணக்காளர் - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், ஜனகன், சும்சா, அகரன், ஔவை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரையாம்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.
(54766) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவபாதம் இலட்சுமி



விபுலானந்தர் வீதி, மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம் இலட்சுமி (07.12.2014) ஞாயிற்றுக் கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் சிவபாதம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாதம் ஜெயரட்ணம் அவர்களின் அன்பு தாயாரும், ஞானேஸ்வரியின் (கனடா), அன்பு மாமியாரும், ஜெயவதனன் (கனடா), ஸ்ரீபிரியா (கனடா), ஜெயகீதா (கனடா), ரமேஷ் (கனடா), ஜெயதீபன் (கனடா) ஆகியோரின் பேரனும், உதேஷ் (கனடா), ஆதீஸ் (கனடா), தனுசன்(கனடா), பவின் (கனடா) ஆகியோரின் பாட்டியும், காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம், சின்னத் தங்கம், கணபதிப்பிள்ளை, சுந்தரம், மாணிக்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக போதி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.
T.P:021 221 1835
இ.தங்கராஜா (பேறாமகன்-கனடா)
T.P:0099054553273, 004164644339 (54773) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற உப அதிபர், சமாதான நீதிவான்)

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற உப அதிபர், சமாதான நீதிவான்) நேற்று முன்தினம் (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன் தினம் (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்னாரின் மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.
(54767)(4.3.0)

தகவல்:
குடும்பத்தினர்.

## 102 ஆவது வயதில் காலமான ஓய்வூதியர்

வரணி, டிசெ.9

அரச சேவையில் இருந்து இளைப்பாறிய பின்பு தொடர்ந்து பல வருடங்களாக இளைப்பாற்றுச் சம்பளம் பெற்று வந்த ஒருவர் தனது 102 ஆவது வயதில் காலமான சம்பவம் வரணிப் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. வரணி இடைக் குறிச்சி பிரதேசத்தைச் சேர்ந்த சமூக சேவையாளரும் முன்னாள் ஆசிரியரு மான வேலுப்பிள்ளை தம்பு என்பவரே அண்மையில் காலமானார்.

அவர் வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிர மணிய வித்தியாலயத்துக்கு அமைவிடக் காணியை அன்பளிப்பாக வழங்கியும் தனது 100 ஆவது வயது பிறந்ததின ஞாப கார்த்தமாக குறித்த பாடசாலையின் ஒரு பகுதி எல்லைச் சுவரைக் கட்டிக் கொடுத் தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(வ-122)

## மோ. சைக்கிளில் சென்ற பெண் தவறி வீழ்ந்து காயம்


மோட்டார் சைக்கிளின் பின்புறம் ஏற்றப் பட்டிருந்த பொருள்களுடன் பயணித்த பெண் ஏ-9 வீதியில் மோட்டார் சைக் கிளிலிருந்து வீழ்ந்து காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி கோயி லுக்கு முன்பாக இடம்பெற்றது.

காயமடைந்த பெண்ணை அந்த வழியே வந்த படையினர் தமது வாகனத்தில் ஏற்றி வந்து சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்த்தனர். சாவகச்சேரி கெற்பேலியைச் சேர்ந்த நந்தகுமார் தயா ளினி (வயது-31) என்பவரே காயம டைந்தவராவார்.

(வ-9)

# மரண அறிவித்தல்



## குழந்தைவேலு சிவப்பிரகாசம்

(முன்னாள் உரிமையாளர் - சிவப்பிரகாசம் அன்சன்ஸ் )

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் 466, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு சிவப்பிரகாசம் நேற்றுமுன்தினம் (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சண்முகதாஸ், குகதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி, விஜியலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமனும், பூமிஜா, பிரணவிமகேசிஜா, விதுஷன், இந்துஷன், மதுஷன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சௌந்தரம், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் கமலாதேவி, தவமணிதேவி, இராமச்சந்திரன், இராசலிங்கம், இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சண்முகராசா மற்றும் கிருஷ்ணவேணி, நடேசன், வரதராஜா, காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**466, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
T.P: 021 222 6220

(54748)(12.3)

**தகவல்: குடும்பத்தினர்**

## யானை தாக்கி பெண் காயம்

பின்னவல யானைகள் சரணாலயத்துக்கு சென்ற வெளிநாட்டு பெண்ணொ ருவர் யானையின் தாக்குதலுக்கு இலக்கா கியுள்ளார்.

யானைகளைப்பார்வையிட குறித்த சரணாலயத்துக்கு வெளிநாட்டுப் பெண் சென்றிருந்தபோது, அவருக்குப் பின்னால் வந்த யானையொன்றினால் தாக்கப்பட்டு இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யானையின் தாக்குதலுக்கு இலக்கான பெண் அமெரிக்கப்பிரஜை யாவார்.

குறித்தபெண்சிகிச்சைகளுக்காக கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற)

## மனித உரிமைகள் தின நிகழ்வுகள் நாளை மாலை

யாழ்ப்பாண சர்வமதக்குழுவினர் முன்னெடுக்கும் மனித உரிமைகள் தின நிகழ்வுகள் நாளை பி.ப 3 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சமயத் தலைவர்கள், சட்டத்தரணிகள், சமூகத் தலைவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் தரப்புக்களின் உரைகள் நடைபெறவுள்ளன என்றும், அந்த உரைகள் தொகுக்கப்பட்டு சஞ்சிகையாக வெளியிடப்படும்என்றும்யாழ். சர்வமதக் குழு தெரி வித்தது.

(ற-135)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

தோற்றம் ★ 10 . 07 . 1929



மறைவு ★ 08 . 12 . 2014

### குலசேகரம் கலியாணசுந்தரம்

புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குலசேகரம் கலியாணசுந்தரம் 08.12.2014 காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தில் உள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/18217) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி கணேசு

(முன்னாள் வெலிங்டன் தியேட்டர் ஊழியர்)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணேசு நேற்று முன்தினம் (07.12.2014) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தங்கமுத்து தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், கோணேஸ்வரியின் பாசமிகு கணவரும், மனோகரன் (மனோ வீடியோ, கொழும்பு -13), பாமினி, மதனாகரன் (LOLC யாழ்ப்பாணம்) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், பாமினி, சிவதனேஸ்வரன் (எரி பொருள் நிரப்பு நிலையம், பரமேஸ்வரா சந்தி), ஜெசிந்தா ஆகி யோரின் அன்பு மாமனும், பிரசாந்தினி, தக்சாயினி, வைஷ்ண வன், சஜீவி, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை ந.ப 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்.
T.P: 021 225 5629,
077 361 7021 (மதன்)
0777765929 (மனோ)

இல. 36, முத்தவிநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(54782) (10.6)

## மரண அறிவித்தல்

### யோவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை செல்வராசா



இளவாலை போயிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட யோவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை செல்வராசா கடந்த (05.12.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பார்வைக்காக அவரது இல்லத்தில் (போயிட்டி) வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு போயிட்டி புனித லூர்து அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் போயிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பேரன்-தயா
தொடர்புகளுக்கு:
077 5590 392, 021 2250 647

சண்டிலிப்பாய் றோட்,
பண்டத்தரிப்பு.

(54776) (10.6)

## மரண அறிவித்தல்கள்

### செல்லமுத்து பொன்னம்பலம்



பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லமுத்து பொன்னம்பலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (07.12.2014) காலமானார்.

அன்னார் செல்லமுத்து-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், ஆறுமுகம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பொன்னுவின் பாசமிகு கணவரும், தங்கரத்தினம், செல்வநாதன், சறோஜினி தேவி தேவராசா (கனடா), இராசரத்தினம் (கனடா), சாந்தினிதேவி, யோகராசா, சிவதேவி, பாமராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், சின்னத்தம்பி, சரவணமுத்து, பொன்னு, கந்தவனம், சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தையா, யோகேஸ்வரி, சிவபாதம், கிருபாணி (கனடா), குகர்ாசா, சாந்திமலர் (கனடா), யாழினி, லோகேஸ்வரன், ஸ்ரீசைலஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ரஜனி (ஆசிரியர்-புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), முகுந்தன் (லண்டன்), அஜந்தன் (லண்டன்), ராதிகா, வாகினி, திவிகன், தினோஜன், மகிபன், சிவேகன் (லண்டன்), வகீசன் (கனடா), அபிசன் (கனடா), கபிஷன் (கனடா), தேனுஜா (முகாமைத்துவ உதவியாளர்-யாழ். மாநகரசபை), கிரிசன், சிவரிசன், சிவாஜன், கிரிசனா, கிரிசானி, யோகிதன், யாழிதன், பிரவீனன், பிரவீனா, நிரோஜன், விதுசா, யருசா, சாருகேஷ்(லண்டன்), சரணிகா (லண்டன்), பிரதீபன் (முகாமைத்துவ உதவியா ளர்-யாழ். மாநகரசபை), ரவிராஜ், பவதர்சினி (லண்டன்) ஆகியோரின் பேரனும், அஷ்வின், அபிலாஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பத்தமேனியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேச் லேன்,
பத்தமேனி, அச்சுவேலி.

(C/18211) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.



### தில்லையம்பலம் சிவனேஸ்வரன்

(பிரபல புகையிலை வர்த்தகர்)

வத்தனை, புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் பழவத்தை, வியாபாரி மூலையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சிவனேஸ்வரன் 08.12.2014 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-தங்கம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகமணி, கனகம்மா மற்றும் சிவமூர்த்தி, சிவசக்தி, சிவகுமார், சிவமலர், சிவமணி, ஆகியோரின் சகோதரரும், நந்தகுமார், சிறீஸ்கந்தராசா, விக்கினேஸ்வரன் (லண்டன்), பரமேஸ்வரி, லோகநாதன்(சுவிஸ்), லோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வறஞ்சினி, சரோஜாதேவி, தாரணி (லண்டன்), மதியழகன் (சாறி பலஸ் மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்), கிருபாகரன் (லண்டன்), சுமதி (சுவீடன்) ஆகியோரின் மாமனாரும், நிரோஷிகா, நிலக்ஷிகா, சாருகாந், கஜானன், கஜானா, யதுசன், வர்ணிஷா, வைஸ்ணா (லண்டன்), மதுமிதா, கவீன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழவத்தை,
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

(62097)(4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.
077 623 8656, 077 958 2698

## செய்திகள்

# மஹிந்தவை வீட்டுக்கு அனுப்புவோம்

## ஜே.வி.பி. அழைப்பு

கொழும்பு, டிசெ.9

மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது ஜே.வி.பி. அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பரப்புரைகளில் ஈடுபடப்போவதில்லைஎன்றுதெரிவித்துள்ளஅவர்,எதிரணிவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவைப் பகிரங்கமாக ஆதரிக்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

ஜனவரி 8 ஆம் திகதி மஹிந்தவைத் தோற்கடிக்கும் வகையில் வாக்களிக்குமாறு நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன். ஜே.வி.பி. வேறு எந்த வேட்பாளருக்கும் ஆதரவாகப் பரப்புரைகளில் ஈடுபடாது என்றும் அவர் தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் பயனில்லை. எரிபொருளுக்கானவிலைகளை குறைக்காது அறவீடு செய்யப்பட்டு வரும் பெரியளவிலான வரியை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்."– என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

"அரசு பெருமளவில் தேர்தல் விதி மீறலில் ஈடுபட்டு வருகின்றது. சட்டவிரோதமான முறையில் ஜனாதிபதியின் உருவப்படம் பொறிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான பதாகைகள் நாடு முழுவதிலும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அமைச்சர்கள் சிலர் அரசை விட்டு வெளியேறிச் சென்றமை,ஜனாதிபதிக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அரசு கடுமையான வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ளது.

சகோதரரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசியல் மேடைகளில் ஏறிப் பேசுகின்றார். தேர்தல் பரப்புரைக்காக அரசு பெருமளவு பணத்தைச் செலவிடுகின்றது"– என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ற)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று மோட்டார் சைக்கிள் பேரணி ஒன்றை நடத்தியுள்ளார். கொட்டகலையில் இருந்து தலவாக்கலை நகர வழியாக பூண்டுலோயா, கொத்மலை ஆகிய பிரதேசங்கள் ஊடாக இந்தப் பேரணி நடத்தப்பட்டது. அதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதிக்கு தமது ஆதரவை வழங்குவதாக நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது. (ற)

## ஜனாதிபதிக்காக விசேட விமானம்

### ஸ்ரீலங்கன் விமான சேவை திட்டம்

ஜனாதிபதியின்பயணங்களுக்கு பயன்படுத்தும் நோக்கில் விசேட விமானமொன்றைவடிவமைக்க ஸ்ரீலங்கன் விமான சேவை வேண்டுகோள் விடுத்துள்ளது. பிரான்ஸை தலைமையகமாகக் கொண்டுள்ள எயார் பஸ் நிறுவனத்திடம் ஸ்ரீலங்கன் விமான சேவை இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளது.

கலந்துரையாடல் அறை, படுக்கை மற்றும் ஓய்வறை வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் இந்த விமானத்தை வடிவமைக்குமாறு எயார் பஸ் நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரின் வெளிநாட்டுப் பயணங்களின் போது இந்த பிரத்தியேக விமானத்தைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளனர் என்று ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ற)

## கூட்டத்துக்கு வராத அமைச்சர் பந்துல

### ஆளும் கட்சியினர் அதிருப்தி

கொழும்பு, டிசெ.9

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக ஹோமாகமவில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், அமைச்சர் பந்துல குணவர்த்தன அதனைப் புறக்கணித்தார் என்றுகூறப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஹோமாகம தொகுதி அமைப்பாளராகவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன செயற்படுகிறார். இந்தநிலையில் அவர் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளமை ஆளுங்கட்சி உறுப்பினர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## சிறுமியின் சிறுகுடலில் 56 குடற் புழுக்கள்

### சிகிச்சை பயனின்றிச் சாவு

கொழும்பு, டிசெ.9

சிறுமியொருவரின் சிறுகுடலில் 56 குடற்புழுக்கள் சிக்கியிருந்தமை காரணமாக சிறுமி உயிரிழந்த சம்பவம் ஒன்று ஹங்குரன்கெத்தை ஹேவாஹெட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹேவாஹெட்ட முல்லோய லயன் வீட்டுப் பிரிவில் வசித்து வந்த 4 வயதான சிறுமி கடந்த 2 ஆம் திகதி அதிக வயிற்று வலி காரணமாக ரிகில்லகஸ்கட மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவர்களால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையின் மூலம் சிறுமியின் குடல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. அதையடுத்து மருத்துவர்களால் சிறுமிக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் சிகிச்சைகள் பயனின்றி சிறுமி உயிரிழந்தார். சிறுமியின் சிறுகுடலில் குடற் புழுக்கள் உருண்டை வடிவில் சிக்கியிருந்ததன் காரணமாகவே அவர் உயிரிழந்ததாக மேலதிக பரிசோதனைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

4 தொடக்கம் 5 அங்குலங்கள் வரை குறித்த குடற்புழுக்கள் சிறுகுடலில் நிலைகொண்டிருந்தன என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். சிறுமியின் உடல் நலக்குறைவு காரணமாக இந்த குடற் புழுக்கள் உற்பத்தியாகியிருக்கலாம் என்று நுவரெலிய பொது மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி முதித்த குடாகம தெரிவித்துள்ளார். (ற)

## பஸ் கட்டணத்தில் மாற்றம் வராது

கொழும்பு, டிசெ.9

எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணங்களில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது என்று பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்தமுறைஅறிவிக்கப்பட்டுள்ள விலைக்குறைப்புக்கு ஏற்ப பஸ் கட்டணங்களில் மாற்றம் செய்ய முடியாது என்று தெரிவித்துள்ள தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனத்தின் பொதுச் செயலர் அன்ஜன பிரியன்ஜித், ஒரு லீற்றர் டீசலின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளபோதும், 12 விடயங்களை அடிப்படையாகக் கொண்டே பஸ் கட்டணம் தீர்மானிக்கப்படுகின்றது என்று சுட்டிக்காட்டினார்.

அவற்றில் டீசலின் விலை மாத்திரமே குறைக்கப்பட்டுள்ளது என்று கூறிய அவர், ஏனையவற்றின் விலைகள் நூறு சதவீதமாக அதிகரிக்கப் பட்டுள்ளதால் பஸ் கட்டணங்களைக் குறைக்க முடியாதுள்ளது என்றும் கூறினார். டீசலின் விலை மேலும் 10 ரூபா வால் குறைக்கப்படுமாயின் பஸ் கட்டணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து ஆலோசிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பஸ் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என்றும், இந்த ஆண்டு நவம்பர் மாதம் பஸ் கட்டணத்தை திருத்தியமைக்க எதிர்பார்த்திருந்ததாகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

தற்போது டீசலின் விலை குறைப்பட்டுள்ள போதிலும், பஸ் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் நடைமுறையில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன என்றும், அதனால் இறுதி முடிவை எடுக்க முடியாதுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ற)

# பரப்புரைக்கான நிதியில் சிறுநீரக நோயாளருக்கு நிதியம் ஆரம்பிப்பு

## மைத்திரிபாலவின் வித்தியாசமான நடவடிக்கை



கொழும்பு, டிசெ.9

ஜனாதிபதி தேர்தல் பரப்புரை செயற்பாடுகளுக்கு ஆதரவாளர்களால் வழங்கப்படும் நிதியைப் பயன்படுத்தி நாடு முழுவதிலுமுள்ள சிறுநீரக நோயாளருக்கான நிதியமொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி பொது வேட்பாளரானமைத்திரிபாலசிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜனாதிபதி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் பங்களிப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அடுத்த வாரத்தில் இந்த நிதியம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பொது வேட்பாளர் மைத்திரிபாலவின் தேர்தல் பரப்புரைச் செயற்பாடானது முற்றிலுமாக பொலித்தீன் கட்அவுட்கள் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் இல்லாது சுற்றாடலுக்குத் தீமை பயக்காத விதத்தில் கொண்டு செல்லப்படும் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் செயற்பாடுகளுக்கான செயலாளர் மங்கள சமரவீர சுற்றாடலுக்குக் கேடுவிளைவிக்கும் பொலித்தீன்களுக்குச் செலவிடும் பணத்தை நாட்டில் துன்பப்படும் சிறுநீரக நோயாளர்களினது நலனுக்காகச் செலவழிப்பதற்கு ஜனாதிபதி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கொள்கையளவிலான தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜயசூரிய ஜனநாயகவாத கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர்கள் உள்ளிட்ட பெருமளவிலானோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற–22)

# முஸ்லிம் மக்களின் வாக்கு மைத்திரிக்கே

### நம்பிக்கை வெளியிடுகின்றார் பியகம பிரதேச சபை உறுப்பினர்

கொழும்பு, டிசெ.9

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தாலும் முஸ்லிம் சகோதர சகோதரிகள் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கே வாக்களிப்பர் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பியகம பிரதேச சபை உறுப்பினர் மொஹமட் இர்பான்.

கம்பஹா மாவட்ட முஸ்லிம் கிராமங்களுக்கு இந்த அரசு எதுவும் செய்யவில்லை. பொது பல சேனாவைத் தம்முடன் இணைத்துக்கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத அரசியலையே செய்கின்றது மஹிந்த அரசு. நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கச் வாக்குச் சாவடிக்குச் செல்லும் ஒவ்வொரு முஸ்லிம்களும் அளுத்கம சம்பவத்தை ஒரு நிமிடம் மனதில் நினைத்து அதன்பின்னர் வாக்களிக்க வேண்டும் – என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் மைத்திரிபாலசிறிசேனா வெற்றி பெற்றால் இந்த நாட்டில் ஏகாதிபத்திய அரசியல் ஒழிக்கப்படும். சுதந்திரமான அரசியல் சூழல் ஒன்று உருவாகும். அதற்காக சிறுபான்மை சமூகத்தவர் ஒன்றிணைய வேண்டிய தருணம் இது – என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ற–10)

# 22 லட்சம் வாக்குகளே மஹிந்தவுக்கு

### அடித்துக் கூறுகின்றார் ராஜித



யாழ்ப்பாணம், டிசெ. 9

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் 22 லட்சம் வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொள்வார். இது அவருக்கும் நன்றாகத் தெரியும் என்று இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண.

ஐரோப்பா உட்பட பல நாடுகளில் உள்ள இலங்கை அரசியல் கட்சிகளின் கிளைகளில் பெரும்பாலானவை மைத்திரிபாலவுக்கே ஆதரவை தெரிவித்துள்ளன.

22 லட்சம் மேலதிக வாக்குகளினால் வெற்றிபெறுவேன் என்று ஜனாதிபதி கடந்த வாரம் தெரிவித்திருந்தார். இது தவறாக தெரிவித்த ஒரு கருத்து. அவர் தேர்தலில் பெறவுள்ள மொத்த வாக்குகளையே இவ்வாறு கூறியுள்ளார் – என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:–

அரச புலனாய்வுத் துறை அறிக்கையின்படி 56 வீத வெற்றி வாய்ப்பு மைத்திரிக்கு உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. இராணுவப்புலனாய்வு அறிக்கையின்படி 55 வீத வெற்றி வாய்ப்பு மைத்திரிக்கு என்று தெரியவந்துள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரின் அறிக்கையின் படி 56 வீத வெற்றி வாய்ப்பு மைத்திரிக்கு உண்டு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சகல அறிக்கைகளும் ஜனாதிபதியிடம் உள்ளன. பொது வேட்பாளர் அரசிலிருந்து வெளியேறிய சில நாள்களில் தான் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பொது வேட்பாளருக்குள்ள ஆதரவு இதன்பிறகு இன்னும் அதிகரித்துள்ளது – என்றார் ராஜித. (ற–5)

# ஐ.தே.கட்சி உறுப்பினர் மீது தாக்குதல்

கொழும்பு, டிசெ,.9

பெல்மடுல்ல பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் பெல்மடுல்ல நகருக்கு சென்றிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த பிரதேசசபை உறுப்பினர் பெல்மடுல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கஹவத்தை பொலிஸார் தெரிவித்தனர். (ற–10)

# மைத்திரிபால ஆதரவாளர் வீட்டின்மீது தாக்குதல்

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்கொட்டுவையிலுள்ள ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலால் வீட்டுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. தாக்குதல் இடம்பெற்றசமயம் ஆதரவாளர் அவருடைய மனைவியின் வீட்டுக்குச் சென்றிருந்தமையால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதே வேளை, தேர்தல் வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ற)

# பீல்ட் மார்ஷல் பட்டம் கோரும் பொன்சேகா

### மைத்திரிக்கான ஆதரவின் பின்னணி அதுதானாம்

பாதுகாப்பு அமைச்சர் பதவியும்; இராணுவத்தில் உயரிய பட்டமும் வழங்கப்பட வேண்டும் என்று கோரியுள்ள சரத் பொன்சேகா அவற்றுக்கு கைமாறாகவே பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்கு இணங்கினார் என்று கூறப்படுகின்றது.

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, ஆதரவளிப்பதாக முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா கடந்த வாரம் அறிவித்திருந்தார். இது தொடர்பாக மைத்திரிபால சிறிசேனவுடன் அவர் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றையும் செய்திருந்தார்.

இதன் பின்னர் மைத்திரிபால சிறிசேன, தாம் ஆட்சிக்கு வந்ததும், சரத் பொன்சேகாவிடம் இருந்து பறிக்கப்பட்ட ஜெனரல் பட்டம் உள்ளிட்ட அனைத்து இராணுவ விருதுகளையும், சலுகைகளையும் மீள வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். அத்துடன் அவருக்கு மீண்டும் குடியுரிமை வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆயினும் சரத் பொன்சேகா தனக்கு பீல்ட் மார்ஷல் பட்டமும், பாதுகாப்பு அமைச்சர் பதவியும் தரப்பட வேண்டும் என்றும் கோரியிருக்கின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க வேண்டும் என்றும் சரத் பொன்சேகா கோரியிருக்கிறார்.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்தால், போரில் ஆற்றிய பங்களிப்புக்காக, சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் என்ற உயர் இராணுவ பட்டம் அளிக்கப்படவாய்ப்புகள் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவத்தில் இதுவரை பீல்ட் மார்ஷல் என்ற உயரிய பட்டம் எவருக்கும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற–5)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: பொருளாதார வளம் சீராக இருக்கும். அதே வேளையில் செலவும் அதிகரிக்கலாம். சிக்கனம் தேவை. குடும் பத்தில் சந்தோஷம் நிலவும்.

**இடபம்**: உறவினர்கள் மத்தியில் தொடர்ந்து கருத்து வேறு பாடு வரலாம். அவர்கள் வகையில் சற்று ஒதுங்கி இருங்கள். மனதில் நிம்மதியும் ஆனந்தமும் ஏற்படும். அயலவரிடம் இருந்து வந்த கசப்புணர்ச்சி நீங்கும்.

**மிதுனம்**: திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிக்ள் தங்கு தடையின்றி நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு அதிக வேலைப் பளுவை சுமந்தாலும் அனைத்தையும் சுலபமாகச் செய்வீர்கள். அலைச்சல்கள் வரலாம்.

**கடகம்**: சக ஊழியர்கள் உதவிகள் செய்து அனுசரணையாக இருப்பார்கள். உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக் களை நீங்கள் திறமையாகச் செய்வீர்கள். அதிக உழைப்பை செய்தவர்களுக்கு ஏற்ற பொருளாதார வளம் வந்து சேரும்.

**சிங்கம்**: எடுத்த காரியம் கைகூடும். தேவைகள் பூர்த்தி யாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். உங்கள் மீதான அவப்பெயர் மறைந்து செல்வாக்கு மேம்படும். உங்கள் சொல்லுக்குப் பிறர் மரியாதை கொடுப்பர்.

**கன்னி**: தேவையான இடங்களில் நீங்கள் விட்டுக் கொடுத் துப் போவது நல்லது. தேவைகள் ஒவ்வொன்றாகப் பூர்த்தி யாகும். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கலாம்.

**துலாம்**: நண்பர்கள் இடையே அன்னியோன்னியம் அதிக ரிக்கும். அவர்களால் உதவிகள் பெறலாம். நீண்டநாள்களாக தடைப்பட்டு வந்த திருமணத்துக்கான முயற்சிகளை இப்போது தொடங்கலாம்.

**விருச்சிகம்**: உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு நல்ல வளர்ச்சியைக் காணலாம். நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்கும்.

**தனுசு**: சம்பள உயர்வு எதிர்பார்த்திருந்ததை விட அதிகமாக கிடைக்கும். உங்கள் ஆற்றல் மேம்படும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புகள் வரும்.

**மகரம்**:புதிய தொழில் தொடங்குவற்கான வேலைகளுக்கு அரச அனுகூலம் கிடைக்கும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும். ஏற்கனவே இருந்து வந்த பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

**கும்பம்**: உங்கள் சொல்லுக்கு பிறர் கட்டுப்படும் நிலை உருவாகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பான முன்னேற் றத்தை அடையலாம். சிலருக்கு வெளிநாடு சென்று படிப் பதற்கான காரியங்களை இப்போது தொடங்கலாம்.

**மீனம்**: தொழிலை விரிவாக்கம் செய்யலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை இருக்கும். உடல்நலம் சிறப்பாக இருக்கும். உடல் அசதி சோம்பல் நீங்கும். மருத்துவ செலவு குறையும்.

இவர்தான் கிச்சின் டெண்டுல்கார்





## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

ஆசிரியர் : ஒரு நாட்டின் நல்ல குடிமகனுக்கு என்ன தேவை ?
மாணவன் : ஊறுகாய் சேர்....

காதலி : டார்லிங் இன்றைக்கு சீக்கிரம் வாங்க. ஹோட்டலில் போய் சாப்பிட்டு வருவம். ஆனால் நான் தான் கார் ஓட்டுவேன்.
காதலன் : என்னோட தலைவிதி காரில் போய் அம்புலன்ஸில் வர வேண்டும் என்று இருக்குப் போல....

'பகல்ல உங்களுக்குக் கண் தெரியாதா டாக்டர்....?'
'தெரியுமே. ஏன் கேட்கிறீங்க?'
'இல்லை. பார்வை நேரம் இரவு ஆறிலிருந்து எட்டுவரை என்று வெளியில போர்ட் வைச்சிருக்கிறீங்களே, அதுதான் கேட்டேன்... ?

# இந்தக் காலத்தில் இப்படியும் நடக்கின்றது

80 வயது மூதாட்டியை நிர்வாணமாக்கி கழுதை மீதேற்றி கிராமத்தில், ஊர்வலமாக அழைத்துச்சென்று அவமானபடுத்திய சம்பவமொன்று இந்தியா, ராஜஸ்தான் மாநிலம் பில்வரா மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி மூதாட்டிக்கு சூனியக்காரி என்ற பட்டத்தை சூட்டி, அவரை நிர்வாணப்படுத்தி கழுதை மீதேற்றி கிராமத்தை வலம் வரச்செய்யுமாறு கிராமத்தவருக்கு பஞ்சாயத்து நடத்துபவர்கள் உத்தரவிட்டுள்ளனர். அவரிடம் யாரும் பேசக் கூடாது என்றும் மீறினால் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என்றும் பஞ்சாயத்தார் கிராமத்தவர்களுக்கு எச்சரித்திருந்தார்.

மேற்படி மூதாட்டியின் கணவர் 37 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். பிள்ளைகளின்றி வாழ்ந்து வந்த இவருக்கு கிராமத்தில் ஒரு சிறு நிலம் உள்ளது. அந்த நிலத்தை பறிப்பதற்கு பலர் முயற்சி செய்து வந்துள்ளனர். இதற்காக அவரை கடந்த சில வருடங்களாகவே தொல்லை கொடுத்து வந்துள்ளனர். இந்த நிலையில்தான் தற்போது கழுதை மீது ஏற்றி ஊர்வலம் போகச் செய்து அவமதித்துள்ளனர் என்று கிராமத்தில் சிலர் கூறியுள்ளனர்.

# இரண்டு கண்கள்

சினிமாவும், சின்னத்திரையும் தனது இரண்டு கண்கள் என்று தெரிவித்துள்ளார் கிருஷ்ணா. தெய்வமகள் தொடரில் பிரகாஷ் என்ற பெயரில் நடித்து வரும் கிருஷ்ணா, சினிமா வாய்ப்புக்களை உதறப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். கே.பாலசந்தர் இயக்கிய சஹானா என்ற தொடர் மூலம் அறிமுகமானவர் கிருஷ்ணா. அதன்



பின்னர் மேலும் சில சின்னத்திரை தொடர்களில் நடித்தார். சினிமாவில் ஆனந்தபுரத்து வீடு என்ற படத்தில் வில்லனாக அறிமுகமானார். அந்தப் படத்தில் கதாநாயகியாக நடித்த சயாசிங்கை திருமணமும் செய்து கொண்டார். திருமணத்தின் பின்னர் சில காலம் நடிப்பை விட்டு ஒதுங்கியிருந்தார். இப்போது தெய்வமகள் தொடரில் நடித்து வருகின்றார். 'என்னை பிரகாஷ் என்றே மக்கள் அழைக்கின்றனர். ஏன் இப்படி வில்லத்தனம் செய்கின்றீர்கள் என்று கேட்கின்றனர். அவர்கள் அவ்வாறு கேட்பது எனக்குப் பிடித்திருக்கின்றது' என்கின்றார் கிருஷ்ணா. சினிமாவும், சின்னத்திரையும் தனது இரண்டு கண்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெற்றோல் பாவிக்கிறவங்களை விட பேஸ்புக் பாவிக்கிறவங்கள்தான் அதிகம்.
அதால தேர்தல் வரைக்கும் எல்லோருக்கும் இலவச Wi-Fi கொடுப்போம்.
தேர்தல் முடிஞ்சதும் அதுக்கு பாஸ்வேர்ட் போட்டு லொக் பண்ணிடுவோம்.





# சார்க் திட்டங்களுக்கு இலங்கை பங்களிக்கும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

சார்க் அமைப்பின் சாசன கொள்கைகளின் திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் எப்போதும் இலங்கை தனது ஆக்க பூர்வமான பங்களிப்பை வழங்கும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

சார்க் அமைப்பின் தொடர் வளர்ச்சிக்கு எமது பங்களிப்பு தொடர்ந்து இருக்குமெனவும், தெற்காசிய பிராந்தியத்தின் வளர்ச்சிக்கு எமது முயற்சிகளை இன்னும் பலம்மிக்கதாக மாற்றுவோம் என வும் அவர் தெரிவித்துள்ளார்.

சார்க் அமைப்பின் 30 ஆவது சாசன நிறைவுதினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே வெளி விவ கார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தெற்காசிய நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து பிராந்தியங்களின் நன்மை கருதி சார்க் அமைப்பினை உருவாக்கியதுடன் அவற்றுக்கான சாசன திட்டங்களையும் வகுத்துள்ளன. அன்றிலிருந்துஇன்று வரை தெற்காசிய நாடுகள் அனைத்தும் ஒவ்வொரு பிராந்திய துறைகளிலும் தனி வளர்ச்சி கொண்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வமைப்பின் பிரதானநோக்கம், மக்களுக்காக மக் கள் சேவை யாற்று வதேயாகும். அண் மையில் இடம் பெற்ற 18 ஆவது சார்க்மாநாடு அமைதியையும் செழிப்பையும் ஆழ்ந்த ஒருங்கிணைப்பி னூடாக செயற்படுத்தல் என்ற தொனிப்பொருளில் இடம் பெற்றமை குறிப் பிடத்தக்கது என தனது அறிக்கையில் தெரிவித்துள் ளார். (ற)

## மரண அறிவித்தல்



### திருமதி.லோகேஸ்வரி சண்முகபவன்

(சந்திரா)

கொழும்பை பிறப்பிடமாகவும்,நல்லூர் குறுக்கு வீதியை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பு பம்பலப்பிட்டியில் வசித்து வந்தவருமாகிய திருமதி. லோகேஸ்வரி சண்முகபவன் அவர்கள் 06.12.2014 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா ( Post Master ) , சிவபாக்கியம் ( நல்லூர் ) தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற தம்பிஐய்யா, ரத்தினாம்பாள் ( வடலியடைப்பு - பண்டத்தரிப்பு) தம்பதிக்ளின் மருமகளும், திரு.வ.த சண்முகபவன் ( Browns & Co. ) அவர்களின் அன்பு மனைவியும் , டிலாணி (கனடா), மேகலா ( கனடா), தரணீதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமா கணேஷ் (கனடா).வசந்தராஜா(கனடா),வினோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும்,ஐஸ்வர்யா (கனடா) ,அதித்திரி ( கனடா ) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும்,புவனேஸ்வரி,யோகநாதன்,சிவராஜா Dr.கமலாம்பா, காலஞ்சென்ற வரதராஜா, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சுகிர்தலக்ஷ்மி.காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் திரிபுரபவன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் செவ்வாய்கிழமை 09.12.2014 அன்று காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 2.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு மாலை 4.30 மணிக்கு தகனக்கிரியைகள் கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும்.

**தகவல் :**
**திரு.வ.த.சண்முகபவன் ( கணவர் )**
**No.5,E - Block,Bambalapitiya**
**Govt.Flats,Colombo - 04**
**Tel : 0777 757112 / 0112 586649**

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கணேசமூர்த்தி பார்த்தீபன்

[வடக்கு கிழக்கு, வீடமைப்பு மீள் நிர்மாண சாரதி]



பிறப்பு
16.01.1990

இறப்பு
13.12.2011

திதி: திருதியை

எங்கள் குல விளக்காய் உதித்த நீ
எங்களைப் பாதியிலே விட்டுப் போவதற்கா?
நீ மறைந்து போனாலும்
உன் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு மறையாது

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

என்றும் உன்
நினைவுடன் வாழும்
**குடும்பத்தினர்.**

(சி/18212)(4.3.6)

## தேவை

புடைவை விற்பனை நிலையம் ஒன்றுக்கு புடைவைகள் கொள்வனவு விற்பனையில் அனுபவமுள்ள நபர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு : 077 324 6503
(09.00-18.00)
(54772)(8-3)

## Majestic Cineplex Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

8.30am, 12.00noon, 3.30pm, 7.00pm, 10.30pm

**டிசம்பர் 12 முதல்**




விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## தேவை

சாவகச்சேரியில் இயங்கும் கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு அனுபவமிக்க பில்கிளார்க் மற்றும் விற்பனையாளர் தேவை. சாவகச்சேரி மீசாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: **077 225 0149**

## காணி விற்பனைக்கு

நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகிலும் யாழ். கல்வி வலயத்துக்கு அருகிலும், நல்லூர் செல்லர் லேன், செம்மணி வீதியில் நிலப்பரப்பு 1 ½ ஒரு குளி வருமானம் நிறைந்த வெறும் காணி விற்பனைக்கு.

தொடர்பு: 077 743 2645

உ சிவமயம்

## தசாக கிருக யக்ஞ அழைப்பு

ஜய வருடம் கார்த்திகை மாதம்
14ஆம் நாள் (30.11.2014)
ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்



### சிவஸ்ரீ கு. குமாரகுருக்கள்

அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகளின் விவரம் வருமாறு:

12.12.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தாகம் (கல்லெடுத்தல்)
13.12.2014 சனிக்கிழமை பகல் 12.00 மணிக்கு ஏகோதிட்டம் மாசிகம்
14.12.2014 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணிக்கு சபிண்டீகரணம்
15.12.2014 திங்கட்கிழமை கிருக யக்ஞம் (சமாராதனை)

உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் மேற்படி நிகழ்வில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**110/15, சட்டநாதர் கோயில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 021 222 9092**

**திருமதி. ச. குமாரகுருக்கள்,**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
**ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்**

(54778)(10-6)

## வலி கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.
## மீள் கேள்வி அறிவித்தல் -2015

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளை 2015 ஆம் ஆண்டுக்கு (01.01.2015 - 31.12.2015) குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 09.12.2014– 18.12.2014.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 19.12.2014 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 19.12.2014 பி..ப 01.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை **"தவிசாளர், வலி கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும், எதிர்வரும் 19.12.2014ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (வரி நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வரிநீங்கலாக) | மாதாந்த வாடகை (வரிநீங் கலாக) |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித்தரிப்பிடம், துவிச்சக்கர வண்டி 5/=மோட்டார்சைக்கிள் 10/=, மின்சாரக்கட்டணம் ஒப்பந்தக்காரரால் செலுத்தப்படல் வேண்டும் ) | 2000.00 | 10,000.00 | 4,894,050.00 | |
| 02 | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 598,500.00 | 500.00 |
| 03 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 46,500.00 | 500.00 |
| 04 | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 124,200.00 | |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | புத்தூர் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 159,200.00 | |
| | நீர்வேலி உப அலுவலகம் | | | | |
| 01 | நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 01 | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 662,550.00 | 500.00 |
| 02 | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 12,600.00 | 500.00 |
| 03 | கோப்பாய் கோழிஇறைச்சி கடை | 500.00 | 2000.00 | 64,300.00 | 500.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 137,600.00 | 500.00 |
| 02 | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 232,000.00 | |
| 03 | ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1000.00 | 27,410.00 | 500.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்.
09.12.2014

திரு.கணபதிப்பிள்ளை துரைசிங்கம்
தவிசாளர்
வலி கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.

# தொடர்ச்சிகள்

## 19 பேர்

அதில்; மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதும், அவை தேர்தல்கள் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டு, 19 பேரினதும் வேட்பு மனுக்கள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணிமுதல் 11 மணிவரை வேட்பு மனுத் தாக்கலுக்கான நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பில் 11 மணி முதல் 11.30 மணி வரையான காலப் பகுதிக்குள் ஆட்சேபனைகளைத் தெரிவிக்க முடியும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்திருந்தார்.

காலை 9.10 மணிக்கு தேர்தல்கள் திணைக்களத்துக்கு வந்த பொது வேட்பாளர் மைத்திரிபால சிறி சேன தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். பொது எதிரணி வேட்பாளர் மைத்திரியுடன் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜேயதாஸ ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஐ.தே.க.வின் தலைமைத்துவ சபைத் தலைவர் கரு ஜயசூரிய மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோரும், ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் சம்பிக்க ரணவக்க மற்றும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி ஆகியோரும் உடனிருந்தனர்.

அதேவேளை, காலை 10.28 மணிக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுபநேரமான 10.48 மணிக்கு தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

### இரண்டு சிறிசேனவும், ராஜபக்ஷவும்

பிரதான இரு வேட்பாளர்களையும் விடவும், மேலும் 17 வேட்பாளர்கள் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர். அவர்களில் சிறிசேன, ராஜபக்ஷ என்ற பெயர்களைக் கொண்டவர்களும் உள்ளடங்குகின்றனர். ஏனைய 17 பேரில் 15 பேர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாவர். இருவர் சுயேட்சை வேட்பாளர்கள். அத்துடன் மூன்று சிறுபான்மையின வேட்பாளர்களும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

ஜனசெத பெரமுன கட்சி சார்பில் பத்தரமுல்லே சீலரத்ன தேரர், ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு சார்பில் தெமினி முல்ல, சோஷலிஷ சமத்துவக் கட்சி சார்பில் பாணி விஜேசிறிவர்தன, ஐக்கிய சோஷலிஸ கட்சி சார்பில் சிறிதுங்க ஜயசூரிய, எக்ஸத் லங்கா மகா சபா சார்பில் ஜயந்த குலதுங்க, இலங்கை தேசிய முன்னணி சார்பில் விமல் கீகனகே, சுயேச்சைக் குழு சார்பில் ஐஎம்.இல்யாஸ், ஐக்கிய சமாதான முன்னணி கட்சி சார்பில் இப்றாஹிம் நிஸதார மொஹமட் மிப்லார், சுயேச்சைக் குழு சார்பில் பொல்கம்பல ராலலாகே சமிந்த அநு ருத்த பொல்கம்பல, முன்னிலை சோஷலிஷ கட்சி சார்பில் துமிந்த நாகமுவ, சிறிலங்கா தொழிலாளர் கட்சி சார்பில் ஏ.எஸ்.பீ.லியனகே, நவ சமசமாஜக் கட்சி சார்பில் சுந்தரம் மகேந்திரன்,

ஜனநாயக தேசிய இயக்கம் சார்பில் கட்டுகம்பல அப்புகாமிலாகே பிரசன்ன பிரியங்கர, எமது தேசிய முன்னணி சார்பில் ராஜபக்ஜ ஆராச்சிலாகே நாமல் அஜித் ராஜபக்ஜ, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி சார்பில் ரத்நாயக்க ஆரச்சிகே சிறிசேன,

நவ சிஹல உறுமய சார்பில் சரத் மனமேந்திர, எக்சத் லங்கா பொதுஜன கட்சி சார்பில் ருவன்திலக்க பேதுரு ஆரச்சி ஆகிய 17 பேரும் வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

### மஹிந்த , மைத்திரிக்கு எதிராக ஆட்சேபனை

ஆட்சேபனை நேரத்தின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் வேட்பு மனுக்கள் தொடர்பில் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டன. நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும், நாத் அமரகோன் என்பவரால் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகவும் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டது. இருப்பினும், இந்த இரு ஆட்சேபனைகளும், 1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் வேட்பு மனுக்களை நிராகரிப்பது தொடர்பான விடயங்களுடன் தொடர்பற்றவையாக உள்ளதால் இந்த இரண்டு ஆட்சேபனைகளும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவால் நிராகரிக்கப்பட்டன.

### பலத்த பாதுகாப்பு

வேட்புமனுத் தாக்கல் இடம்பெற்றதால், நேற்றுக் காலை முதல் தேர்தல்கள் திணைக்கள வளாகத்தில்பலத்தபாதுகாப்புஏற்பாடுகள் செய்யப்பட்டிருந் தன, வாகனப் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டிருந்தது. (ந-5)

## கட்சி

ஆகியோர் நேற்று பொது எதிரணியுடன் இணைந்து கொண்டனர். அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஜனநாயகக் கட்சி யின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயந்த கோட்டா கொட ஆகியோர் ஆளுங்கட்சியுடன் இணைந்து கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று இடம்பெற்றிருந்த நிலையிலேயே இந்தக் கட்சித் தாவல்கள் அரங்கேறியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, நேற்று மாலை எதிர்க் கட்சித் தலைவரின் செயலகத்தில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே, ஆளுங் கட்சியிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவித்தார்.

'எனது தந்தை கொலை செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும் நீதி கிடைக்கவில்லை. குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். ஜனாதிபதி பங்கேற்கும் உயர்மட்ட நிகழ்வுகளில் கூடப் பங்கேற்கின்றனர். இது எப்படியென்று எனக்குத் தெரியவில்லை.

அரசிலிருந்து முன்னரே விலகவிருந்தேன். ஆனால் தலைமை இருக்கவில்லை. இந்த அமைப்பு சரியான தலைமை என்று கண்டுகொண்டேன்.

அதையடுத்து இந்த முடிவை எடுத்தேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பழைய உறுப்பினர்கள் ஓரங்கட்டப்பட்டு, வெளியில் இருந்து வந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

சந்திரிகா என்னைப் பலவந்தமாக எதிரணிக்கு இழுத்து வரவில்லை. கவனமாக யோசனை செய்யும்படி அவர் என்னிடம் கேட்டார். நான் ஒரு பெண் என்பதால், எனது பாதுகாப்புக் குறித்து யோசிக்கும்படி கூறினார். ஆனால் நான் எதற்கும் பயப்படவில்லை. மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதற்கு எதிரணியுடன் இணைந்து கொள்ள முடிவு செய்தேன்" என்று அவர் குறிப்பிட்டார். (ந-5)

## தாவினார்

கடந்த மாதம் 24 ஆம் திகதி, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா, ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டுள்ளார் என்ற செய்தி வெளியாகியிருந்தது. அதனை நவம்பர் மாதம் 26 ஆம் திகதி, திஸ்ஸ அத்தநாயக்கா மறுத்திருந்தார். 'ஆளுங்கட்சியுடன் ஒரு போதும் இணையப் போவதில்லை' என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

ஆயினும், நேற்றுத் திடீரென, கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகுவதாக திஸ்ஸ அத்தநாயக்கா, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கடிதத்தைக் கொடுத்துள்ளார். இதனை எதிர்க்கட்சித் தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்த போதும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கா, நேற்று மதியம் ஒரு மணியளவில் அலரி மாளிகைக்குச் சென்றார்.

அங்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், வெற்றிலை கொடுத்து ஆளுங்கட்சியில் இணைந்து கொள்வதாகத் தெரிவித்தார். அந்தச் சமயம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கிய அமைச்சர்களும் உடனிருந்தனர்.

ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன, அந்தக் கட்சியிலிருந்து விலகி பொது எதிரணி வேட்பாளராகக் களமிறங்கியிருந்தார். தற்போது திஸ்ஸ கட்சி தாவியுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்தே கொழும்பு அரசியலில், கட்சித் தாவல்கள் சூடு பிடித்துள்ளன. (ந-5)

## கை கொடுக்க

இதன் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொது எதிரணி வேட்பாளர் மைத்திருக்கு கைலாகு கொடுத்த போதும் மைத்திரி அதனைக் கண்டு கொள்ளாமல் கையெடுத்து கும்பிடு போட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று நடைபெற்றது. இதன் போது தேர்தல்கள் செயலகத்திற்கு உரிய நேரத்துக்கே பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால வந்திருந்தார். அவர் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். நேரம் தாழ்த்தி வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முன் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர் அதில் சென்று அமர்ந்தார். இதன் பின்னர் வேட்பு மனுத் தாக்கல் செய்த வேட்பாளர்களில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தவிர்ந்த ஏனைய அனைத்து வேட்பாளர்களும், தேர்தல்கள் ஆணையாளருக்கு முன்னால் நின்றே தமது வேட்பு மனுக்களைச் சமர்ப்பித்தனர். ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மட்டும், தேர்தல்கள் ஆணையாளர் அமர்ந்திருந்த மேடை மீது ஏறிச் சென்று அவருக்கு பக்கவாட்டில் நின்று வேட்பு மனுவைக் கையளித்தார்.

வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்த பின்னர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சகல வேட்பாளர்களுக்கும் கைலாகு கொடுத்துக் கொண்டு வந்தார். இதன் போது, ஆளுங்கட்சியிலிருந்து எதிர்கட்சிக்குத் தாவி பொது எதிரணி வேட்பாளராகப் போட்டியிடும் மைத்திரிபால சிறிசேனவுக்கு அருகில் வந்ததும், அவருக்கும் கைலாகு கொடுக்க கையை நீட்டினார் மஹிந்த.

ஆனாலும் மைத்திரிபால சிறிசேன, சிரித்த முகத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கும்பிடு போட்டார். உடனேயே சமாளித்துக் கொண்ட ஜனாதிபதி, மைத்திரியின் தோள்களில் தட்டிவிட்டு நகர்ந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் வந்த ஏனைய அமைச்சர்களுக்கு மைத்திரி கைலாகு கொடுத்தார். (ந-5)

## பல்கலையில்

என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலை விரிவுரையாளர்களின் சம்பளம், மேலதிகக் கொடுப்பனவு, கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பது உட்பட பல கோரிக்கைகளை முன் வைத்து கடந்த வருடம் தொடர்ச்சியாக 3 மாதங்கள் வரை போராட்டம் நடத்தப்பட்டது. அதனால் மாணவர்களின் கல்வி முழுமையாகப் பாதிக்கப்பட்டது. அதன்பின்னர் உடன்பாட்டுக்கு வந்த இந்த அரசு பல கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாகக் கூறியது. ஆனால் சில கோரிக்கைகளை மாத்திரம் செய்துவிட்டு ஏனைய பல கோரிக்கைகளையும் இன்று வரை நிறைவேற்றவில்லை. அதனால் இந்த அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரியும் இன்று நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஒருமணி நேர கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது – என்று விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந-4)

## மஹிந்த

இவர் இன்று (நேற்று) மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பயனற்றவை. மஹிந்த ராஜபக்ஷவிடம் பண பலம் மற்றும் ஆயுத பலம் ஆகியவை மட்டுமே இருக்கின்றது. ஆனால், என்னிடமோ அசைக்க முடியாத மக்கள் பலம் உள்ளது. இந்த பலமே இறுதியில் வெல்லும்.

அத்தோடு, நாம் நாளைய தினம் (இன்று) மதியம் 2 மணிக்கு கண்டியில் எமது முதலாவது பரப்புரைக் கூட்டத்தை நடத்தவுள்ளோம். இதிலிருந்து தொடர்ச்சியாக நடைபெறும் எமது ஏனைய பரப்புரைக் கூட்டங்களுக்கும் அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படாத மற்றும் தேர்தல் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்ட அஹிம்சை வழியான பரப்புரைக் கூட்டங்களாகவே இருக்கும்" – என்றும் மைத்திரி அங்கு மேலும் குறிப்பிட்டார். (ந-5)

## எதிரணி மீது

தங்கொட்டுவ பிரதேசத்திலுள்ள, மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்கு நேற்று அதிகாலை 3.30 மணிக்கு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் போது வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கியுள்ளன.

இதேவேளை, பொது எதிரணிக்கு ஆதரவு தெரிவித்து கண்டியில் நடைபெறவுள்ள கூட்டம் குறித்து, புஸ்ஸல் லா வையில் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஐ.தே.க. ஆதரவாளர்கள் மீது கம்பொல பிரதேசத்திலுள்ள அரச ஆதரவாளர்கள் குழுவினர் நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மூன்று முச்சக்கர வண்டிகள் சேதமடைந்துள்ளன.

தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து வேட்புமனுத் தாக்கல் செய்யும் வரையுள்ள கால எல்லைக்குள் ஆயுதப் பயன்பாட்டுடன் கூடிய 8 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று கபே அமைப்புத் தெரிவித்துள்ளது. (ந-5)

## கொண்டு

வது ஒன்றும் பெரிய வேலையல்ல என்றும் தெரிவித்தார்.

ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர், வெளியே வந்த அவர், செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து இருந்து இன்னும் பலர் வரவுள்ளனர். அதற்காக எமது அரசின் கதவுகள் திறந்தேயிருக்கும். விரும்பியவர்கள் வரலாம்" – என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ந-5)

# ஜாம்பவான்களின் தொடர் இன்று ஆரம்பம்

ஜாம்பவான்களின் தொடர் என வர்ணிக்கப்படும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

ஆஸ்திரேலியாவின் இறுதி டெஸ்ட் தொடரில் பாகிஸ்தானால் ஆஸ்திரேலிய அணி முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டு வெள்ளையடிப்புச் செய்யப்பட்ட நிலையில் மீண்டும் டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பெற வேண்டுமாயின் இந்தத் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளது ஆஸ்திரேலிய அணி. தான் ஆடிய இறுதி டெஸ்ட் தொடரில் இங்கிலாந்திடம் 3:1 என்ற அடிப்படையில் படுதோல்வியடைந்த இந்திய அணி தொடரைக் கைப்பற்றி டெஸ்ட்டிலும் தமது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்ற உத்வேகத்துடன் களமிறங்குகின்றது.

அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் இடம்பெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கு நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஆஸ்திரேலியாவில் இந்த டெஸ்ட் தொடர் இடம்பெறுவது மைதானங்களுக்கு ஏற்பதம்மை தயார்ப்படுத்த இந்தியஅணிக்கு சிறந்த வாய்ப்பாக அமையும். அதேபோல் சொந்த மண்ணில் உலகக்கிண்ணத்தொடர் இடம்பெற உள்ளதால் அதற்கு முன்னதாக இந்தியா போன்ற பலமான அணியுடன் விளையாடுவது ஆஸ்திரேலியாவுக்கும் சிறந்த பயிற்சியைக் கொடுக்கும்.

அதிகப்படியான அனுபவ வீரர்கள் களமிறங்கும் ஆஸ்திரேலியாவா? அல்லது டோனியின் இளம் படையா?. வெற்றி யார் வசம் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். (ற–ரி)

## இறுதிச் சந்திப்பில்

இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இறுதியாக 2013ஆம் ஆண்டு இந்தியாவில் இடம்பெற்ற 4 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 4:0 என தொடரைக் கைப்பற்றி ஆஸ்திரேலியாவை வெள்ளையடிப்புச்செய்தது.

முதல் டெஸ்ட்டில் 8 இலக்குக்ள் வித்தியாசத்திலும் இரண்டாவது டெஸ்ட்டில் இன்னிங்ஸ் மற்றும் 135 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் மூன்றாவது டெஸ்ட்டில் 6 இலக்குகள் வித்தியாசத்திலும் நான்காவது டெஸ்டில் 6 இலக்குகள் வித்தியாசத்திலும் இந்தியஅணி அபார வெற்றி பெற்றது. முதல் டெஸ்ட்டில் டோனியும் இரண்டாவது டெஸ்ட்டில் புஜாராவும் மூன்றாவது டெஸ்ட்டில் டவானும் நான்காவது டெஸ்ட்டில் ஜடேஜாவும் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த ஆண்டு ஆஸ்திரேலியஅணி இவ்வாறு படுதோல்வியடைந்த காரணத்தால் இவ் வருடம் சொந்த மண்ணில் வைத்து இந்தியாவை படுதோல்வியடையச் செய்ய வேண்டும் என்று பொண்டிங், கில்கிறிஸ்ட் போன்ற ஓய்வு பெற்ற வீரர்கள் கூறிவருகின்றனர். வேறு சில முன்னணி வீரர்கள் 4:0 என ஆஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றும் என எதிர்வு கூறியுள்ளனர். எதுவாயினும் ஆஸ்திரேலியா பழிவாங்கும் வேகம் மைதானங்களில் தென்படும் என்று எதிர்பார்க்கலாம். (ற–ரி)



# வலுவான வீரராக களம் வருவார் நடால்

காயத்திலிருந்து மீண்டுள்ள ஸ்பெயினின் ரபேல் நடால், முன்பைவிட வலுவான வீரராக களத்துக்குத் திரும்புவார் என்று முன்னாள் முதல் நிலை வீரரான கார்லஸ் மோயா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் அவ்வப்போது காயங்களை சந்தித்தாலும் 14 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுவிட்டார் நடால். அண்மையில் குடல்வால்வு அறுவை சிகிச்சை மற்றும் முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயத்துக்காக ஸ்டெம் செல் சிகிச்சை பெற்ற நடால், இப்போது பயிற்சிக்குத் திரும்பியுள்ளார்.

இந்த நிலையில் ஸ்பெயினைச் சேர்ந்த முன்னாள் ரென்னிஸ் வீரரான கார்லஸ் மோயா கூறுகையில்,

நடால் இப்போது பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். அவருடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறேன். அவர் துரதிர்ஷ்டவசமாக தொடர்ச்சியாக காயத்தால் பாதிக்கப்பட்டுவிட்டார். ஆனால் அவர் காயத்தால் பாதிக்கப்பட்டபோதெல்லாம் வலுவான வீரராகவே களம்புகுந்துள்ளார். அதனால் இந்த முறையும் அதில் மாற்றம் இருக்காது. விரைவில் அவர் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிப்பார் என்றார். மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக அமெரிக்க ஓபன் போட்டியில் சாம்பியன் பட்டத்தை தக்கவைக்கும் வாய்ப்பை இழந்த நடால், கடந்த ஒக்ரோபர் மாதம் 2014 சீசனில் இருந்து விலகியிருந்தார். (ற)

# அடிலெய்ட் அனுபவம் வெற்றிக்கு உதவும்

## ரோஹித் நம்பிக்கை



அடிலெய்டில் நடந்த பயிற்சிப் போட்டி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் கைகொடுக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் இந்திய வீரர் ரோஹித் சர்மா.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் ஆட்டம் அடிலெய்டில் இன்று நடக்கவுள்ளது. இதுகுறித்து இந்தியாவின் அதிரடி ஆட்டக்காரர் ரோஹித் சர்மா கூறுகையில்,

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அடிலெய்டில் முதல் டெஸ்ட் போட்டிக்காக இந்திய வீரர்கள் தயாராக உள்ளனர். இரண்டு பயிற்சி ஆட்டங்களும் அடிலெய்டில் நடந்ததால், மைதானம் குறித்து சிறந்த அனுபவம் எங்களுக்கு கிடைத்துள்ளது. இது சாதிக்க உதவும் என்பதால், டெஸ்ட் தொடரை வெற்றியுடன் தொடங்குவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

மூத்த வீரர்களின் ஓய்வுக்குப் பின், டெஸ்ட் அணியில் நிறைய இளம் வீரர்கள் இடம் பெற்றனர். அதனால் தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, இங்கிலாந்து ஆகிய அணிகளுடன் நடந்த டெஸ்ட் தொடர்களில் தோல்வியை சந்திக்க வேண்டியதாயிற்று. அவை மூலம் சிறந்த பாடம் கற்றுக் கொண்டோம். இது, தற்போதைய ஆஸ்திரேலிய தொடரில் சாதிக்க உதவும்.

டெஸ்ட் அணியில் நிரந்தர இடம் கிடைக்காதது ஏமாற்றம். எப்போதும், நாம் நினைத்தது போல நடப்பதில்லை. கடுமையாக பயிற்சி மேற்கொண்டு, போட்டியில் திறமையை வெளிப்படுத்தும் பட்சத்தில், அணியில் நிலையான இடத்தை உறுதி செய்யலாம். தற்போது எனது கவனம் முழுவதும் ஆஸ்திரேலிய தொடருக்கு சிறந்த முறையில் தயாராவதில் மட்டுமே உள்ளது– என்று தெரிவித்துள்ளார். (ற)

# வலியை அவர்களும் உணர்வார்கள்

## – வொட்சன்



நாங்கள் ஆக்ரோஷமாக விளையாடும் போது எங்களது மிகச்சிறந்த ஆட்டம் வெளிப்பட்டு இருக்கிறது. ஆஸ்திரேலிய அணிக்காக விளையாடி வரும் காலத்தில் இருந்தே இதை நான் பார்த்து வருகிறேன். நாங்கள் தயாராக இருக்கின்றோம் – என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய சகலதுறை ஆட்டக்காரரான ஷேன் வொட்சன்

ஆஸ்திரேலிய– இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் இன்று அடிலெய்டில் ஆரம்பமாகிறது. அது குறித்துக் கூறும்போதே வொட்சன் இவ்வாறு கூறினார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் போதும் இதே போன்று தான் குறிப்பாக பந்து வீச்சில் மிகவும் ஆக்ரோஷத்தைக் காட்டி வெற்றிகளைக் குவித்தோம். அந்த அணுகுமுறையில் மாற்றம் இருக்கப்போவதில்லை.

இந்தியாவுக்கு எதிராக களத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது எங்களுக்கு தெரியும். கடந்த ஆண்டு நாங்கள் இந்திய மண்ணில் விளையாடிய போது அவர்கள் எங்களை 4–0 என்ற கணக்கில் தோற்கடித்தார்கள்.

அந்த வலியும் வேதனையும் இன்னும் மனதில் இருக்கிறது. அதற்கு நாங்கள் எங்களது சொந்த மண்ணில் பதிலடி கொடுக்க வேண்டும். அதற்குத் தொடரை சிறப்பாக தொடங்க வேண்டியது அவசியம். தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தும்போது, இந்திய மண்ணில் நாங்கள் அனுபவித்த வலியை அவர்களும் இங்கே உணருவார்கள். அதை நாங்கள் செய்தாகவேண்டும். சக வீரர் பிலிப் ஹியூக்சின் உயிரிழப்பால், அந்த பாதிப்பில் இருந்து மனரீதியாக நான் மெதுவாகத்தான் மீண்டு வருகிறேன். ஆனால் உடல்ரீதியாக போட்டிக்கு தயாராக இருக்கிறேன். எனது வாழ்க்கையில் சமீபத்திய தினங்கள் மிகவும் கடினமான நாள்கள் என்பதில் சந்தேகமில்லை" – என்று தெரிவித்தார்.

# செய்திகள்

## டோனி இல்லை கோஹ்லியே அணித்தலைவர்




அடிலெய்டில் இன்று தொடங்கும் முதல் டெஸ்ட் ஆட்டத்திற்கு இந்திய அணியின் தலைவராக விராட் கோஹ்லி செயலாற்றுவார். டோனி நாளைய டெஸ்டில் இடம்பெறமாட்டார்.

நேற்று அணித்தலைவர்களுடன் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே கோஹ்லி இந்த முடிவைத் தெரிவித்தார்.

நான் முதல்டெஸ்ட் ஆட்டத்தில்தலைமைப்பொறுப்பு வகிக்கிறேன். டோனி அடுத்த சில நாட்களில் முழுமையான உடற்தகுதி பெறுவார் என்று எதிர்பார்க்கிறோம். இது எனக்கு மிகப்பெரிய தருணம். டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவது என்பது என் கனவு. ஆனால் தற்போது இந்திய அணியை தலைமையேற்று நடத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது. நிச்சயம் நான் சிறப்பாக செயற்படுவேன். வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்குமார் கணுக்கால் காயம் காரணமாக ஞாயிறன்று பயிற்சியில் விளையாடவில்லை. நாளை காலை இவரது உடற்தகுதி எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்து இவர் விளையாடுவது முடிவு செய்யப்படும். இந்திய அணி விளையாடும் அனைத்து இருதரப்பு டெஸ்ட் போட்டிகள் போலவே இந்தத் தொடரிலும் மூன்றாம் நடுவரின் மீளாய்வு முறை இல்லை. அது துல்லியமாக இருக்கும் போது அதைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால் சில வேளைகளில் மீளாய்விலும் துல்லியத்தன்மை இல்லாத காரணத்தினால் வழக்கம் போல நாம் அதனை ஏற்கவில்லை"– என்றார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் கிளாக்கிற்கு பதிலாக ஜோன்சன் கலந்துகொண்டிருந்தார். (ற–ரி)

## ஹியூஸின் நினைவுகளில் காதலி சிம்சன்



கடந்த சில நாள்களுக்கு முன், லட்சக்கணக்கான ரசிகர்களை அழ வைத்து, நிம்மதியாக நித்திரைக்கு சென்ற பில் ஹியூஸின் காதலி ஊடகங்களுடன் தன் வேதனையைப் பகிர்ந்துள் ளார். 'மீகின் சிம்சன்' என்ற பெயர் கொண்ட இந்த பெண், பில் ஹியூஸிடமிருந்து தனக்கு கிடைத்த குறுந்தகவல்களைப் பற்றி மிக முக்கியமான விடயங் களைப் பகிர்ந் துள்ளார். ஹியூஸ் மரணிக்க இரண்டு, மூன்று வாரங் களுக்கு முன்னர், தனக்கு அனுப்பிய குறுந்தக வல்களை, இவர் ஊடகங்களுக்குகாண்பித்துள்ளார். அதில் 'நான் உன்னைக்காதலிக்கின்றேன், நான் உன்னைத் தவற விடுகின்றேன்' என்று பொருள் தரும் ஆங்கில வார்த்தைகள் இரண்டு முறை குறிப்பிடப்பட்டிருந்தது.

சிம்சன் அங்கு மேலும் கூறுகையில்,

பில் ஹியூஸும் நானும் முதலில் சந்தித்துக் கொண்டது, சிட்னி நகரிலுள்ள ஒரு உணவகத்தில் தான். முதலில் தன்னை கிரிக்கட் வீரராக இல்லாமல், ஒரு வங்கியில் பணியாளரைப்போன்றே அறிமுகப்படுத்தினார். அன்றிலிருந்து இருவரும் மிகவும் நெருக்கமாக பழக ஆரம்பித்தோம். எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்கிருந்து செல்பி எடுப்பதை நாங்கள் வழக்கமாக்கொண்டிருந்தோம். தன் வாழ் நாள் முழுவதும் அப்படங்களை தன் அருகில் வைத்திருப்பேன் என்று ஹியூஸ் என்னிடம் அடிக்கடி கூறுவார். ஹியூஸின் இறுதிச்சடங்கின்போது, ஆஸ்திரேலிய கிரிக்கட் அணியின் தலைவரான, மைக்கல் கிளார்க் என்னிடம் வந்து, ஹியூஸ் உன்னை எவ்வளவு நேசித்தான் என்று உனக்குத் தெரியும், அது எங்களுக்கும் தெரியும் என்றுகூறினார். (ற–ரி)


**சாரதி தேவை**

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட A தர சாரதி அனுமதிப்பத்திரம் உடைய சாரதி தேவை.

T.P: 077 8314 201



**CHEMISTRY S.Vasu**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| Inorganic<br>Tue, Thus (6-7pm) | Physical<br>Sat, Sun (12-1pm) |
| organic<br>BI Tue, Thus (7-8pm)<br>BII Mon, Wed (6-7pm) | Thermo<br>Mon, Wed (5-6pm) |
| Paper Class | Sat, Sun (5-6.30pm) |

தொடர்புகளுக்கு: 077 996 1250, 077 469 6695

நூழ வகுப்புகளுக்கு தொடர்புகொள்ள: 075 039 1482

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்


### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 . 04 . 1944 | 09 . 11 . 2014 |

அமரர் செல்லத்துரை வீரபத்திரன்

ஓய்வுபெற்ற ஊழியர் உப்புக்கூட்டுத்தாபனம்

எமது குடும்பத்தலைவரின் மறைவு கேட்டு எமக்குப் பல்வேறு வழிகளில் உதவியும், அஞ்சலி செலுத்தியும், போசனமளித்தும் உதவியவர்களுக்கும் சகலவழிகளில் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.


யாழ். மண்ணில் உதயமாகிறது

வர்த்தகப்பிரிவிற்கேயான தனித்துவமான ஒரே ஒரு நிறுவனம்

**ECONOMICS HALL**

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

ஆரம்பம் 11.12.2014 - காலை 9.00

பொருளியல் உதயன்

கணக்கீடு AP.பகீரதன்

வணிகக்கல்வி யசோதரன்

உயர்தரமாக்குவதே எம் உயர்தரக்கற்கை



**FURNITURE MEGA SALE CENTER**

இன்று முதல் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலை குறைப்பு தள்ளுபடி



கண்ணாடி அலுமாரி ~~14500/=~~ 8000/=



Glass Dining Table Set ~~27000/=~~ 17500/=

பிளாஸ்ரிக் கதிரை ~~950/=~~ 650/=

Iron Board ~~1500/=~~ 1000/=

Kitchen Rack ~~2500/=~~ 1700/=

தளபாட அமோக மலிவு விற்பனை நிலையம்

204, Brown Road, Jaffna.

(பிறவுண் றோட், மிருகவைத்திய சாலை அருகில்)

T.P: 077 491 2805, 077 004 4651, 0777 286 069

வந்து பாருங்கள் வித்தியாசத்தை புரிவீர்கள்


### மரண அறிவித்தல்



**அந்தோணி தேவசகாயம் (குணம்)**

சில்லாலை பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் திருநகர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குணம் என்று அழைக்கப்படும் அந்தோணி தேவசகாயம் நேற்று (08.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி-ஆனாசி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற தோமஸ் மற்றும் பிரான்சிகா தம்பதியரின் மருமகனும், ஜெயசித்தாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற டோமினிக் மற்றும் யோசேப்பு, பிரான்சிஸ், மரியநாயகம், லோறன்ஸ், ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், ஜெறோம் (லண்டன்), ஜெயசீலன் ஜெஸ்ரின் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், லொசின்ரன், டொறிங்டன், கிளின்டன், கில்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சமிலாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.12.2014) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(54783) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.


**British College of Higher Studies**

வழங்கும் மிகக்குறைந்த கட்டணங்களில் மாணவர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நெறிகள்

அன்பார்ந்த மாணவர்களே,

உங்கள் ஒரு மாத பாடசாலை விடுமுறையினை மிகவும் பயனுள்ளதாக்க விரும்புகிறீர்களா? நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக ஒரு மாதத்தில் பேச விரும்புகின்றீர்களா? நவீன தொழில் நுட்ப போதனாமுறையின் கீழ் உங்களை மெருகேற்ற முனைகிறீர்களா? சரளமாக ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லையென்று ஏக்கத்துடன் இருக்கின்றீர்களா? கவலையை விடுங்கள் இப்பொன்னான விடுமுறை காலத்தில் உங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகளை நாம் வழங்கக் காத்திருக்கின்றோம். உங்களின் நேரத்திற்கேற்ப அனைத்து வகுப்புகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

**Spoken English with Grammar**

Duration : 80 Hrs

**Diploma in English**

Duration : 50 Hrs

வகுப்புகள் யாவும் நவீனமயப்படுத்தலின் கீழ் Speaking, Reading, Writing & Listening என வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவும் பிரத்தியேக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும். (Tutes, CD Lessons, Dictionaries, etc என்பன இலவசமாக வழங்கப்படும்)

Batches Starts on

Batch I : 10/12/2014 08.30am to 12.30pm Batch III :13/12/2014

Batch II : 12/12/2014 01.00pm to 05.00pm Batch IV :15/12/2014

BCHS

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)

Tel : 021-2224550

Hotlines: 0777585913,0777222422, 0714299935


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.